# வீரக் கண்ணகி

ம.பொ.சிவஞானம்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

மூன்றும் பதிப்பு : ஏப்ரல், 1964.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

விலை ரூபாய் மூன்று

Printed at Jeevan Press, Madras-5. (869)

# முன்னுரை

என் சிந்தையைக் கவர்ந்த செந்தமிழ் இலக்கிய நூல்கள் பல. அவற்றுள் தலையாயது சிலப்பதிகாரம். 1942 ஆகஸ்டுப் போரில் ஈடுபட்டு சிறையில் கிடந்த போதுதான் இந்தக் காப்பியத்தை நான் முதன் முதலாகப் பார்த்தேன்; படிக்கவும் தொடங்கினேன். ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போர்க்களத்திலிருந்த வண்ணம் படித்ததால், கண்ணகி தேவியின் அரசியல் புரட்சியே எனது கருத்தைக் கவர்ந்தது. பத்தினிக் கண்ணகி, கோவலன் வெட்டுண்ட கொலைக் களத்தில் நின்று, "**தீவேந்தன் பாற்சென்று என் கணவனைக் கொன்றதற்குக் காரணங் கேட்பேன்**" என்றும், "**காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்**" என்றும் புகன்ற வீர மொழிகள் எனது உள்ளத்தில் பசுமரத் தாணிபோற் பதிந்தன.

மற்றும், பாண்டியன் அரசவையில் நின்ற கண்ணகிதேவி, "**தேரா மன்னா!—நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!**" என்றெல்லாம் கூறிய ஆவேச மொழிகள் எனது உள்ளத்தைத் தொட்டன.

பாண்டிய வேந்தன், "யானோ அரசன், **யானே கள்வன்; கெடுக என் ஆயுள்**" எனக் கூறிப் பத்தினியின் துயரைப் பார்க்கச் சகியாதவனாய்க் கண் மூடினான். பின்னரும், "**ஒட்டேன், அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்**" என்று கண்ணகி புகன்ற வஞ்சினம் எனது நெஞ்சைக் கவர்ந்தது.

சிலப்பதிகாரத்தை ஒரு முறை கருத்துடன் படித்து முடித்ததுமே, "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியார் புகன்ற வாசகத்தின் உண்மைப் பொருளை உணர்ந்தேன். முத்தமிழ்க் காப்பியத்தின் சிறப்பை, இளங் கோவின் மாண்பை, பத்தினித் தெய்வத்தின் புரட்சியை, ஒரு வாசகத்தில் உணர்த்திய பாரதியின் புலமையை எண்ணி இறுமாந்தேன் ! 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!' என்று கவிமணி பாடியதையே நானும் பாடி மகிழ்ந்தேன். சிலப்பதி காரத்தில் என் நெஞ்சைக் கவர்ந்த மதுரைக் காண்டமே பாரதியாரின் நெஞ்சையும் அள்ளி யிருக்குமென்பதில் ஐயமுண்டோ !

சிலம்பின் பெருமையை உணர்ந்த மறுகணமே செந் தமிழ் நாட்டின் அன்றைய சிறுமையையும் நினைந்து வருந்தி னேன். அறியாத்தனத்தாலும், ஊழ்வினை வந்து உருத்திய தாலுமே கோவலனைக் கொன்றான் பாண்டியன். அந்த ஒரு பிழையையும் பொறுக்காமல் அரசை அழித்து மதுரையை யும் தீக்கிரையாக்கினாள் பத்தினிக் கண்ணகி. அந்த வீராங் கனையைப் பெற்றெடுத்த தமிழகமா வெள்ளையருக்கு அடி மைப்பட்டிருப்பது ! அதையும் கண்ணகி வழி வந்த தமிழ்ப் பெண்ணினமா சகித்துக் கொண்டிருப்பது—என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினேன். கண்ணகியின் வீரத்தைத் தமிழ்ப் பெண்ணினமும் பின்பற்றி வெள்ளை ஏகாதிபத்தி யத்தை வெளியேற்றப் போவதாகவும் கற்பனை செய்தேன்.

ஆம் : ஒரு முறை சிலப்பதிகாரத்தைப் படித்து முடித் ததும் எனது உள்ளம் அடைந்த நிலை இது.

சிறைப்பட்ட நெஞ்சமாதலால், வேறெதையும் சிந்திக் காது சிலப்பதிகாரத்திற்கே அடிமைப்பட்டது.

சிறையில் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தித் திரும்பத் திரும்ப சிலப்பதிகாரத்தைப் படித்தேன். 'மங்கல வாழ்த்தி' லிருந்து 'வரந்தரு காதை' வரை காப்பியம் முழுவதையும் படித்தேன். ஆசிரியரின் உதவியின்றி நானாகவே படித்தேன் ! எப்படியா ? எப்படியோ படித்தேன் !

நான் படித்த ஒவ்வொரு முறையும் வெவ்வேறு காட்சிகள், தமிழினத்தின் வருங்காலத்தை உருவாக்கும் புதுப் புதுக் கருத்துக்கள் என்னுள் தோன்றிக்கொண்டே இருந்தன. 'வேனிற் காதை'யில் வரும்,

**நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்**
**தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு**
**மாடமதுரையும் பீடா குறந்தையும்**
**கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்**
**அரைசு வீற்றிருநத உரைசால் சிறப்பின்**

என்ற வரிகளைப் படிப்பேன். அடுத்த வரிகளைப் படிக்க முடியாமல், ''மீண்டும் வடவேங்கடமும் தென்குமரியும் தமிழகத்தோடு இணைந்து உரைசால் சிறப்புடன் பழந் தமிழரசு அமையாதா?'' என்று எண்ணுவேன்.

இப்படி, எத்தனை எத்தனையோ எண்ணங்கள்! சிறையில் சிலப்பதிகாரத்தைப் படித்து நான் எண்ணிய எண்ணங்களின் முழு உருவந்தான் தமிழரசு இயக்கம்.

இன்று ஆங்கில ஆட்சி அகன்று தமிழ் மக்கள் அரசியல் விடுதலை அடைந்துவிட்டனர்; தமிழ் வழங்கும் நிலம் தனியரசு பெற்றுவிட்டது. இயற்கை அழகொழுகும் குமரிமுனை தமிழகத்தின் தெற்கெல்லையாக அடைந்துவிட்டது. வடிவேலன் குன்றமும் தமிழகத்திற்கு வரப்போவது நிச்சயம். ஆம்; சிலப்பதிகாரத்தைப் படித்து நான் வகுத்த செயல் திட்டங்களில் நிறைவேறியவை இவை. இன்னமும் நிறைவேற வேண்டியவை பல உண்டு.

இளங்கோவடிகள், தமிழ்ப் பேசும் மக்களை எந்தச் சக்தியாலும் பிரிக்கவோ பிளக்கவோ முடியாத ஒரே இனமாகச் செய்ய நினைத்தார். மாற்றானொருவன், தமிழரிலே ஒருவனைப் பழித்தாலும் தமிழ் இனத்தையே பழித்ததாக எண்ணுமாறு கற்றுக்கொடுத்தார். அத்துடன் அமையாது, தெய்வம் தெளிந்து, தெளிந்தோரைப் போற்றி வாழவேண்டுமென்றும் போதித்தார். இந்த நெறிகளெல்லாம் தமிழகம்

முழுவதும் பரவ **சிலப்பதிகார இயக்கம்** தேவைப்படுகின்றது! அந்த இயக்கம் ஏற்கெனவே துவங்கி விட்டது.

அதன் எதிரொலியே இந்நூல்! சிலப்பதிகாரத்தைப் பற்றித் தமிழரசுக் கழக ஏடுகளில் அவ்வப்போது நான் எழுதி வைத்த கட்டுரைகளைத் தொகுத்து இந்நூல் வடிவில் தந்துள்ளனர் இன்ப நிலையத்தார்.

எனது நூற்களை வெளியிடுவதில் 'இன்ப நிலையம்' அதிபர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தனி ஆர்வமுடையவர். 'வீரக் கண்ணகி' என்ற பெயரில் முறையாக எழுதப்பட்ட ஒரு நூலை வெளியிட வேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்பே அவர் என்னைத் தூண்டினர். ஆனல், அரசியல் புயல் காற்றில் சிக்கியுள்ள என்னல் அவரது விருப்பத்தை நிறைவேற்ற அப்போது முடியவில்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு முன்னர் நிச்சயித்த பெயரிலேயே இந்த நூலைக்கொண்டு வருவதில் அன்பர் சுவாமிநாதன் வெற்றி பெற்றிருக்கிறர்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளி வருவதால் 'கூறியது கூறல்' என்ற குற்றம் வாசகர்களின் கண்களுக்குப் படலாம். அவற்றைப் பொறுத்தருளக் கோருகிறேன்.

கோவை பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. ம. ரா. போ. குருசாமி அவர்கள், இந்நூலை வெளியிடுவதில் எனக்குப் பெருந்துணையாக இருந்ததோடு. பிழை திருத்தும் பொறுப்பையும் மேற்கொண்டு உதவி புரிந்தார். அவருக்கு என் நன்றி உரித்தாகுக.

சென்னை
25-4-'58

**ம. பொ. சிவஞானம்**

# பொருளடக்கம்


இளங்கோவின் உள்ளம் ... 9

சிலப்பதிகார வரலாறு ... 15

காப்பியத்தின் கருப்பொருள் ... 16

வீரக் கண்ணகி ... 21

கண்ணகி வழிபாடு ... 34

இலங்கையிலும் கண்ணகி! ... 47

சிலம்பு காட்டும் செந்நெறி ... 63

குறளும் சிலம்பும் ... 89

மேகலையும் சிலம்பும் ... 98

இராமாயணமும் சிலம்பும் ... 106

இளங்கோவும் பாரதியும் ... 113

நீதி மன்னன் நெடுஞ்செழியன் ... 122

சிலப்பதிகார காலத்துச் சோழ மன்னன் யார்? ... 117

மாதவியின் கடிதம் ... 123

கோவலன் பிரிவுக்குக் கண்ணகி காரணமா? ... 130

இளங்கோவின் கடவுட் கொள்கை ... 139

அறமா, அரச பதவியா? ... 146

காவிரிப்பூம்பட்டினம் ... 152

இரு ஐயப்பாடுகள் ... 158

## ம. பொ. சி. எழுதிய நூல்கள்

**இலக்கியம்**

| | | | |
|---|---|---|---|
| வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு | ... | 6 | 00 |
| தமிழும் கலப்படமும் | ... | 1 | 00 |
| வள்ளுவர் வகுத்த வழி | ... | 0 | 50 |
| வீரக் கண்ணகி | ... | 2 | 50 |
| இலக்கியச் செல்வம் | ... | 2 | 00 |
| சிலப்பதிகாரமும் தமிழரும் | ... | 0 | 50 |
| எங்கள் கவி பாரதி | ... | 0 | 50 |

**கட்டுரை**

| | | | |
|---|---|---|---|
| காந்தியடிகளும் ஆங்கிலமும் | ... | 1 | 50 |
| பாரதியும் ஆங்கிலமும் | ... | 1 | 50 |
| தமிழா, ஆங்கிலமா ? | ... | 2 | 50 |
| தமிழும் கலப்படமும் | ... | 1 | 50 |
| பாரதி கண்ட ஒருமைப்பாடு | ... | 2 | 00 |
| கட்டுரைக் களஞ்சியம் | ... | 2 | 50 |
| இன்பத் தமிழகம் | ... | 1 | 75 |
| முரசு முழங்குகிறது ! | ... | 1 | 25 |
| வானொலியில் ம. பொ. சி. | ... | 1 | 50 |
| இலக்கியத்தின் எதிரிகள் ! | ... | 0 | 50 |
| ம. பொ. சி. கூறுகிறார் ! | ... | 1 | 00 |

**அரசியல்**

| | | | |
|---|---|---|---|
| சுயாட்சியா, பிரிவினையா ? | ... | 1 | 00 |
| பிரிவினை வரலாறு | ... | 0 | 50 |
| தமிழரசா, திராவிடஸ்தானா ? | ... | 0 | 50 |

**வரலாறு**

| | | | |
|---|---|---|---|
| சுதந்தரவீரன் கட்டபொம்மன் | ... | 1 | 50 |
| வீரபாண்டியக் கட்டபொம்மன் | ... | 1 | 75 |
| கயத்தாற்றில் கட்டபொம்மன் | ... | 0 | 50 |
| கப்பலோட்டிய தமிழன் | ... | 1 | 75 |
| தமிழர் கண்ட காந்தி | ... | 0 | 50 |
| சுதந்தரப் போரில் தமிழகம் | ... | 0 | 50 |

**தொகுப்பு நூல்**

| | | | |
|---|---|---|---|
| தமிழகம் தந்த ம. பொ. சி. | ... | 2 | 00 |
| தலைவர் ம. பொ. சி. | ... | 2 | 00 |
| ம. பொ. சி. வாழ்க்கை வரலாறு | ... | 1 | 00 |

# வீரக் கண்ணகி



# இளங்கோவின் உள்ளம்

## துறவும் விளைவும்

சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள் தமிழ் இனத்தவருக்குப் புதுநெறி போதித்த புரட்சிக் கவி ஆவார். அவரது வரலாறும், அவர் இயற்றிய காப்பியத்தில் வரும் கருத்துக்களும் இதை வலியுறுத்தும்.

கவிஞர் இளங்கோ, தமையன் செங்குட்டுவனோடு—தந்தை சேரலாதனின் அரச சபையில் அமர்ந்திருந்தபோது, "சேர நாட்டை ஆளப் பிறந்தவன் செங்குட்டுவன் அல்லன்; இளங்கோதான்" என்று நிமித்திகன் ஒருவன் அரசனிடம் சொன்னான். அதைக் கேட்ட இளங்கோ, "மூத்தவன் இருக்க இளையவன் ஆள்வது முறையன்று; ஆளப்பிறந்தவன் நானல்லன்; என் அண்ணனே. சோதிடன் சொன்ன விதியை என் மதியால் வெல்வேன்" என்று கூறி, அப்போதே 'துறவி'யானார்.

இளங்கோ எதைத் துறந்தார்? அரச பதவியையும் அரண்மனை வாழ்வையும்! இது எத்தகைய புரட்சிகரமான தியாகம்! இளங்கோ புவியரசைத் துறந்தார்; ஆனால், கவியரசராய் விளங்கினர். செம்மல் செங்குட்டுவனைவிடப் புகழுடையவர் கவிஞர் இளங்கோவே. செங்குட்டுவன், ஆட்சியின் துணைகொண்டு தனது பெயரை நிலைநாட்டினான். இளங்கோவடிகளோ, தமது புலமையின் திறத்தால் தமிழ் இனத்தின் புகழை நிலைநாட்டினர். என்றும் அழியாத கலைச் செல்வத்தைக் கொடுத்து, அதற்கு நம் இதயத்தை இருப்பிடமாக அமைத்துவிட்ட பெருமை இளங்கோவைச் சாரும்.

## துவக்கத்தில் கமழும் தேசியம்

இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தை எப்படித் துவக்குகின்றார் பாருங்கள் :

*திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!*
*கொங்கு அலர் தார்ச்சென்னி குளிர் வெண்குடை*
*போன்றுஇவ்*
*அங்கண் உலகு அளித்தலான்.*

*ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!*
*காவிரி நாடன் திகிரிபோல் பொற் கோட்டு*
*மேருவலம் திரிதலான்.*

*மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!*
*நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்*
*மேல் நின்று தான் சுரத்தலான்.*

என்று, திங்கள்—ஞாயிறு—மழை ஆகிய இயற்கைச் சக்திகளைப் போற்றுகின்றார். அவற்றிலே இறைவனது

அருளைக் காண்கின்றார். திங்களை, சோழ மன்னனின் வெண்குடைக்கும்; ஞாயிற்றினை, அவனது ஆணைச் சக்கரத்திற்கும் உவமை காட்டுவதால், இயற்கை—இறைவன் — அரசன் ஆகிய மூன்றினையும் சேர்த்து வணக்கமும் வாழ்த்தும் கூறுகின்றார். இது ஒரு புதுமுறை.

திங்களின் தண்ணொளியும் ஞாயிற்றின் செஞ்சுடரும் இல்லாவிடில், உயிர்கள் வாழ இயலா. மழை இல்லாவிடினும் அப்படியே! "வானம் வறக்குமேல் வானோர்க்கும் சிறப்பொடு பூசனை செல்லாது'' என்பதன்றோ வள்ளுவர் வாக்கு! ஆகவே, மக்கள் வாழவும் மண் தழைக்கவும் காரணமான இயற்கைச் சக்தி களுக்குத் தலைவணங்கி நன்றி செலுத்துவதே தமது தலையாய கடமை என்று இளங்கோ எண்ணினார் போலும்!

இனி, நாட்டையும் வணங்குகிறார்:

*பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்*
*வீங்கு நீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு*
*ஓங்கிப் பரந்து ஒழுகலான்.*

"போற்றி போற்றி! பூம்புகார் போற்றி! பொன்னாடு போற்றி!'' என்று புகாரைப் போற்றுவதன் மூலம் தமிழ் நாட்டையே போற்றுகிறார். இங்கும் அரச வணக்கம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. பூம்புகாரில் வாழும் மக்களின் பெருமையைக் கூறுங்கால்,

*பொதியி லாயினும் இமய மாயினும்*
*பதியெழு வறியாப் பழங்குடி......*

"இமயமலையும் பொதிய மலையும் எப்படி இடம் பெயர்வதில்லையோ, அப்படியே புகார் நகரத்து மக்க

ளும் அந் நகரத்தை விட்டு நீங்காது நிலைபெற்று வாழ்பவராவர்'' என்கின்றார் இளங்கோ.

இதை ஒரு தேசியப் பாடலென்றே சொல்லலாம். 'தேசிய கீதம்' என்பது என்ன? மன்னனின் செங்கோற் சிறப்பையும், தேசத்தின் வளத்தையும், தேசமக்களின் மேன்மையையும் போற்றுவதன்றோ!

## மண்ணும் மன்னனும்

பொதுவாக, அடிமை நாட்டில் ஆளுவோரைத் தாக்கிப் பாடுவதுதான் தேசிய கீதமாக எண்ணப்படுகின்றது. ஆனால், இளங்கோவடிகள் காலத்தில் தமிழகம் தன்னாட்சி செலுத்தியது. குறை களைந்து முறை செய்து காத்ததால், மன்னனை 'இறை' என வாழ்த்தி வணங்கினர் மக்கள். எனவே, நாட்டுப் பற்றும் அரச பக்தியும் பிரிக்க முடியாதவாறு பிணைந்து இருந்தன. அதனால், இளங்கோவடிகள் மண்ணைப் போற்றுவதோடு நில்லாமல், மன்னனையும் போற்றுகின்றார்.

இதே போன்று, மங்கல விழாவிலும் மற்றச் சடங்குகளிலும், நாட்டையும் நாட்டை ஆளும் மன்னனையும் போற்றும் வழக்கம் குடிமக்களிடையேயும் இருந்து வந்ததற்குச் சிலப்பதிகாரத்தில் சான்றுகள் உள.

கண்ணகி — கோவலன் திருமணத்திற்குப் பின் அவர்களைப் பள்ளியறை சேர்க்கையில் இளம் பெண்கள் சிலர் அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வாழ்த்துக் கூறுகின்றனர். அப்போது,

*இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை*
*உப்பாலைப் பொற்கோட்டு உழையதா, எப்பாலும்*
*செருமிகு சினவேல் செம்பியன்*
*ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே.*

என்று வாழ்த்துகின்றனர். "எங்கள் சோழ மன்னன் இமயத்திற்கு இப்பால் பொறித்த புலிக்கொடியானது அப்பாலுள்ள பொன்மலையாகிய மேரு மலையிலும் விளங்குவதாக! எல்லாத் திசைகளிலும் போரில் வெற்றி பெற்ற எங்கள் செம்பியன் தனது ஆணையை ஒழுங்காகச் செலுத்துவோனாக'' என்று, தங்கள் மன்னன் இமயத்தில் புலிக்கொடி நட்ட பெருமையைக் கூறி, அக்கொடி மேரு மலையையும் எட்டிப்பிடிக்க வேண்டுமென்ற தங்கள் எண்ணத்தையும் வெளிப் படுத்தி, 'திக்கெட்டும் வெற்றி பெற்ற சோழ மன்னன் தீதின்றி நெடுங்காலம் வாழ்வோனாக!' என்று வாழ்த்து கின்றார்கள்.

'கானல் வரி'யிலும் இதே காட்சியைக் காண் கிறோம். கோவலனும் மாதவியும் மாறி மாறிப் பாடுங் கால், சோழ மன்னன் பெருமையையும், காவிரியாற் றின் வளத்தையும் வாழ்த்திய பின்னரே கானல் வரிப் பாடல்கள் பாடுகின்றனர்.

## பெண்ணின் பெருமை

இளங்கோவடிகள், தமது காப்பியம் முழுவதிலும் பெண்ணின் பெருமையையே பேசுகின்றார். காப்பியத் தின் பெயராகிய **'சிலப்பதிகாரம்'** என்ற சொல், பெண் ணின் காலணியாகிய சிலம்பையே குறிக்கின்றது. சிலப்பதிகாரக் கதையில் கண்ணகியே முக்கியப் பாத்திரமாக இருக்கின்றாள். கண்ணகி மூலம் பெண் ணினத்தின் வரலாற்றிலே ஒரு புரட்சியைச் செய்கிறார் இளங்கோவடிகள். புரட்சிக்கு ஆடவர்களே தகுதி யுடையவர் என்று எல்லோரும் எழுதுவர். ஆனால், இளங்கோவடிகள், "தாங்க முடியாத கொடுங் கோன்மை தாண்டவமாடினால், ஆக்கும் பண்புபடைத்த

பெண்களும் பழி வாங்கும் படையில் முன்னணியில் நிற்பர்; முரசை முழக்குவர்; அரசை அழிப்பர்' என்று அறிவிக்கிறார். தாய்மைக் குணத்தையே பெண்மைக்கு உரிமையாக்கினர் பெரியோர். ஆனால், அநீதி அரசோச்சினால், அதை அழிப்பது பெண்களின் தலையாய கடமை என்பதே சிலப்பதிகாரம் காட்டும் அரசியல் நெறி. அல்வழிப்பட்ட அரசில், தாய்மை உணர்வு கூட அநீதியால் நிலைகுலைக்கப்பட்டு ஆண்மையாகவும், அழிப்புச் சக்தியாகவும் மாறிவிடும் என்ற புது நெறியை—வேறு யாரும் தீட்டாத புரட்சிச் சித்திரத்தைத் தீட்டினார் இளங்கோவடிகள். இது இலக்கிய உலகத்தில் இளங்கோ செய்த பெரிய புரட்சியாகும்.

# சிலப்பதிகார வரலாறு

சிலப்பதிகாரம், ஐம்பெரும் தமிழ்க் காப்பியங்களுள் ஒன்று. இயற்றப்பட்ட காலம் கி. பி. இரண்டாம் நூற்ருண்டென்பர் ஆராய்ச்சியாளர். இயல்—இசை—நாடகம் ஆகிய முத்தமிழும் கலந்திருப்பதால், அதனை நாடகக் காப்பியமென்று கூறுவர். காப்பியத்தின் துவக்கத்திலுள்ள பதிகமும் இந்தக் கருத்துக்குத் துணை புரிகின்றது. ஆம், ஒருவருக்கு மற்ருெருவர் கதை சொல்லும் நாடகப் போக்கில், காப்பியம் முழுவதையும் சுருங்கக் காட்டும் முதற் காட்சியாக அமைந்திருக்கின்றது பதிகம்.

இளங்கோவடிகளும் புலவர் சாத்தனரும் ஒருங்கிருந்த போது, குன்றக் குறவர் பலர் வந்து, கண்ணகி தேவியார் செங்குன்றம் வந்ததையும், பின்னர்த் தங்கள் கட்புலன் காண அவள் விட்புலஞ் சென்றதையும் வியப்போடு இளங்கோவிடம் கூறுகின்றனர். அது கேட்ட சாத்தனர், 'யான் அறிகுவன் அவள் வரலாறு' எனப் புகன்று, சிலப்பதிகாரக் கதையைச் சுருக்கமாகக் கூறினர். பின்னர் அதை விரிவாக எழுதுமாறு சாத்தனரை இளங்கோவடிகள் வேண்ட, "முடியுடை வேந்தர் மூவர்க்கும் உரியதாகலின், மூவேந்தரில் சேர வேந்தரின் இளவலும் செந்தமிழ்ப் புலவருமாகிய தாங்களே இயற்றுங்கள்'' எனச் சாத்தனர் அருளினர். அதன்படி இளங்கோ இயற்றிய கண்ணகி வரலாறு தான் சிலப்பதிகாரக் காப்பியம்.

# காப்பியத்தின் கருப்பொருள்

**எ**ந்தக் காப்பியமாயினும், ஏதாவதொரு செந்நெறியை மக்களுக்குப் போதிப்பதற்காகவே அது இயற்றப்பட்டிருக்கும். சிலப்பதிகாரமும் ஒரு செந்நெறியைக் குறிக்கோளாகக் கொண்டே இயற்றப்பட்ருக்கிற தென்பதை ஆழ்ந்து படிப்போர் அறிந்து கொள்ள முடியும்.

அந்தச் செந்நெறி யாது?

அதைப்பற்றி ஆராயுமுன், சிலப்பதிகாரக் காண்டங்களின் அமைப்பை விளக்கவேண்டியது அவசியமாகும்.

## கருப்பொருளின் இருப்பிடம்

சிலப்பதிகாரம், மூன்று காண்டங்களாக அமைந்துள்ளது. அவை, முறையே புகார்க் காண்டம்—மதுரைக் காண்டம்—வஞ்சிக் காண்டம் என்பனவாம். அவற்றுள், 'சிலப்பதிகாரம்' என்ற பெயருக்கேற்பச் சிலம்பைக் காரணமாகக் கொண்டு கதை நிகழுவது மதுரைக் காண்டத்தில்தான். அந்தக் காண்டத்தின் இறுதியிலேயே கதை முடிந்து விடுகிறது.

ஆகவே, சிலப்பதிகாரம் புகட்டும் செந் நெறியைக் கதை நிகழும் மதுரைக் காண்டத்திலேயே ஆராய்ந்து அறிதல் வேண்டும். சிலப்பதிகாரக் காண்டங்கள் மூன்றிலும் காவியத் தலைவியாகிய கண்ணகிக்குள்ள தொடர்பைக் கவனித்தாலும் இந்த உண்மை விளங்கும்.

புகார்க் காண்டத்தில், நான்கு இடங்களில்தான் கண்ணகி வாய் திறந்து பேசுகின்றாள். 'கனாத்திறம் உரைத்த காதை'யில்,

*கடுக்குமென் நெஞ்சம் ! கனவினால் என்கை*
*பிடித்தனன், போய் ஓர் பெரும்பதியுள் பட்டோம் ;*
*பட்ட பதியில் படாதது ஒரு வார்த்தை*
*இட்டனர் ஊரார் இடுதேளிட் டென்றன்மேல்*
*கோவலற்கு உற்றதோர் தீங்கென்று; அதுகேட்டுக்*
*காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்? காவலனோடு*
*ஊர்க்குற்ற தீங்குமொன்று உண்டால், உரையாடேன்;*
*தீக்குற்றம் போலும், செறிதொடீஇ ! தீக்குற்றம்*
*உற்றேனோடு, உற்ற உறுவனோடு, யான்உற்ற*
*நல்திறம் கேட்கின் நகையாகும்......*

என்ற வரிகளில், தான் கண்ட தீயகனவைத் தனது தோழியான தேவந்தியிடம் கூறும் போதுதான், நாம் முதன் முதலாகக் கண்ணகியின் குரலைக் கேட்கிறோம்.

இரண்டாவதாக, 'காமன் கோயில் சென்று வழிபாடு நிகழ்த்தினால் நின் கணவனை அடைவாய்' என்று தேவந்தியிடம் கூறியபோது,

'*அச்செயல், பீடு அன்று*'

"எம் குலத்துக்குப் பெருமை தருவதன்று'' எனக் கூறுகின்றாள்.

மூன்றாவதாக, மீண்டும் தன்னையடைந்த கோவலன், "பரத்தையின்பால் கைப்பொருள் அனைத்தையும்

தொலேத்து வறியனுனேன்'' எனக் கூறி வருந்திய பொழுது,

''சிலம்புள கொண்ம்''

என்கின்ருள்.

நான்காவதாக, 'நாடுகாண் காதை'யில், வழிநடை தொடங்கிய கண்ணகி, கோவலனே நோக்கி,

'மதுரை மூதூர் யாது?'

''மதுரை நகர் எது ?'' எனக் கேட்கின்ருள்.

ஆம்; புகார்க் காண்டத்தில் கண்ணகியின் பேச் செல்லாம், பதின்மூன்றே வரிகளில் முடிந்து விடு கிறது. அந்த வரிகளிலும் கண்ணகி தெரிவிக்கும் கருத்துக்கள், பின்ஞல் நிகழவிருக்கும் மதுரைப் புரட் சிக்குத் தோற்றுவாயாக அமைகின்றனவே யன்றி புகார்க் காண்டத்திற்கு நேர் தொடர்புடையன அல்ல.

வஞ்சிக் காண்டத்திலும், மானிட யாக்கையோடு பொருந்திய கண்ணகி கூறிய வார்த்தைகள் சிலவே யாம்.

*மணமதுரையோடு அரசுகேடுற வல்வினே வந்து*
*உருத்தகாலே*
*கணவனே அங்கு இழந்துபோந்த கடுவினேயேன் யான்...*

என்ற இரண்டே வரிகளில் குன்றக் குறவருக்கு, மதுரைப் புரட்சியையும், தன் மனத் துயரையும் கூறிய தன்றி வேறில்லே. இதன்படி பார்த்தால், கண்ணகி யின் பேச்செல்லாம்—அவ் வீராங்கனே நிகழ்த்தும் புரட்சியெல்லாம் மதுரைக் காண்டத்தில்தான் அடங்கி யிருக்கின்றன என்பது புலனுகும்.

ஆகவே, மதுரைக் காண்டத்தைக் கதையாகவும், புகார்க் காண்டத்தை அக் கதையின் முன்னுரையாக

வும், வஞ்சிக் காண்டத்தை முடிவுரையாகவுமே கொள்ள வேண்டும்.

## அறக் கற்பா? அரசியல் புரட்சியா?

'சிலப்பதிகார ஆராய்ச்சி' என்ற பெயரால் வெளி வந்த நூல்கள் பலப்பல. அவையனைத்தும், சிலப்பதி காரம், பெண் கற்பின் பெருமை பேசும் நூல் என்றே கூறின. கண்ணகிக்குக் கதிரவன் சாட்சி கூறுவதும், வெட்டுண்ட கோவலன் கண்ணகி தொட்ட அளவி லேயே உயிர் பெற்றெழுவதும், அழற் கடவுள் கண்ணகிமுன் தோன்றிஏவல் கேட்பதும், மதுரைத் தெய்வம் கண்ணகிக்குக் காட்சியளித்து அவளது முற்பிறப்பின் வரலாறு உரைப்பதும், தேவர்களும் கோவலனும் இந்திர விமானத்தில் வந்து கண்ணகியை வானுலகம் அழைத்துச் செல்வதும் பெண் கற்பின் பெருமைக்குச் சான்றுகளாகக் காட்டப்பட்டன.

மேற்சொன்ன வெல்லாம், மதுரைக் காண்டத்தில் வரும் சம்பவங்களே என்றாலும், அவை கதையை அழகு படுத்தும் கற்பனைகளே யன்றி, உண்மை நிகழ்ச்சிக ளல்ல. மக்களின் ஆற்றலுக்கு அப்பாற் பட்ட அற்புதங்களைக் கற்பனையாக வன்றி வரலா றாகவோ, வாழ்க்கை நெறியாகவோ கொள்வது அறிவுடைமையன்று.

மற்றும், பெண்ணுலகிற்கு அறக்கற்பின் பெரு மையை உணர்த்தவே இளங்கோவடிகள் சிலப்பதிகா ரத்தை இயற்றினார் எனக் கூறுவோரும் உண்டு. அவர் தம் கூற்றை மறுக்கச் சில சான்றுகளைக் கூறுவோம்:

சிலப்பதிகாரத்தில் கண்ணகி தேவியை, மூன்று காண்டங்களிலும் மூன்று பண்பினளாக நமக்கு அறிமுகப் படுத்துகின்றார் இளங்கோவடிகள். புகார்க் காண்டத்தில் இல்வாழ்க்கை நடத்தும் அறக் கற்பின

ளாகவும், மதுரைக் காண்டத்தில் அரசை அழிக்கும் மறக்கற்பின ளாகவும், வஞ்சிக் காண்டத்தில் வரங் கொடுக்கும் தெய்வக் கற்பின ளாகவும் கண்ணகி காட்சியளிக்கிருள்.

அறக் கற்பை வலியுறுத்தவே சிலப்பதிகாரம் எழுதப் பட்டதென்ருல், கதை புகார்க் காண்டத்தி லேயே நிகழ வேண்டும். அப்படியன்றிக் கதை முழு வதும் மதுரைக் காண்டத்திலேயே அமைந்து கிடப்ப தால், அதில் கண்ணகி நிகழ்த்தும் மறக் கற்பை— அரசியல் புரட்சியைப் போதிப்பதே இளங்கோவடி களின் எண்ணமாதல் வேண்டும்.

புகார்க் காண்டத் துவக்கத்தில், கண்ணகி கணவ ஞேடு கூடி இல்வாழ்க்கை நடத்துகின்ருள். பிறகு கணவனைப் பிரிய நேர்ந்தபோது சகிப்புத் தன்மையை மேற்கொண்டு அறவாழ்வு நடத்துகின்ருள். இந்த அறக் கற்பு வழிப்பட்ட வாழ்க்கை, இளங்கோ காலத்துத் தமிழ்ப் பெண்களுக்குப் புது நெறியன்று ; தொன்றுதொட்டுத் தொடர்ந்துவந்த பண்பாடாகும். ஆகவே, மதுரைக் காண்டத்தில் வரும் மறக் கற்புடைய கண்ணகியே மண்ணக மாந்தருக்கு வழி காட்டி என்பதில் ஐயமில்லை.

சிலப்பதிகாரத்தை அரசியல் கண்கொண்டு ஆராய்வதன் மூலமே அதன் கருப் பொருளைக் காண முடியும். கதை நிகழும் மதுரைக் காண்டத்தை ஆராய்ந்து கருப்பொருள் காண்போம்.

குற்றமற்ற கோவலனைக் கள்வனென்று பொற் கொல்லன் சொன்னதை நம்பி, பாண்டியன் நெடுஞ் செழியன் அவனைக் கொலைக்குள்ளாக்குகிருன். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி, நேரே கொலைக் களம் சென்று, அங்கே தன் கணவன் தலை வேறு உடல் வேருக வெட்டுண்டு, இரத்தத்தில்

மூழ்கிக் கிடப்பது கண்டு ஆத்திரம் கொள்கிருள்; அழுது துடிக்கிருள். பின்னர், இந்தக் கொலைக்குக் காரணமான அரசனை அணுகி அவனுடன் சொற்போர் புரிந்து அவனது செங்கோல் கொடுங்கோலானதை மெய்ப்பிக்கின்ருள். கண்ணகியால் தனது தவறை யுணர்ந்த அரசன், தன் தவறுக்குக் கழுவாயாக அக் கணமே உயிர் விடுகின்ருன்; அவனது அரசும் அழிகின்றது; கடுங்கோபம் கொண்ட கண்ணகி கொடுங்கோலாட்சிக்கு உட்பட்டமைக்காக மதுரை யைத் தீக்கிரையாக்குகின்ருள். பின்னர், மதுரை நகர் நீங்கிப் பதினுன்கு நாட்கள் வழிநடந்து சேர நாட டைந்து அங்குச் செங்குன்றத்தின் மீதேறிய பின்னர், கண்ணகியின் மண்ணுலக வாழ்வு முடிகின்றது.

இதுவே சிலப்பதிகாரக் கதையின்—மதுரைக் காண்டத்தின்—சுருக்கம்.

> இந்தக் கதையிலிருந்து மக்கள் அறியக் கிடப்பது என்னவென்ருல், அநீதி வாய்ந்த அரசை எதிர்த்துப் போரிட்டு அழித்து முடிக் கும் கண்ணகியின் புரட்சிச் செயலேயாகும்.

சிலப்பதிகாரக் காலம் வரை அரசன் தவறிழைத் தால் அவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் உரிமை குடிமக்களுக்கு உண்டு என்ற எண்ணம் தமிழ் மக்க ளுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டி வேந்தன் பகை மன்னரை எதிர்க்கப் புறப் பட்டகாலை, தான் போரில் தோல்வியுற்ருல்,

> என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணுது
> கொடியன் எம்இறை எனக் கண்ணீர் பரப்பிக்
> குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக !

எனக் கூறியதாலும்,

*இறைகடியன் என்றுரைக்கும் இன்னுச்சொல் வேந்தன்*
*உரைகடுகி ஒல்லை கெடும்*

என்ற குறட்பாவாலும், மன்னன் கொடுங்கோலனுயின் மக்கள் பழி தூற்றுவது மரபு என்பதை மட்டும் அறிகிறோம். ஆனுல், மக்கள் சக்தி கொடுங்கோலை எதிர்த்துப் போரிட்ட செய்தியைச் சிலப்பதிகாரம் தான் முதன் முதலாக நமக்கு அறிவிக்கின்றது.

சிலப்பதிகாரம், அரசியல் புரட்சி நெறியைப் புகட்டவே எழுதப்பட்ட தென்பதற்கு வேறு சில சான்றுகளும் உள.

கண்ணகியின் அறக் கற்பை—அரசியல் புரட்சியை—அறிந்த சேர மன்னன் செங்குட்டுவன், தனது அருகிலிருந்த அரசியை நோக்கி, "பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் நீத்த அக்கணமே தானும் உயிர் விட்ட **கோப்பெருந்தேவி;** தன் கணவனை இழந்த சீற்றத்தோடு நம் நாடடைந்த **கண்ணகி தேவி**— ஆகிய இருவரில், என் அரசி வியத்தற்குரியவள் யார் ?" என்று கேட்கின்றுன். அதற்கு அரசமாதேவி,

*காதலன் துன்பம் காணுது கழிந்த*
*மாதரோ பெருந்திரு உறுக வானகத்து*
*அத்திறம் நிற்க, நம் அகல்நாடு அடைந்த இப்*
*பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்.........*

"கணவன் உயிர் நீத்த அக்கணமே தானும் உயிர் விட்ட பாண்டிமாதேவியின் அறக்கற்பு தமிழ்ப் பெண்களின் மரபு வழிப்பட்ட மாண்பாகும். ஆதலால், அப் பெருமாட்டி தனக்குரிய பேரின்ப வீட்டைப் பெறுவாள். ஆனுல், பிறந்த நாட்டை விட்டு நம் பெரு நாடடைந்த பத்தினிப் பெண்ணும் கண்ணகி தேவியின் புரட்சி, பெண்ணினத்திற்கே வழி காட்டி. அவளையே நாம் வழிபடவேண்டும்" என்கிருள்.

பாண்டிமாதேவியின் அறக்கற்பினும், கண்ணகி தேவியின் அரசியல் புரட்சியே சேரமாதேவியின் சிந்தையைக் கவர்ந்தது. ஆகவே, வீரக் கண்ணகியின் புரட்சி வரலாற்றைப் பிற்கால மக்களும் அறிந்து கொள்ள அவ்வீராங்கனைக்கு வழிபாடு நிகழ்த்த வகை செய்யுமாறு அரசனுக்கு அறிவிக்கிருள்.

மேலும், சிலப்பதிகாரப் பதிகத்துள்ளும்,

அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் ருவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்

என்ற வரிகளில், "அரசன் செங்கோல் நெறி தவறின், அறக்கடவுள், மக்கள் வடிவில் தோன்றித் தண்டிக்கும் என்பதும்; மறக் கற்புடைய மங்கையரைச் சாதாரண மக்களேயன்றி, மன்னரும் போற்றுவர் என்பதும் சிலப்பதிகாரம் போதிக்கும் செந்நெறிகள்" என்கின்ருர் பதிக ஆசிரியர்.

நாம் மேலே தந்த ஆராய்ச்சி முடிவுகளும் பதிகத்தின் கருத்துக்குப் பொருந்துவனவா யிருக்கின்றன.

'வீரக் கண்ணகியின் புரட்சிச் செயல், மண்ணக மாதர்களுக்கு வழிகாட்டி' என்று கூறும்போது, மதுரையை எரித்த செயலை நாம் சான்ருகக் கொள்ள வில்லை. கோவலன் கொலையுண்ட பின்னர், அறக் கற்பைக் கைவிட்டு மறக் கற்பை மேற்கொண்டு பாண்டியன் உயிரிழக்கும்வரை கண்ணகி நிகழ்த்தும் போராட்டத்தைத்தான் குறிப்பிடுகின்ருேம்.

சிலப்பதிகாரக் கண்ணகி காட்டிய இந்தப் புது நெறியை—புரட்சி வழியைத்தான் பிற்காலத்தில் உலக நாடுகள் பலவற்றிலும் மக்கள், சிறப்பாகப் பெண்கள் பின்பற்றினர் என்பதை வரலாறு நமக்கு அறிவிக்கின்றது. மக்களின் நன்மைக்கு மாருக நடந்து

கொள்ளும் அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வதை, இக்கால மக்கள் தங்கள் உயிரினும் மேம்பட்டதொரு உரிமையாகக் கருதுகின்றனர். அரசியல் புரட்சி என்னும்போது, 'அறப் புரட்சியா? ஆயுதப் புரட்சியா?' என்ற கேள்வி எழலாம். இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வருவது அந்தந்த நாட்டின், மக்கள் மனப்பண்பு—காலத்தின் சூழ்நிலை ஆகியவற்றைப் பொருத்ததாகும். ஆனால், அல்வழிப்பட்ட அரசை எதிர்த்துப் போரிட்டு நல்வழித் திருத்தும் உரிமை மக்களுக்கு—குறிப்பாகப் பெண்களுக்கு உண்டு என்பதை இந்த இருபதாம் நூற்றாண்டில் எவரும் மறுப்பதற்கில்லை.

சிலப்பதிகாரத்தில் வரும் நம் புரட்சிக் கண்ணகி போல் பிற்காலத்திலும் சில வீராங்கனைகள் உலகத்தில் தோன்றி யிருக்கின்றனர். அவர்களில் பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்து ஆயுதங்கொண்டு போர் புரிந்த பிரெஞ்சு தேசத்து **ஆர்க் ஜோன்** அம்மையாரும், இந்தியச் சிப்பாய்ப் புரட்சியில் பங்கு கொண்ட **ஜான்ஸி ராணி**யும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

சிலப்பதிகாரக் காண்டங்களின் அமைப்பு—மதுரைக் காண்ட நிகழ்ச்சிகள்—இளங்கோவேண்மாளின் ஆராய்ச்சி மிகுந்த பதில்—பதிகம் போதிக்கும் பாடம் ஆகியவற்றை ஒருங்கு சேர்த்துப் பார்க்குமிடத்து,

சிலம்பு காட்டும் செந்நெறி கொடுங்கோலைச் செங்கோலாக மாற்றும் **அரசியல் புரட்சி நெறி**யே என்பது புலப்படும்.

இனி, மதுரைக் காண்டத்தில் வீரக் கண்ணகி நடத்தும் அரசியல் புரட்சியை விரிவாகக் காண்போம்.

# கண்ணகித் தெய்வம்



# வீரக் கண்ணகி

*[சிலப்பதிகாரக் கதையின் மூன்று காண்டங்களில் முதலிலுள்ள புகார்க் காண்டத்தில், கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடைபெறுகின்றது. அவர்கள் சில ஆண்டுகள் இல்வாழ்க்கை நடத்திய பின்னர், அரசவையில் மாதவியின் ஆடல்—பாடல் அழகு ஆகியவற்றைக் கண்ட கோவலன், கண்ணகியை மறந்து மாதவியைக் காதலித்து அவளது இல்லத்தில் பல ஆண்டுகள் தங்கிவிடுகின்ருன். பின்னர், மாதவியின் ஒழுக்கத்தில் ஐயங்கொண்ட கோவலன் அவளை வெறுத்துத் திரும்பவும் கண்ணகியை அடைந்து தனக்குற்ற வறுமையைக் கூறி வருந்துகின்ருன். கோவலன்பால் அனுதாபம் கொண்ட கண்ணகி, தன் காற்சிலம்பு இரண்டையும் காதலனிடம் தருகின்ருள். காதலியின் காற்சிலம்பை விற்றுப் பொருள் தேடி, மீண்டும் வாணிபம் செய்து இழந்த பொருளை மீட்கக் கோவலன் கண்ணகியுடன் மதுரை நகர் செல்கின்ருன்.]*

பல நாட்கள் வழி நடந்து சோழ நாட்டைக் கடந்து பாண்டி நாட்டை அடைந்த கோவலன் தம்பதிகள் மதுரை நகரத்திற்குள் நுழைகின்றனர்.

போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங் கொடி
வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்டப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர்......

"கோவலன் தம்பதிகளே, வாராதீர்! வந்தால் துன்புறுவீர்!" என்று பின் வருவனவற்றை முன்னறிந்து கையசைத்துக் கூறுவனபோல், மதுரை நகர் மதில்கள்மீது மீனக்கொடிகள் ஆடிப்பறக்க, கண்ணகியும் கோவலனும் கீழ்த்திசை வாயிலிற் புகுந்து புறஞ்சேரியை அடைந்தனர்.

அங்கு, மாதிரி என்னும் இடைக்குல மாதின் இல்லத்தில் கண்ணகியை இருக்கச் செய்து, அவளது காற்சிலம்பை விற்றுப் பொருள் தேடக் கோவலன் மதுரை நகரின் கடைவீதி சென்றான். சென்ற இடத்தில் பாண்டி வேந்தன் நெடுஞ்செழியனின் பொற்கொல்லன் செய்த வஞ்சகச் செயலால் "பாண்டிமாதேவியின் சிலம்பைத்திருடிய கள்வன்" என்று குற்றம் சாட்டப்பெற்றுக் கோவலன் கொலைக்குள்ளாகின்றான்.

## பொங்கி எழுந்தாள்!

கோவலன் கொலையுண்ட செய்தியை இடைக்குல மாதரியால் அறிந்த கண்ணகி,

பொங்கி எழுந்தாள், விழுந்தாள்; பொழி கதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேண் நிலங்கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்; தன்கேள்வனை
எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்.

"அந்தோ என் கணவனை எங்கே கண்டு தேடுவேன்" என்று அலறியழுதாள்; விம்மினாள்; வானத்தே கதிர் பொழியும் திங்கள் கார்மேகத்துடன் நிலத்தில் வீழ்ந்தாற்போல மண்ணில் வீழ்ந்து மூர்ச்சையுற்றாள். பின்னர் சுயநினைவு பெற்று,

*மறனெடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப*
*அறனெனும் மடவோய்யான் அவலங்கொண் டழிவலோ!*

"பாண்டி வேந்தனின் கொடுங்கோலாட்சியைப் பார்த்திருக்கும் ஏ, அறக்கடவு ளென்னும் அறிவற்றவனே! கணவனைப் பிரிந்து துன்புறும் விதவைப் பெண்டிருள் யானும் ஒருத்தியோ?'' என்று அரசனின் நீதியற்ற செயலால் தனக்குற்ற துயரைக் கூறி அழுதாள் கண்ணகி.

## முறையும் கற்பும்

பின்னர், ஆயர் சேரியைவிட்டு மதுரை நகரின் வீதிவழியே செல்லும் கண்ணகி, தன்னைப் பார்த்து நிற்கும் பெண்களை நோக்கி அரசனிந்தனைப் பிரசாரம் செய்கிருள்.

*முறையில் அரசன்றன் ஊரிருந்து வாழும்*
*நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்!*

என்று கூறி, நீதி தவறிய பாண்டியன் ஆட்சியில் அமைதியாக வாழும் "பத்தினிப்'' பெண்டிரைப் பரிகசிக்கிருள். மற்றும், "கள்வனே அல்லன் கணவன்; என் காற்சிலம்பு கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்ருரே!'' என்று கூறி தன் கணவன் கள்வனல்லன் என்பதைப் பலரறியப் பறை சாற்றிஞள்.

## கல்லும் கரையுமே!

பின்னர், கோவலன் வெட்டுண்ட கொலைக்களம் சென்று, காலையில் தன்னிடம் விடைபெற்றபோது,

*பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!*
*நாணின் பாவாய்! நீணில விளக்கே!*
*கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!*

என, தன்னைப் பலவாறு புகழ்ந்து பேசிய கணவன் இப்போது தான் பேசியும் அவன் பேசாத நிலைகண்டு கண்ணகி ஆருப்பெருந்துய ரெய்திஞள்.

யாருமில் மருள்மாலை இடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ !
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணு இதுவென உரையாரோ !

கண்பொழி புனல்சோரும் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ
மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப
உண்பதோர் வினைகாணு இதுவென உரையாரோ !

"என் கண்ணுக்கிசைந்த கண்ணாளரே ! உமது பொன்மேனி புழுதியிற் புரண்டு கிடப்பதோ? பாண்டி வேந்தன் செய்த அநீதியால் நான் படும் துயரைப் பாரீரோ?'' என்றெல்லாம் நெஞ்சு நெக்குருக, கண்கள் இடையருது நீர் பொழிய, கல்லுங் கரையக் கதறியழுதாள் கண்ணகி.

## தெய்வந்தான் உண்டா ?

பின்னர் அவள், தனக்குற்ற துயரைப் பார்த்தும், அரசனது அநீதியைத் தன்னுல் அறிந்தும் வாளா விருக்கும் நகர மாந்தரை நோக்கி,

பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்

சான்றேரும் உண்டுகொல் சான்றேரும் உண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉம்
சான்றேரும் உண்டுகொல் சான்றேரும் உண்டுகொல்

தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்
வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்

"என் கணவனைக் கூரிய வாளால் கொல்லுவித்த கொடுங்கோலன் ஆட்சியில் கற்புடைப் பெண்டி

ருண்டா? அறிவுடைச் சான்ருேருண்டா? அருளு டைத் தெய்வந்தான் உண்டா?'' என்று அலறி யழுதாள்.

## கொடுங்கோலனைக் கேட்ட பிறகுதான்...

நீதி தவறிய நெடுஞ்செழியன் ஆட்சியில் அறம் அகன்றது; அருள் மறைந்தது; கற்பு மாசுண்டது. ஆகவே, கண்ணகிக்குத் துணை புரிவார் இல்லா தொழிந்தனர். ஆதரிப்பாரற்ற நிலையில் கண்ணகியின் ஆவேசம் அதிகமாகின்றன. கண்கள் சிவந்து காய் சினம் காட்டுகின்றன. தன் கணவனைக் கொன்ற பாண்டியன்மீது வன்மங் கொள்கின்ருள்.

*காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்*
*தீவேந்தன் தனைக் கண்டித் திறங்கேட்பல் யான்*

"ஏனைய கற்புடைய மகளிரைப்போல் யானும் என் கணவனைக் கூடுவேன். எனினும், அந்தக் கொடியவ னை பாண்டி வேந்தனைக் கண்டு என் கணவன் கொலைக்குக் காரணம் கேட்ட பின்னரே கூடுவேன்'' என்று கொலைக்களத்தில் தன் கணவனது இரத்தம் தோய்ந்த மண்ணில் நின்று சபதம் செய்தாள் **வீரக் கண்ணகி.**

## வந்தனள் வாயில்

அதன் பின்னர்க் கண்ணகி கொலைக்களம் விட்டு அகன்று, கோவேந்தனின் அரமணனையை நாடிச் செல்கிருள். அங்கே ஆயுதம் தாங்கியவனுய் வீர னெருவன் அரண்மனை வாயிலைக்காக்கிருன். கண்ணகி அவ்வாயிலோனை நோக்கி,

*அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து*
*இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே*

என்று, நீதி பிழைத்த வேந்தனின் வாயிலைக் காப்பதை நிந்தித்து உரைக்கின்ருள். மற்றும்,

*இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்*
*கணவனை யிழந்தாள் கடையகத்தாள் என்று*
*அறிவிப்பாயே! அறிவிப்பாயே!*

என, அடங்காக் கோபத்துடன் தனது வரவை அரசனுக்குத் தெரிவிக்கும்படி வாயில் காவலனுக்கு ஆணையிடுகின்றாள்.

நீதி மன்னனின் வாயிலைக் காப்பதே காவலனின் நீங்காக் கடமை. ஆனால், இங்கே அவன் காப்பது அரச நீதியைக் கொன்றவனது வாயிலை என்பதை நினைவூட்டத்தான், "இறை முறை பிழைத்தோன் வாயிலோயே" என்கின்றாள். "குடிகளுக்குத் தீங்கிழைக்கும் ஆட்சியில் சேவகம் செய்வதும் குற்றம்" என்றார் காந்தியடிகள். இந்த ஒத்துழையாமைத் தத்துவத்தைத்தான் கண்ணகியும் இங்கே கூறாமல் கூறுகிறாள்.

## காளியோ?

ஆவேசம் கொண்ட கண்ணகியின் தோற்றத்தைக் கண்டு அஞ்சிய வாயிலோன், அவளுடைய ஆணையைச் சிரமேற்கொண்டு, கண்ணகியின் வரவையும் அவள் காட்சியளித்த நிலையையும் மன்னனுக்கு உரைக்கின்றான்:

*...வாழியெங் கொற்கை வேந்தே வாழி*
*தென்னம் பொறுப்பிற் றலைவ வாழி*
*செழிய வாழி தென்னவ வாழி*
*பழியொடு படராப் பஞ்சவ வாழி*

என, மன்னனை முறைப்படி வாழ்த்தி வணங்கிய காவலன், கண்ணகியின் தோற்றத்தைக் கூறுகிறான்:

*அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்*
*பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி*
*வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்;*

அறுவர்க் கிளையநங்கை யிறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள்;

என்ற வரிகளில், "அரண்மனை வாயிலில் வந்துநிற்கும் பெண்ணணங்கு, கொற்றவை போன்று காணப்படுகின்றாள். ஆனால், கொற்றவை அல்லள்; காளியைப் போன்று காட்சி அளிக்கின்றாள்; ஆனால், காளியும் அல்லள். துர்க்கைப்போன்று தோன்றுகின்றாள்; ஆனால், துர்க்கையும் அல்லள்'' என மருண்டுரைத்த வாயில் காவலன்,

செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே
கணவனை இழந்தாள் கடையகத் தாளே

என்ற வரிகளில் கண்ணகியின் உண்மைத் தோற்றத்தையும் மதுரை மன்னனுக்கு உணர்த்துகின்றான்.

## வழக்குரைத்தாள்

வாயில் காவலன் மூலம் கண்ணகியின் வரவை அறிந்த பாண்டியன், அவளை உள்ளே அழைத்துவர உத்தரவிடுகிறான். வீரக்கண்ணகி, பாண்டியன் நெடுஞ் செழியனின் அவையை நாடி, அவன்முன் அச்சமின்றி அரசனுக்குரிய வணக்கமும் செய்யாது கம்பீரமாக நின்றாள்.

விரிந்து நீண்டு தொங்கும் கருங்கூந்தல்; சிவந்த கண்களில் இடையறுதொழுகும் நீர்த்தாரை; புழுதி படர்ந்த பொன்மேனி; கையில் தனிச்சிலம்பு. இத் தகைய பரிதாபத் தோற்றமும்—பயங்கரப் பார்வையும் உடையவளாகத் தன்முன் நிற்கும் கண்ணகியை நோக்கி,

நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்—

"நீரொழுகும் கண்ணையுடைய பெண்ணணங்கே, நீ யார்?'' எனக் கேட்டான் அரசன்.

கண்ணகி, "ஆராய்ச்சியற்ற வேந்தனே! சொல்கின்றேன் கேள்'' என்று நெடுஞ்செழியனை நிந்தித்தவளாய்,

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே

"தேவர்களும் வியக்கும் வண்ணம், தன்னிடம் அடைக்கலம் புகுந்த புருவைக் காக்கும் பொருட்டு அதன் எடைக்கு ஈடாகத் தனது உடலின் சதையை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும், கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டுத் தன் ஒரே மைந்தனைத் தேர்ச் சக்கரத்திற்குப் பலியாக்கிய மனுநீதிச் சோழனும் ஆண்ட சிறப்புப் பெற்றது நான் பிறந்த புகார் நகரம்.

ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்ன நின்னகர்ப் புகுந்திங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே!

"புகழ் நிரம்பிய பெருங்குடி வாணிகன் மாசாத்துவானுக்கு மகனாகப் பிறந்து, வாணிபம் செய்து பிழைக்க வேண்டி ஊழ்வினையால் துரத்தப்பட்டு

உனது மதுரையம்பதியில் புகுந்து என் காற்சிலம்பை விற்க முயன்று நின்னால் கொல்லப்பட்ட கோவலனின் மனைவி நான். என் பெயர் கண்ணகி'' என்று உணர்ச்சியின் வடிவமாக நின்ற கண்ணகி மன்னனுக்கு உரைத்தாள். கண்ணகியின் வரலாறு அறிந்த மன்னன், “பெண்ணணங்கே, கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோலன்று; வெள்வேற் கொற்றம்'' என்றான்.

கண்ணகி, “கொற்ற மறியாக் கொற்கை வேந்தே! என் கணவன் விற்க வந்த சிலம்பு என்னுடையதே; அதன் இணைச் சிலம்பு இதோ என் கையிலிருக்கின்றது. இச்சிலம்பினுள் இருப்பவை மாணிக்கக் கற்கள்'' என்று கூறினாள். அரசன், “என் தேவியின் காற்சிலம்பினுள் இருப்பவை முத்துக்கள்'' என்று பதில் பகர்ந்தான். பின்னர், தான் முன்னர்க் கோவலனிடமிருந்து பெற்ற சிலம்பைத் தருவித்து அவைமுன் வைத்தான் பாண்டியன்.

## உயிர் கொடுத்தான்

தனது ஆற்றொணாப் பெருந்துயருக்குக் காரணமாக இருந்த அச்செம்பொற் சிலம்பைக் கண்டதும், கண்ணகி ஆவேசமுற்றவளாய், அதை எடுத்து அரசன் முன் தரையில் ஓங்கியடித்து உடைத்தாள். சிலம்பு உடைபடவே அதிலிருந்து மாணிக்கக்கற்கள் வெளிப்பட்டன. அதைக் கண்ட மன்னன், அது கண்ணகியின் சிலம்பென்பதை அறிந்தான். தான் கோவலனைக் கள்வன் என்று கூறியதும் **பொய்;** அவனிடமிருந்து சிலம்பைப் பெற்றது **களவு;** அவன் உயிரைப் போக்குவித்தது அரசநீதியன்று; இரக்கமற்ற **படுகொலை** — என்பதை உணர்கிறான். அப்போதே, அவனது தண்ணளிக்குச் சான்றான வெண்கொற்றக் குடை சாய்ந்தது. நீதிக்குச் சாட்சியான செங்கோல் கையிலிருந்து நழுவியது. பாண்டிய மரபில் நீதி

வாய்ந்த மன்னர்களையே சுமந்துவந்த அரியாசனம், நீதி தவறிய நெடுஞ்செழியனைச் சுமக்க மறுப்பது போல் ஆட்டங்கண்டது. இந்நிலையில், பாண்டியன் நடுக்குற்ற உடலுடன் நாக்குழறியவனாய்,

*"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட*
*யானோ அரசன் ? யானே கள்வன் !*
*மன்பதை காக்கும் தென்புலங் காவல்*
*என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்"*

என்று கூறிக்கொண்டே, அரியாசனத்திலிருந்து உருண்டு கீழே விழுந்து உயிர் நீத்தான். பழியறியாப் பாண்டிய மரபுக்குத் தன்னால் உண்டான பழியைத் தன் உயிர்கொடுத்தே போக்கினான் பாண்டி வேந்தன்.

அரசனது முடிவறிந்த அறக்கற்பினளான கோப் பெருந்தேவி உள்ளம் குலைந்து நடுநடுங்கி,

*"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்"*

என்ற முடிவுடன் தன் கணவன் திருவடிகளைத் தொழுதவண்ணம் தானும் உயிர் நீத்தாள்.

## பின்னரும் சினந்தாள்

பாண்டியன் உயிர்த் தியாகம் புரிந்த பின்னரும் கண்ணகியின் கடுஞ்சினந் தணிந்தபாடில்லை. பாண்டிமா தேவியின் கண்ணீரும் அவளது சினத் தீயை அணைக்கச் சக்தியற்றுவிட்டது. கண்ணகி தேவியார், மன்னனின் காலடியில் மாண்டுகிடக்கும் அரசியை நோக்கி,

*மாட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்*
*பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்*
*ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்என்*
*பட்டிமையுங் காண்குறுவாய் நீ......*

"பத்தினிப் பெண்டிர் பலர் பிறந்த பூம்புகார்ப் பதியில்தான் யானும் பிறந்தேன். யானுமோர் பத்தினி என்பது உண்மையாயின், மன்னன் இறந்ததைமட்டு மல்ல, மதுரை நகர் அழிவதையும் இதோ நீ காணப் போகின்ருய்!'' என்று சபதம் செய்து அரண்மனைக்கு வெளியே வீதியில் வந்து நின்ருள்.

மதுரையம்பதி மக்கள் தங்கள் தங்கள் மாளிகைகளில் இருந்துகொண்டு கடுஞ்சினம் கொண்ட கண்ணகி தேவி இன்னும் என்னவெல்லாம் செய்வாளோ என்றெண்ணி ஏங்குவாராயினர். இந்நிலையில் கண்ணகி, தன்னை நோக்கி நிற்கும் மதுரை மாந்தரைப் பார்த்து,

*"நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்*
*வானக் கடவுளரும் மாதவரும் கேட்டீமீன்*
*யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த*
*கோநகர் சீறினேன் குற்றமிலேன் யான்"*

என்று கூறி, இடது முலையை வலது கையால் திருகி எடுத்து மதுரையை மும்முறை வலம்வந்து விட்டெறிந்தாள். அக்கணமே, பாடல் பெற்ற கூடல் நகரம் தீப்பற்றி எரிந்தது.

## நேற்று அவருடன்; இன்று...?

கண்ணகி, தன் கணவன் கள்வனல்லன் என்பதை உலகறியச் செய்துவிட்டாள். அவனைக் கொல்லுவித்த அரசை அழித்தாள். அதன் தலைநகரைத் தீக்கிரையாக்கினுள். இந்நிலையில், அவளது சினம் சற்றுத் தணிகிறது. துர்க்கை கோயில் வாயிலில் தன் கை வளையல்களை உடைத்தெறிந்த பின்னர்,

*கீழ்த்திசை வாயிற் கணவனெடு புகுந்தேன்*
*மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு !*

“அந்தோ! காற்சிலம்பை விற்றுப் பணந்தேடி வாணிபஞ் செய்து வாழலாம் என்ற எண்ணத்துடன் நேற்றுக் காலைதான் கிழக்கு வாயில் வழியாகக் கணவனுடன் மதுரை நகர் புகுந்தேன். ஆனால், இன்றோ, பாவியேன் கணவனைப் பறிகொடுத்துத் தன்னந்தனியளாய் மேற்றிசை வாயில் வழியாக வெளியேறுகின்றேன்” என்று கூறி, நெடுங்கண்ணீர் நிலத்தை நனைப்ப அழுதவளாய், மதுரை நகர் விட்டு நீங்கிச் சென்றாள் கண்ணகி.

மதுரையை விட்டு அகன்ற பின்னர், இரவு பகல் அறியாது, மேடு பள்ளம் பாராது, ஊண்—உறக்கமின்றிப் பதினான்கு நாட்கள் வைகைக் கரை வழியே மேற்கு நோக்கி நடந்து சேரநாட்டை அடைந்தாள். அங்கே முருகப் பெருமான் வைகும் திருச்செங்குன்றத்தின் மேல் ஏறி, வேங்கை மரமொன்றின் நிழலில் நின்றாள் கண்ணகி.

## குறவர் கண்ட குலதெய்வம்

ஒரு முலை இழந்த கோலத்துடன் போர் வெறி காட்டும் முகப்பொலிவுடன் வேங்கை மரத்தின்கீழ் நின்ற கண்ணகி தேவியைக் குன்றக் குறவர்கள் காணுகின்றனர். கண்ட அளவில்,

*குருவி ஓப்பியும் கிளி கடிந்தும்*
*குன்றத்துச் சென்று வைகி*
*அருவி ஆடியும் சுனை குடைந்தும்*
*அலவுற்று வருவேமுன்*
*மலைவேங்கை நறுநிழலின் வள்ளி போல்வீர் மனநடுங்க*
*முலையிழந்து வந்து நின்றீர் யாவிரோ*

என, பயபக்தியுடன் பத்தினித் தெய்வத்தின் வரலாறு கேட்டனர் குன்றக் குறவர்கள்.

மணமதுரையோடுஅரசு கேடுற வல்வினைவந்து உறுத்தகாலை
கணவனை அங்கு இழந்துபோந்த கடுவினையேன் யான்

என்று, சோகக் குரலெடுத்துத் தன் சுய சரிதத்தைச் சுருக்கமாகக் கூறினாள் கண்ணகி. பின்னர்க் கண்ணகி அடைந்த நிலையை,

பீடுகெழுநங்கை பெரும்பெய ரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்துஆங்கு
அமரர்க்கு அரசன் தமர்வந்து ஏத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வான ஊர்தி ஏறினள்......

என்ற வரிகளில் ஆசிரியர் தெரிவிக்கிறார். இந்திரன் ஏவலால் வானுலகத்துத் தேவர்கள் கோவலனுடன் கூடிச் செங்குன்றம் வந்து கண்ணகி தேவிக்கு அவளுடைய காதலனைக் காட்டினர். பின்னர், அவனோடும் கண்ணகி தேவியைப் புஷ்பக விமானத்தில் ஏற்றித் தேவலோகம் அழைத்துச் சென்றனர்.

இது கண்ணகி தேவியின் மண்ணுலக வாழ்வு முடிந்ததுபற்றி இளங்கோ அடிகள் கூறும் செய்தியாகும்.

# கண்ணகி வழிபாடு

## வேடுவர் நடத்திய விழா

மலைநாட்டுக் குறவர்கள் கண்ணகி வானுலகம் சென்றது கண்டு வியப்புற்று, அவ்வீராங்கனைக்கு விழா நடத்துகின்றனர்.

*சிறுகுடியீரே சிறுகுடியீரே !*
*தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே !*
*நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை*
*நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்*
*தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே !*
*தொண்டகம் தொடுமின் ! சிறுபறை தொடுமின் !*
*கோடுவாய் வைம்மின் ! கொடுமணி இயக்குமின் !*
*குறிஞ்சி பாடுமின் ! நறும்புகை எடுமின் !*
*பூப்பலி செய்ம்மின் ! காப்புக்கடை நிறுமின் !*
*பரவலும் பரவுமின் ! விரவுமலர் தூவுமின் !*
*ஒருமுலை இழந்த நங்கைக்குப்*
*பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே !*

"செங்குன்றத்தில் வாழும் வேடுவர்களே! இந்தப் பத்தினியைப் போன்ற ஒரு தெய்வம் நமது குலத்

திற்கு வேறு இல்லை. ஆகவே, வேட்டுவக் குலத்தீர்! இவளை நம் குல தெய்வமாகக் கொள்ளுங்கள்! குறிஞ்சிப் பறை கொட்டுங்கள்! சிறுபறை முழக்குங்கள்! கொம்பு ஊதுங்கள்! ஒலியெழுப்பும் மணியினை அடியுங்கள்! குறிஞ்சிப் பாடல்களைப் பாடுங்கள்! நங்கைக்கு நறும்புகை காட்டுங்கள்! மலரணி செய்யுங்கள்! சுற்றி மதிலெழுப்பி வாயில் வைத்துக் கோயில் கட்டுங்கள்! புகழுரை கூறிப் போற்றுங்கள்! ஒரு முலையிழந்த நங்கை நம் பெருமலைக்குக் குறையாத வளத்தைத் தருவாளாக என்று வாழ்த்துங்கள்!'' எனக் குன்றக் குறவர் ஒருங்குகூடி, மறைந்த மா பத்தினியாம் கண்ணகியை வாழ்த்தி ஆடிப்பாடி அக மகிழ்ந்தனர்.

## கோவேந்தன் கட்டிய கோயில்

சேரன் செங்குட்டுவன் மலைவளங்காண விரும்பி அரசியாருடன் பேரியாற்றங்கரை வந்திருந்தான். அவ்வமயம் குன்றக் குறவர்கள் அரசனை யணுகி, கண்ணகி தேவியாரைத் தாங்கள் கண்ணாரக் கண்டதையும், அவ்வீராங்கனையின் மண்ணுலக வாழ்வு தங்கள் கண்ணெதிரே முடிவுற்றதையும் வியப்போடு கூறினர். அரசனோடு இருந்த புலவர் சாத்தனாரும், கண்ணகி தேவியார் மதுரையில் நிகழ்த்திய மறப் புரட்சியை விரித்துரைத்தார்.

செய்தியறிந்த செங்குட்டுவன், தனது அருகிலிருந்த சேரமா தேவியை நோக்கி,

*உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்*
*செயிருடன் வந்தஇச் சேயிழை தன்னினும்*
*நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்?......*

"பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் நீத்த அக்கணமே தானும் உயிர்நீத்த கோப்பெருந்தேவி, கொடுங்கோ

லரசை அழித்து கணவனை இழந்த சீற்றத்தோடு நம் நாடடைந்த கண்ணகி தேவி—இவ்விருவரில் என் அரசி வியத்தற்குரியவள் யார்?'' எனக் கேட்டான். அதற்கு,

*காதலன் துன்பம் காணாது கழிந்த*
*மாதரோ பெருந்திருஉறுக; வானகத்து*
*அத்திறம் நிற்கநம் அகல்நாடு அடைந்தவிப்*
*பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்......*

"கணவனுக்குற்ற துன்பத்தைக் காணுமுன் உயிர்நீத்த பாண்டிமா தேவியின் அறக் கற்பு, பத்தினிப் பெண்களின் மரபுவழிப்பட்ட மாண்பாகும். ஆதலால், அப் பெருமாட்டி தனக்குரிய பேரின்ப வீட்டைப் பெறுவாள். ஆனால், பிறந்த நாடுவிட்டு நம் பெருநாடடைந்த பத்தினிப் பெண்ணும் கண்ணகி தேவியின் அரசியல் புரட்சி பெண்ணினங் காணாத புதுநெறியாகும். ஆகவே, அப்பெருமாட்டியை நாம் வழிபட வேண்டும்'' எனப் பதிலளித்தாள்.

அரசியாரின் 'ஆணை'ப்படி செங்குட்டுவன், இமயத்தில் கல்லெடுத்து கண்ணகிக்குச் சிலை செய்து விழா நடத்திய செய்தி நாடறிந்த தாகும்.

## உரைபெறு கட்டுரையின் உண்மை

செங்குட்டுவன் காலத்துக்குப் பிறகு, செந்தமிழ் நாட்டில் கண்ணகி வழிபாடு தொடர்ந்து நடைபெறவில்லை என்று கருதப்படுகிறது. இந்தத் தவறான கருத்து தமிழ் அறிஞர்கள்—ஆராய்ச்சியாளர்கள் குழாத்திலும் நிலவி வருகின்றது. உண்மை என்னவெனில், அன்று தொடங்கிய கண்ணகி வழிபாடு இன்றுவரை தமிழகத்தில் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்ற தென்பதே யாகும்.

தமிழகத்தில், ஆடித் திங்கள்தோறும் **மாரி விழா** நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. சிலப்பதிகாரத்தின் உரைபெறு கட்டுரையை நன்கு ஆராய்ந்தால், பண்டு தொடங்கிய கண்ணகி வழிபாடே, மாரி விழாவாக மாறியிருக்கிற தென்பதை உணரலாம். இனி, உரைபெறு கட்டுரையை ஆராய்வோம் :

"அன்று தொட்டுப் பாண்டிநாடு மழை வறங்கூர்ந்து வறுமை யெய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையி லிருந்த வெற்றி வேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது.

"அது கேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழிலென்றும் மாறாதாயிற்று.

"அது கேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வென்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டமுந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென, **ஆடித் திங்கள்** அகவையின் ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறையெடுப்ப, மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.

"அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி, கோழியகத்து எத்திறத்தானும் வரம்தரும் இவளோர் பத்தினிக் கடவுளாகுமென, நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே."

"நெடுஞ்செழியன் இறந்த பின்னர்ப் பாண்டி நாட்டில் பல ஆண்டுகள் மழை பெய்யா தொழிந்தது. மக்கள் வறுமை யுற்று, வெப்பு—குரு போன்ற பிணி களால் வருந்தினர். நெடுஞ்செழியனுக்குப் பின் அரியணையேறிய வெற்றிவேற் செழியன் இதனைக் கேள்விப் படுகின்றான். பத்தினித் தெய்வமாகிய கண் ணகியின் சீற்றமே பாண்டி நாட்டின் சீரழிவுக்குக் காரணமென்று நம்புகின்றான். ஆகவே, வெற்றிவேற் செழியன் கண்ணகிக்கு விழா நடத்தி ஆயிரம் பொற் கொல்லர்களைப் பலி கொடுத்துச் சாந்தி செய்கின்றான். இதன் விளைவாகப் பாண்டிய நாட்டில் பருவ மழை தவறுவது பெய்தது; வறுமையும், பிணியும் அகன்று வளம் பல பெருகியது."

"இதைக் கேள்வியுற்ற கொங்கு மண்டல இளங் கோசர், இலங்கை வேந்தன் கயவாகு, சோழன் பெருங் கிள்ளி ஆகிய மன்னர்களும் தத்தம் நாடுகளில் கண்ண கிக்குக் கோயில் எடுப்பித்து அங்கு நாள்தோறும் வழி பாடும், ஆண்டுதோறும் பெரு விழாவும் நடத்தி வந் தனர்."

இதுவே உரைபெறு கட்டுரையின் சாரம்.

உரைபெறு கட்டுரை கூறும் செய்திகளைக் கொண்டு தற்காலத்தில் நடைபெறும் மாரி விழாவை ஆராய்வோம்.

## 'மாரி' என்றால் மழை பெய்யும்!

'மாரி' என்பது மழையைக் குறிக்கும் தூய தமிழ்ச் சொல். வெற்றிவேற் செழியனும், மற்ற வேந்தர்களும் மழை வரம் வேண்டியே கண்ணகிக்கு விழாக் கொண் டாடினர் என்பது வெளிப்படை. எனவே, பிற்காலத் தில் அவ்விழாவைத் தொடர்ந்து நடத்திய மக்கள் அதற்கு 'மாரி விழா' எனக் காரணப் பெயர் வழங்கி யிருக்க வேண்டும்.

உரைபெறு கட்டுரையில் வரும் வெப்பு—குரு முதலிய கொடிய நோய்கள் இந்நாளிலும் காலரா, அம்மை என்னும் பெயர்களில் சித்திரை தொடங்கி ஆடித் திங்கள் முடிய உள்ள கோடைக் காலத்தில் தோன்றி, மக்களைத் துன்புறுத்தி வருவதைக் காண்கிறோம். இந்த நோய்கள் நீங்க, மாரி (கண்ணகி) அம்மனுக்குப் பிரார்த்தனை செய்து கொள்வது மரபு. மற்றும், மழை வரம் வேண்டி, ஆடித் திங்களில் மாரி விழா நடத்துவதும் இன்றளவும் வழக்கமாக இருந்து வருகிறது. அன்று வெற்றிவேற் செழியன் உயிர்ப் பலி கொடுத்ததையொட்டியே பிற்காலத்திலும் மாரி அம்மனுக்கு மாடு, ஆடு, கோழி முதலியன பலி கொடுக்கப்பட்டன போலும்!

## சிலம்பும் விழாவும்

கண்ணகியின் புரட்சிக்குக் காரணமாய் அமைந்தது அவளது காற்சிலம்பேயாகும். ஆதலால், இன்றும் மாரி அம்மன் திருவிழாக் காலங்களில், பண்டைக் காலத்தில் மகளிர் கால்களில் அணிந்தவை போன்ற, உள்ளே பரல்கள் நிரம்பிய ஒற்றைச் சிலம்பை தங்கள் கையிலேந்தி ஆடிப்பாடிக் களிக்கின்றனர் பூசாரிகள்.

## பஞ்சக் குறிகள்

வெற்றிவேற் செழியன் விழாக் கொண்டாடிய போது பாண்டி நாடு முழுவதும் பஞ்சத்தால் பீடிக்கப் பட்டிருந்ததால், உணவு—உடையற்ற மக்கள் வேப்பந் தழை யணிந்தும், எளிதில் கிடைக்கக்கூடிய கேழ்வரகு கூழ், கருவாடு, முருங்கைக் கீரை முதலியன சமைத்துப் படைத்தும் கண்ணகி வழிபாடு நிகழ்த்தினர் போலும்! அம்மரபை யொட்டியே, இக்காலத்திலும் மாரி விழாவின் போது மக்கள் வேப்பந் தழையை

ஆடையாக அணிவதும் முருங்கைக்கீரை, கேழ்வரகுக் கூழ், கருவாடு முதலியன சமைத்துப் படைப்பதும் வழக்கமாக இருக்கின்றன.

## கண்ணகி போற்றிய கன்னியர்

தமிழகத்தில் பெரும்பாலான மாரியம்மன் கோயில்களுக்கு வெளியே வலப்புறத்தில், 'கன்னியர்' என்ற பெயரில் ஏழு கற்சிலைகளும், இடப்புறத்தில் 'அண்ணன்மார்' என்ற பெயரில் ஏழு கற்சிலைகளும் இருந்து வரக் காணலாம். இவற்றின் வரலாற்றைச் சிலப்பதிகாரம் 'வஞ்சின மாலை'யில் காண்கிறோம்.

பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையிலிருந்து உருண்டு விழுந்ததும், அவனருகிலிருந்த கோப்பெருந் தேவி உள்ளம் நடுங்கித் தன் கணவன் திருவடிகளைக் கைகளால் பற்றித் தானும் உயிர் விடுகின்றாள். அதைக் கண்ணுற்ற கண்ணகி, கோப்பெருந்தேவியை நோக்கிக் காவிரிப்பூம் பட்டினத்தில் தோன்றிய பத்தினிப் பெண்டிர் எழுவரைப் பற்றிய வரலாற்றைக் கூறுகின்றாள் :

1. *வன்னி மரமும் மடைப்பளியுஞ் சான்றாக*
   *முன்னித்திக் காட்டிய மொய்குழலாள்...*

"தனது கற்பைச் சந்தேகித்த மதுரைப் பெண்களுக்கு வன்னிமரம், கிணறு, சிவலிங்கம் ஆகியவற்றைச் சாட்சிக்கழைத்துத் தனது அழியாப் பெருங் கற்பை அறிவுறுத்தினாள் ஒரு பத்தினி."

2. *................................பொன்னிக்*
   *கரையின் மணற்பாவை நின்கணவ னாமென்று*
   *உரைசெய்த மாதரொடும் போகாள், திரைவந்து*
   *அழியாது சூழ்போக ஆங்குந்தி நின்ற*
   *வரியார் அகலல்குன் மாதர்.........*

“காவிரியாற்றின் மணற் பரப்பில், ஒருத்தி தான் விளையாடுதற்கென அமைத்த மணற் பாவையினை, அவளுடனிருந்த தோழியர்கள், ‘இப்பாவை நின் கணவனாகும்!’ எனக் குறும்பாகக் கூற, அதை உண்மையாகவே கொண்டு, அலைகள் மோதி மணற் பாவையை அழித்து விடாமல், பாதுகாத்தாள் மற்றொரு பத்தினிப் பெண்.”

3. ......................உரைசான்ற
*மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக்கோன்*
*தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று*
*கல்நவில் தோளாயோ வென்னக் கடல்வந்து*
*முன்னிறுத்துக் காட்ட அவனைத் தழீஇக்கொண்டு*
*பொன்னங் கொடி போலப் போதந்தாள்......*

“கரிகாலன் மகள் ஆதிமந்தி என்பவள், தான் காதலித்த ஆட்டனத்தியைக் காவிரி வெள்ளம் இழுத்துச் செல்லக் ‘கல்போன்ற தோள்களையுடையாய், நீ எங்குச் சென்றாயோ!’ என அழுது புலம்பியவளாய்க் காவிரி கடலொடு கலக்கும் இடம்வரை அவனைத் தேடிச் சென்றாள்; அங்கே கடலலைகள், அவனுடலைக் கரையில் கொண்டுவந்து சேர்க்க, அப்பொற்றொடி தன் காதலன் உடலைக் கையாரத் தழுவினாள். அவளொரு பத்தினி.”

4. ........................மன்னி
*மணல்மலிபூங் கானல் வருகலன்கள் நோக்கிக்*
*கணவன்வரக் கல்லுருவம் நீத்தாள்...........*

“பொருள் தேடும் பொருட்டுத் திரைகடலோடிய காதலன் மீண்டும் வருமளவும் அவனது வருகையை எதிர்பார்த்த வண்ணம், கடற்கரைச் சோலையில் கல்லுருவாக நின்று கணவன் தன்னையடைந்தவுடன், அக்கல்லுருவம் ஒழித்து நல்லுருவம்பெற்று அவனோடு, கூடி வாழ்ந்தாள், இன்னொரு பத்தினிப் பெண்.”

5. ........................இணையாய
மாற்றாள் குழவிவிழத் தன்குழவி யுங் கிணற்று
வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள்...

"தன் மாற்றாள் குழந்தை கை தவறிக் கிணற்றில் விழவே, தன் குழந்தையையும் கிணற்றில் போட்டு, பின்னர் இரண்டையும் எடுத்து மாற்றாளுக்கு இன்பந் தந்து தானும் இன்பமடைந்தாள் பின்னொரு பத்தினி.''

6. ....................வேற்றொருவன்
நீள் நோக்கங் கண்டு நிறைமதி வாண்முகத்தைத்
தானோர் குரக்குமுகம் ஆகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுகம் நீத்த
பழுமணி அல்குற்பூம் பாவை......

"கணவனைப் பிரிந்து தனித்திருந்தபோது, தன் அழகு பிற ஆடவனின் சிந்தையைக் கவரா வண்ணம், திங்கள் போன்று அழகு நிறைந்த முகத்தினைக் குரங்கு முகமாக்கிக் கொண்டு, பின்னர் வெளியூர் சென்ற கணவன் வீடு திரும்பியதும் பழைய முகத்தையடைந் தாள் வேறொரு பத்தினி.''

7. ..............................விழுமிய
பெண்ணறி வென்பது பேதைமைத்தே என்றுரைத்த
நுண்ணறிவி னோர்நோக்கம் நோக்காதே
எண்ணிலேன்
வண்டல் அயர்விடத்து யானோர் மகள் பெற்றால்
ஒண்தொடி நீயோர் மகன்பெறின் கொண்ட
கொழுநன் அவளுக்கென்(று) யானுரைத்த மாற்றம்
கெழுமி அவளுரைப்பக் கேட்ட விழுமத்தால்
சிந்தைநோய் கூருந் திருவிலேற்(கு( என்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய்
முந்தியோர்

கோடிக் கலிங்கம் உடுத்துக் குழல்கட்டி
நீடித் தலையை வணங்கித் தலைசுமந்த
ஆடகப் பூம்பாவை.................

"எனக்குப் பிறக்கும் மகளுக்கு, நீ பெறும் மகன் கணவனுவான்!' என்று, இளமையில் தன் தாய் தோழிக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்று வான் வேண்டி, புதுப் புடைவை உடுத்து, கூந்தலை வாரி முடித்து, தன் பெற்ருள் குறித்த பெருமகனைக் கணவனுகக் கொண்டு வாழ்க்கை நடத்திஞள், பிறி தொரு பத்தினி.''

கண்ணகி போற்றிய இந்த ஏழு பெண்களையே 'கன்னியர்' எனவும், அவர்கள் கணவர்களையே 'அண்ணன்மார்' எனவும் கொண்டு மாரி கோயிலில் சிலைகள் வைத்து மக்கள் வழிபடுகின்றனர் எனக் கொள்ளலாம். பிற பெண்களின் கணவன்மார்களை, 'அண்ணன்மார்' என முறை கொள்வது தமிழ்ப் பெண்களின் வழக்கம். அந்த வழக்கப்படியே, கண் ணகி போற்றிய ஏழு கன்னியரின் கணவர்களையும், அவளுடைய அண்ணன்மார் எனப் பெயர் கொடுத் துள்ளனர் மாரிகோயில் பூசாரிகள்.

## சிற்பியின் கற்பனை

மாரியம்மன் கோயில்கள் சிலவற்றிலுள்ள சிலை களின் முகம் மிகக் கோர வடிவத்தில் கோரைப் பற் களும், தலை மாலையும் கொண்டு காட்சியளிப்பதால், துர்க்கை அல்லது காளி போன்ற தெய்வமாகவே சிலர் எண்ணுகின்றனர்; இதுவும் தவறு.

மறக் கற்பினளாக கண்ணகியின் உருவச் சிலை யைச் செய்த சிற்பி, துர்க்கை-காளி எனப்படும் சமய வாதிகள் கற்பித்த தெய்வங்களின் உருவங்களை நினைவில் கொண்டே செய்திருக்க வேண்டும். இதற்

குச் சிலப்பதிகாரத்திலேயே சான்றுகள் காணப்படுகின்றன. வழக்குரை காதையில், கண்ணகியைக் கண்ட வாயில் காவலனுக்கு அவளது தோற்றம் காளி, துர்க்கை ஆகிய தெய்வங்களின் நினைவையே உண்டாக்கியது. வாயில் காவலன் கண்ணகியின் வரவை மன்னனிடம் கூறும்போது,

*அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்*
*பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி*
*வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்;*
*அறுவர்க் கிளைய நங்கை; இறைவனை*
*ஆடல்கண் டருளிய அணங்கு; சூருடைக்*
*கானகம் உகந்த காளி; தாருகன்*
*பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்.*

"கொற்றவை அல்லள்; பிடாரி அல்லள்; பத்திர காளி அல்லள்; துர்க்கையுமல்லள்'' என்று வாயில் காவலன் கூறினாலும், 'அவர்களைப் போன்று தோற்றமளிக்கிறாள்; ஆனால், அவர்களல்லள்' என்ற பொருள்படவே கூறுகிறான்,

'மற்றும், 'வேட்டுவ வரி'யில், ஆவேசங் கொண்ட **சாலினி,** கோவலன் அருகிலிருந்த கண்ணகியைப் பார்த்து.

"இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி''

எனப் புகழ்ந்து கூறுகின்றாள். அதற்குப் பொருளுரைத்த அரும்பத உரையாசிரியர், "மேற்பட்டு இவள் தெய்வமாகக் கொண்டாடுமிடம் கூறினபடியாலே, இவள் துர்க்கையாகவே பிறந்தாள்'' என்கின்றார்.

இவற்றையெல்லாம் சான்றாகக் கொண்டு, மாரி எனப்படும் கண்ணகியின் உருவச் சிலை சில இடங்களில் துர்க்கையின் தோற்றத்திலும் அமைக்கப்பட்டிருக்கலாம்.

## ரேணுகையல்ல; கண்ணகியே!

மாரியம்மன் வழிபாட்டை ரேணுகை வழிபாடாகக் கருதுவார் மற்றும் சிலர். ஒரு சில மாரியம்மன் கோயில்களில் முழு உருவச் சிலை முன்னே, வெட்டுண்ட பெண் தலை வைக்கப்பட்டிருப்பதால், அத்தலை ஜமதக்கினி முனிவரின் கட்டளைப்படி பரசுராமனால் வெட்டப்பட்ட ரேணுகையின் தலையே எனவும் ஆதாரம் காட்டுவர். இது முற்றிலும் கட்டுக்கதையேயாகும். வடநாட்டு ஆரியப் பெண்ணாகிய ரேணுகைக்கு 'மாரி' என்ற தமிழ்ப் பெயர் வழங்குவதும், அறக் கற்பினளாகிய அவளுக்குக் கோர உருவம் அமைப்பதும், உயிர்ப் பலி கொடுப்பதும் பொருந்தாக் கூற்றேயாகும்.

## தலை மாறாட்டம்!

வஞ்சி நகரில், சேரன் செங்குட்டுவன் கட்டுவித்த கண்ணகி கோயிலில், கோவலன் சிலையும் வைக்கப்பட்டிருந்ததாக மணிமேகலைக் காப்பியத்தால் அறிகிறோம். சிலை வடிவில் காட்சியளிக்கும் தாய்—தந்தையாகிய கண்ணகியையும் கோவலனையும் காண விரும்பி, மணிமேகலை வஞ்சிநகர் புகுந்ததாக,

*அணியிழை அந்தரம் ஆறா எழுந்து*
*தணியாக் காதல் தாய் கண்ணகியையும்*
*கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்*
*கடவு ளெழுதிய படிமங் காணிய*
*வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து*

என்ற வரிகள் அறிவிக்கின்றன.

இதன்படியும், மாரி கோயிலில் வைத்து வழிபாடு நடத்தப்படும் முக உருவம், வெட்டுண்ட கோவல

னுடையதாக இருக்க நியாயமுண்டு. கற்புடைப் பெண்டிரை வணங்குமுன்னர், அவர்தம் கணவருக்கு வழிபாடு நிகழ்த்துவது மரபு. எனவே, வழிபடுவதற்கென்றே அமைக்கப்பட்ட கண்ணகி தேவியின் உருவச் சிலை முன்பு, கோவலன் சிலை இருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், அந்த ஆண் தலை பெண் தலையாக மாறியதுதான் வியத்தற் குரிய விஷயம்! பிற்காலத்தில் ரேணுகையின் வழிபாட்டைத் தமிழகத்தில் நுழைக்க முயன்றவர்களால் இந்தத் தலை மாருட்டம் ஏற்பட்டிருக்கலாம். பாண்டி வேந்தன் ஆணைப்படி கோவலன் வெட்டுண்டதால், மக்கள் அவனது முக உருவச் சிலையைக் கண்ணகி கோயிலில் வைத்து வழிபடுவது இயற்கையே!

ஆகவே, மாரியம்மன் கோயிலுள்ள முக உருவச் சிலை, கோவலனுடையதென்றே கொள்ள வேண்டும்.

இதுவரை நாம் கூறியவற்ருல், தமிழ் நாட்டில் சிலப்பதிகார காலத்திலிருந்தே கண்ணகி வழிபாடு தொடர்ந்து நிகழ்ந்துவருவது புலனுகும்.

இந்தக் கருத்துக்கள் முடிந்த முடிபென யான் கூறவில்லை. மேலும் ஆராய்வதற்கான ஓர் அடிப்படை என்று கொண்டாலே போதுமானது.

கொங்கையாற் கூடற்
பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்ருளைப்
பாடுதும் வம்மெல்லாம்!

பைந்தொடிப் பாவையைப்
பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் தன்மகளைப்
பாடுதும் வம்மெல்லாம்!

# இலங்கையிலும் கண்ணகி!

சிலப்பதிகாரக் கண்ணகி பிறந்தது சோழ மண்டலத்திலே! அவள் ஆவேசம் கொண்டு அரசியல் புரட்சி விளைவித்தது, பாண்டிய மண்டலத்திலே! அவ்வீராங்கனைக்கு மன்னன் செங்குட்டுவன் கோயில் எடுப்பித்தது சேர மண்டலத்திலே! ஆனால், இம்மூன்று மண்டலங்களையும் தன்னகத்தே கொண்ட தமிழ் நாட்டில் கண்ணகித் தெய்வத்தின் பெயரால் ஒரு கோயில்கூட இல்லை. 'மாரியம்மன்' என்ற மாற்றுப் பெயராலேயே கண்ணகிக்குக் கோயில்கள் அமைந்திருக்கின்றன.

இலங்கைத் தீவிலோ, 'கண்ணகி அம்மன்' என்ற பெயராலேயே எண்ணற்ற கோயில்கள் இருந்து வருகின்றன. தமிழர் வாழும் வட இலங்கையில் மட்டுமல்லாமல், சிங்களவர் வாழும் தென்னிலங்கையிலும் தெய்வ பத்தினிக்கு வழிபாடு நடக்கின்றது.

இலங்கையில், கண்ணகி வழிபாடு இன்று அல்லது நேற்றுத் தோன்றிய தன்று; வஞ்சியில் சேர மன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்த

அன்றே தோன்றி, இன்று வரை—இடைவிட்டுப் போகாமல்—தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

வஞ்சி மாநகரில் கண்ணகி சிலையைப் பிரதிஷ்டை செய்தபோது, இலங்கை வேந்தன் கயவாகுவும் அவ் விழாவில் பங்கு கொண்டான். தன் நாட்டிற்கு வர வேண்டுமென்று கண்ணகி தெய்வத்திடம் வரம் கேட்டான். அவ்வமயம், 'தந்தேன் வரம்' என்று ஒரு குரல் எழுந்ததாம். இதை,

*அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்*
*பெருஞ் சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்*
*குடகக் கொங்கரும் மாளுவ வேந்தருங்*
*கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்*
*என்னாட் டாங்கண் இமைய வரம்பனின்*
*நன்னாட் செய்த நாளணி வேள்வியில்*
*வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்*
*தந்தேன் வரமென்(று) எழுந்த தொருகுரல்*

என்ற 'வரந்தரு காதை' வரிகளால் அறிகின்றோம்.

இதற்குப் பின்னர், கண்ணகி தேவியின் சீற்றத்தால் பாண்டி நாடு பஞ்சத்துக்கு இரையானபோது, நெடுஞ்செழியனுக்குப் பின் அறியாசனமேறிய வெற்றிவேற் செழியன் அவ்வீராங்கனைக்கு விழா நடத்துகின்றான். அதன் விளைவாகப் பாண்டி நாட்டிற் பருவமழை மாறாது பெய்தது; பஞ்சம் நீங்கிப் பால்வளமும் பயிர் வளமும் பெருகின.

இந்தச் செய்தி கேட்ட இலங்கைக் கயவாகு மன்னன், தனது நாட்டிலும் ஆடி மாதத்தில் தெய்வ பத்தினியாம் கண்ணகிக்குத் திருவிழா நடத்தினான். ஒரு முறையல்ல; ஆண்டு தோறும்!

"அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வென்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்ட முந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென, ஆடித்திங்க ளகவையின் ஆங்கோர் பாடிவிழாக்கோள், பன்முறை யெடுப்ப, மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப், பிழையா விளை யுள் நாடாயிற்று"

என்ற செய்தியைச் சிலப்பதிகாரத்தில் சேர்க்கப்பட்டுள்ள 'உரைபெறு கட்டுரை' நமக்கு உணர்த்தி வைக்கின்றது.

இலங்கைக் கயவாகு மன்னன், சிங்கள இனத்தினன்—பௌத்த மதத்தினன். இருந்தும், இனத்தாலும் நாட்டாலும் அன்னியப் பெண்ணான கண்ணகி தேவியை வழிபட்டான். பிற்கால மக்களும் வழிபடுவதற்கு மானியங்கள் விட்டு வைத்தான்.

இலங்கைத் தமிழர், 'கண்ணகி அம்மன்' என்ற இயற் பெயராலேயே பூம்புகார்ப் பத்தினியைப் போற்றி வழிபடுகின்றனர். பௌத்தர்களான சிங்கள மக்கள் 'பத்தினித் தெய்வம்' என்ற பெயரில் கோவலன் மனைவியைக் கொண்டாடுகின்றனர். ஆனால் தாங்கள் வழிபடும் பத்தினி கண்ணகி தேவிதான் என்பதை உணருகின்றனர்.

இலங்கையில் வட மாகாணத்தில்தான் பூர்வீகந் தொட்டு இன்றுவரை தமிழர் பெரும்பாலாராக வாழ்ந்து வருகின்றனர். அந்த மாகாணத்தில் பல ஊர்களில் கண்ணகி அம்மன் கோவில்கள் இருக்கின்றன. 'புங்குடு தீவு' எனப்படும் கிராமத்தில் உள்ள கண்ணகி அம்மன் கோவில் முன்பு 1954-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சிலப்பதிகார மகாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இலங்கைத் தீவிலேயே கண்ணகித் தெய்வத்துக்கு மக்கள் அதிக மதிப்பளிக்குமிடம் 'மட்டக்களப்பு' என்னும் பகுதிதான். அங்கு, கண்ட கண்ட ஊர்களிலெல்லாம் கண்ணகி கோவில்கள்தான்! கண்ணகி விழாவை அந்தப் பகுதி மக்கள் ஒரு தேசியத் திருவிழாவாகவே கொண்டாடி வருகின்றனர். சிலப்பதிகாரக் காப்பியப்படி இலங்கைக் கயவாகு மன்னன் ஆடி மாதத்தில்தான் கண்ணகிக்கு விழா நடத்தியதாக அறிகிறோம். ஆனால், இக்காலத்தில், இலங்கையில் வைகாசி மாதத்தில் கண்ணகி விழா நடைபெறுகின்றது. விவசாயத் தொழிலுக்கு ஏற்றபடி பிற்கால மக்கள் விழா நடத்தும் மாதத்தை மாற்றி அமைத்தனர் போலும்!

மட்டக்களப்பில் கண்ணகி விழா நடைபெறுங் காலத்தில் மக்கள் கட்டுப்பாடுடனும் பயபக்தியுடனும் நடந்து கொள்கின்றனர். புலால் புசிக்க மாட்டார்கள். வீடு, வாசல், வீதிகளைச் சுத்தமாக்கி மஞ்சள் நீர் தெளித்து வைத்திருப்பார்கள். வீடுகளில் ஆடம்பரமான களியாட்டங்களை நடத்த மாட்டார்கள்.

மட்டக்களப்பு ஜில்லாவில் துறை நீலாவணை, காரைத் தீவு, கழுவாஞ்சிக்குடி, செட்டிப்பாளையம், ஆறைப்பற்றை, மண்டூர் முதலிய ஊர்களிலுள்ள கண்ணகி அம்மன் கோயில்கள் மிக்க சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன.

மட்டக்களப்பின் தென்பகுதியிலுள்ள கண்ணகி அம்மன் கோயில்களெல்லாம் விழா நடக்கும் காலத்தில் தான் திறக்கப்படுகின்றன. மற்றக் காலங்களில் கோயில்கள் மூடப்பட்டே இருக்கின்றன.

சில, குடும்பத்தில் பயன்படுத்தப்படும் தட்டு முட்டுச் சாமான்கள் முதலியன விழாக் காலங்களில்

கண்ணகியம்மன் கோயிலில் காணிக்கைகளாகச் செலுத்தப் படுகின்றன. கும்மி, கோலாட்டம், நாட்டுக் கூத்து முதலியனவும் கோயில் முன்பு நடைபெறு கின்றன.

மட்டக்களப்பு ஜில்லாவில், 'மாரியம்மன்' என்ற பெயராலும் கோயில்கள் இருக்கின்றன. அவற்றையும் கண்ணகி கோயில்களாகவே மக்கள் கருதுகின்றனர்.

கண்ணகியம்மன் வழிபாட்டிற்கென்றே பல கவி தைகளும், கதைகளும் தமிழில் எழுதப்பட்டிருக் கின்றன. அச்சு வாகனமேருத அவை மக்களிடையே நன்கு பரவி இருக்கின்றன. கண்ணகி பாடல்களை மட்டக்களப்பு மக்கள் சர்வசாதாரணமாகப் பாடு கின்றனர். 'குளுத்தி' என ஒரு வகைப் பாடல் பாடு கின்றனர். இது, கோபங்கொண்ட கண்ணகியின் மனத்தைக் குளிரச் செய்வதற்குப் பாடுவதாம். 'குளிர்ச்சி' என்ற சொல்தான் 'குளுத்தி' என்று வழங் கப்படுகிறது. 'ஊர் சுற்றுக் காப்பியம்', 'வழக்குரை', 'உடுகுச் சிந்து' என்ற பெயர்களிலும் கவிதை வடிவில் பல காப்பியங்கள் இருக்கின்றன.

கண்ணகி கோயில்கள் சிலவற்றிலிருந்த உருவச் சிலைகள் இடது கொங்கை இல்லாத தோற்றத்தில் இருந்தனவாம். ஆனால், அங்கக் குறைவான சிலை வழிபாடு கூடாதென்ற கொள்கைப்படி, அவை கோயில்களிலிருந்து அகற்றப்பட்டு அங்கப் பழுதற்ற சிலைகள் பிரதிட்டை செய்யப்பட்டனவென்று சொல் லப்படுகிறது.

1930-ம் ஆண்டில் மட்டக்களப்புக்கும் திரிகோண மலைக்கும் இடையேயுள்ள ஓர் இடத்தில் பூமிக்கு அடியி லிருந்து பெண்தெய்வத்தின் உருவச் சிலையொன்று கண்டெடுக்கப்பட்டது. அதை எடுத்தவர் சர். ஜி. பி. ஹௌண்டரில் என்ற ஆங்கிலேயர் ஆவார். அந்தச்

சிலை இப்போது லண்டனிலுள்ள பொருட்காட்சிச் சாலை யில் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மாதிரி உருவம் ஒன்று இலங்கையின் தலைநகரான கொழும்புப் பொருட்காட்சிச் சாலையில் நாற்புறமும் கண்ணுடிகள் பொருத்தப்பட்ட அழகிய பீரோ ஒன்றில் வைக்கப் பட்டிருக்கிறது. கண்டெடுக்கப்பட்ட சிலை கண்ணகி தேவியினுடையது என்றும், அது ஏழு அல்லது எட்டாம் நூற்ருண்டைச் சேர்ந்ததென்றும் கருதப்படுகின்றது.

இராமாயணத்தில் வரும் இராவணன் இலங்கை வேந்தனுகக் கூறப்படுகின்ருன். ஆனுல், இலங்கைத் தீவைச் சுற்றிப் பார்த்தால், இராவணனை நினைவூட்டும் சின்னங்கள்—செய்திகள் மிகக் குறைவு. பூம்புகாரில் பிறந்த கண்ணகியை நினைவூட்டும் சின்னங்களும் செய்திகளுமே அதிகமாக இருக்கும்.

மற்றும், இந்தியாவில் கேரள—கன்னட ராஜ்யங் களிலும் முறையே பகவதி, மங்கலாதேவி என்ற பெயர்களில் கண்ணகி வழிபாடு இன்றளவும் நடை பெற்று வருவதாக அறிகிரேும்.

# சிலம்பு காட்டும் செந்நெறி



# சிலம்பு காட்டும் செந்நெறி

சிலப்பதிகாரம், சேர நாடு—சோழ நாடு—பாண்டிய நாடு என மூன்று நாடுகளாகப் பிரிந்துகிடந்த தமிழகத்தை ஒரே நாடாகப் பிணைத்துக் காட்டிய முதற் காப்பியம். "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் தமிழ் வரம் பறுத்த தண்புனல் நன்னாடு" எனத் தமிழகத்தின் எல்லைகளுக்குத் தெய்விகத் தன்மை கற்பித்ததும் சிலப்பதிகாரமே.

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்றார் பாரதியார். "சித்திரச் சிலப்பதிகாரம்" என்றார் நாமக்கல் கவிஞர். ஆம், பின்னே தோன்றிய புலவர்களெல்லாம் சிலப்பதிகாரத்தின் சிறப்பைப் போற்றிப் புகழ்ந்தனர். சிலம்பு காட்டும் செந்நெறியே இந்தச் சிறப்புகளுக்கெல்லாம் காரணமாகும்.

## தமிழுக்கே உரியது

கன்னித் தமிழில் சிலம்பொன்றே யன்றி, வேறு காப்பியங்களும் உண்டு. அவை யனைத்தும் வடமொழிக் காப்பியங்களின் வழிநூற்களே யன்றித்

தமிழ் மொழியில் தோன்றிய முதல் நூற்களல்ல. ஆனால், சிலப்பதிகாரமோ, தமிழில் தோன்றிய முதற் காப்பியம்.

## மண்ணுலகத் தலைவி

சிலம்பு காட்டும் செந்நெறியும் செந்தமிழ் நாட்டார் வழி வழிக் கடைப்பிடித்து வந்த நன்னெறியே யாகும். வேறு சில காப்பியங்களில் கதாநாயகர்களாகட்டும், அல்லது கதாநாயகிகளாகட்டும்—கடவுளின் அவதாரங்களாகவே வருணிக்கப்படுவர். அல்லது தேவலோகத்தில் பிழை செய்து அதற்குப் பிரயாச்சித்தம் தேடப் பூலோகத்தில் பிறந்த தேவர்களாகவேனும் இருப்பார்கள். ஆனால் சிலப்பதிகாரத் தலைவியாம் கண்ணகி தேவி, கடவுளின் அவதாரம் அல்லள்; விண்ணுலகில் பிழை செய்து மண்ணுலகில் பிறந்த தேவமகளும் அல்லள். நாமெல்லாம் பிறந்த விதிப் படித்தான் கண்ணகியும் பிறந்தாள். ஆம், மக்களிலே ஒருத்தியைத் தலைவியாகக் கொண்டு மக்கள் சமுதாயத்திற்கு நன்னெறி போதிக்க இயற்றப்பட்ட மக்கள் காப்பியம் சிலப்பதிகாரம்.

## பெண்ணின் பெருமை பேசும் பேரிலக்கியம்

சிலப்பதிகாரம், தமிழ் மொழியிலும் தமிழ் வழியிலும் எழுதப்பட்ட காப்பியமாகும். பெண்ணொருத்தியைத் தலைவியாகக் கொண்டு செந்நெறி போதிக்கும் சிறந்த காப்பியம்.

இளங்கோ காலத்தில், இராமாயணம் தமிழில் எழுதப்படவில்லை. என்றாலும், இராமனைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இதிலிருந்து, இளங்கோவடிகள் வால்மீகியின் ஆதிகாவியத்தை அறிந்திருந்தார் எனக் கூறலாம். அப்படியிருந்தும், இராம கதைக்கு மாறுபட்ட போக்கி

லேயே சிலம்பைச் சித்தரிக்கிறுர் சேர நாட்டுப் புலவர். இராம காவியத்தின் சிறப்பனைத்தும் இராமரைச் சேர்ந்ததே யன்றி, சீதைக்கு உரியதன்று. இராமரின் புகழ்விளங்கச் சீதை ஒரு கருவியாகப் பயன்படுத்தப் படுகிறுள். அக்காவியத்திற்கு இராமர் பெயர் சூட்டப் பட்டிருப்பதே இதைப் புலப்படுத்தும்.

இராமாயணத்தில், காடு செல்லப் புறப்படும் இராமர் தன்னேடு வர மன்றுடும் சீதையை அழைத் துச் செல்ல மறுக்கிறுர். ஆனல், சிலப்பதிகாரத்தில் நாடு விட்டு நாடு செல்ல விரும்பும் கோவலன், கண் ணகியை 'எழு' எனக்கூறி இட்டுச் செல்கிறுன். மண் மகள் அறியாத வண்ணச் சீரடியுடையாள் கண்ணகி தேவி என அறிந்திருந்தும், காட்டு வழியே அவளைக் கூட்டிச் செல்லத் துணிந்தான் கோவலன்.

சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதையில், கூடற் பதி வேந்தன் கொலு வீற்றிருக்கிறுன். அவன் அருகில் அரசமாதேவி அமர்ந்திருக்கக் காண்கிறேம். அது மட்டு மன்று; பாண்டியன் அரியணையிலிருந்து உருண்டு வீழ்ந்து உயிர் விட்டபோது, அரசமா தேவி யும் உயிர் நீத்த அதிசயத்தைப் பார்க்கிறேம்.

தமிழ் நாட்டு வேந்தர் அரசியைப் பக்கத்தில் வைத்திருந்தது அழகுக்காக அன்று. அவசியம் நேர்ந்தபோது, அவளது ஆலோசனையைக் கேட்கவே யாகும். 'காட்சிக் காதை'யில், கண்ணகி மறைந்த செய்தியை மலைக் குறவர்களால் அறிகின்றுன் செங் குட்டுவன். அவ்வீராங்கனை மதுரையில் நிகழ்த்திய புரட்சியை விளக்குகின்றுர் புலவர் சாத்தனுர். செய்தி யறிந்த செங்குட்டுவன், தன் அருகிலிருந்த சேரமா தேவியை நோக்கி, "மன்னன் உயிர் நீத்த அக்கணமே

தன்னுயிர் நீத்த **மதுரையரசி;** கொடுங்கோலை அழித்துச் செங்கோலை நிலைநாட்டிய **கண்ணகிதேவி**—இவ்விருவரில் என் சேரமாதேவியின் சிந்தையைக் கவர்ந்தவள் யார்?'' எனக் கேட்கின்றான். “மண்ணகம் அறியாத புரட்சியை விளைவித்த கண்ணகி தேவிக்குக் கோயில் எடுப்போம்; அவளைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுவோம்'' என்று, வினா விடுத்த வேந்தனுக்கு விடையளித்தாள் சேரநாட்டரசி.

ஆம். அரசராயினும் ஆண்டியாயினும், மனைவியரை அந்தப்புரத்தில் அடைத்து வைக்கும் பெண்ணடிமைத் தனத்தைத் தமிழ்நாட்டார் கடைப்பிடித்ததில்லை. சிலப்பதிகாரத்தில், மதுரைக் காண்டத்திலும் சரி, வஞ்சிக் காண்டத்திலும் சரி—அரசி இல்லாமல் அரசர் அவையிலிருந்ததில்லை. ஆம், அரண்மனையில் காதலி; அரசவையில் மந்திரி! இதுவே, அக்காலத் தமிழ் அரசிகளின் நிலை.

பிற காப்பியங்களில் தலைவனை அறிமுகப்படுத்திய பின்னரே, துணைப் பாத்திரமாக வரும் தலைவியைக் கூறுவர் புலவர்கள். ஆனால், சிலம்பு காட்டும் செந்நெறி இதற்கு நேர்மாறானது. சிலப்பதிகாரக் காதலர்களின் திருமணத்தைக் கூறுமிடத்து, கண்ணகியை முன்னும் கோவலனைப் பின்னும் அறிமுகப்படுத்துகிறார் இளங்கோவடிகள்.

இக்காலத்தில் மேடைப் பேச்சாளர்கள், “சகோதரிகளே, சகோதரர்களே!'' என்று கூறக் கேட்கின்றோம். இது “லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்'' எனப் பெண்களை முற்படக் கூறிப் பெருமைப்படுத்தும் ஆங்கிலேயர் வழக்கத்தை ஒட்டியதாக எண்ணப்படுகின்றது. ஆனால், சிலம்பு காட்டும் செந்நெறியை அறிந்தார்க்கு, இது தமிழ் நெறியே எனப் புலப்படும். ‘ஊர்சூழ் வரி'யில் கணவனை இழந்து கலங்கியழும்

கண்ணகி, "நீதியைக் கொன்ற நெடுஞ்செழியன் ஆட்சியில் பெண்டிரும் உண்டுகொல்'' எனப் பெண்களைக் கூவி அழுத பின்னரே, சான்றோரையும் தெய்வத்தையும் கூப்பிட்டு அழுதாள். கூடற்பதியை எரிப்பதற்கான காரணத்தைக் கூறும்போதும், "நான்மாடக் கூடல் மாதர்களே, கேளுங்கள்!'' என மகளிருக்கு உரைத்த பின்னரே மைந்தருக்கும் வானக் கடவுளர்க்கும் மாதவர்க்கும் கூறினாள். சிலம்பு காட்டும் இந்தச் செந்நெறியைத்தான் அதைப் படித்தறியாத ஆங்கிலேயரும் பின்பற்றுகின்றனர்.

## சுருங்கச் சொல்லும் சுவை

சிலப்பதிகாரத்தில் மற்றொரு சிறப்பைக் காண்கிறோம். வேறு எந்தக் காப்பியத்தை நோக்கினாலும், காப்பியத் தலைவன் கருவுற்றதிலிருந்தே கதை துவங்கும். அவதாரப் படலத்திலிருந்து பல படலங்களைத் தாண்டிய பின்னரே கதையின் கருப்பொருளை அணுகுவோம். இந்தப் படலங்களைப் படித்து முடிப்பதற்குள் நமது உள்ளம் ஓய்ந்துவிடும். இதனால் காப்பியத்தைப் படிக்க விரும்புகிறவர்கள்கூட, அவதாரப் படலத்தைத் தாண்டுவதற்குள் அலுத்து நிறுத்திவிடுவர். சிலப்பதிகாரத்திலோ, காப்பியத் தலைவியை ஆரம்பத்திலேயே திருமணப் பந்தலில் அறிமுகப்படுத்தி விடுகிறார் இளங்கோவடிகள். ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம், அரசியற் படலம்ஆகிய நான்கு படலங்களில் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் இருபத்துநான்கு வரிகளிலேயே சுருக்கமாகக் கூறிமுடித்துவிட்டு, கதையின் முக்கியப் பகுதிக்கு வந்துவிடுகிறார், சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் இலக்கண முறையை மிகத் திறமையாகக் கையாண்டிருக்கிறார் கவிஞர்.

கற்பனை, அலங்காரம், வருணனை ஆகியன வெல்லாம் காப்பியத்திற்குத் தேவையானவையே. அவை

சிலப்பதிகாரத்திலும் நிறைய உண்டு. ஆயினும், கதையை மறந்து கற்பனையிலும் அலங்காரத்திலும் வருணனையிலும் மக்களை மயங்கவைக்கும் அளவுக்குப் போகவில்லை இளங்கோவடிகள்.

## கானல்வரியிலே களவியல்

காப்பியத்திற்கு அழகு செய்வது காதலர்களின் முதல் சந்திப்பாகும். முன்பின் அறியாத ஒருத்தியும் ஒருத்தனும் சந்தித்து ஒருவரை யொருவர் காதலிப்பதும், திட்டமிட்டபடி மீண்டும் சந்திக்க முடியாத போது வருந்துவதும் 'களவியல்' எனப்படும். ஆனால், சிலப்பதிகாரத்தில், கண்ணகியும் கோவலனும் முதன் முதல் சந்திக்குமிடம் நந்தவனமல்ல; திருமணப் பந்தலேயாம். கண்ணகி—கோவலன் திருமணம், காதல் மணமல்ல; கற்பு மணமேயாகும். ஆகவே, காதலனைக் காணாது காதலி வருந்துவதும் காதலியைக் காணாது காதலன் வருந்துவதுமான, 'களவியல்' சுவையைக் 'கானல் வரி'யில் தந்து காப்பியத்தை அழகுபடுத்துகின்றார் இளங்கோவடிகள்.

## மறைந்து கிடக்கும் உண்மை

கோவலன் மாதவியைவிட்டுப் பிரிவதற்குக் 'கானல்வரி'ப் பாட்டே காரணம் என்பர் கற்றறிந்த புலவோர். ஆனால், அது துணைக்காரணமே யன்றி முதற்காரண மன்று.

'கானல் வரி'க்கு முன்னுள்ள 'கடலாடு காதை'யில், மாதவி இந்திர விழாவில் நடனமாடுகின்றாள். அந்த நடனத்தைக் கண்டு ஆடவர்க ளெல்லாம் ஆனந்த மெய்துகின்றனர். தனக்கே யுரிய மாதவி பிற ஆடவருக்கும் ஆனந்த மளிப்பது கண்டு கோவலன் வெறுப்புக் கொள்கிறான். மாதவியின் ஆடற்கலை எல்

லோரும் கண்டுகளிக்கக்கூடியதே என்றாலும், அவளது அங்கங்களின் அழகைக் கண்டு களிப்பதற்கு உரிமை பெற்றவன் கோவலன் ஒருவனே யல்லவா ? ஆகவே, மாதவியின் ஆடல்-பாடலோடு அவளது அழகையும் எல்லோரும் கண்டு களிப்பது கோவலனுக்கு எரிச்சலை மூட்டியது. 'பரத்தை ஒருத்தியைக் காதலியாகக் கொண்டதன் பலனன்றோ இது' என எண்ணி, மாதவியோடு ஊடல் கொள்கிறான் கோவலன். 'கடலாடு காதை'யிலுள்ள,

ஆடலும் கோலமும் அணியுங் கடைக் கொள
ஊடற் கோலமோ(டு) இருந்தோன்...

என்ற வரிகளே இதற்குச் சான்றாகும்.

மாதவியின்பால் வெறுப்புக் கொண்டதன் விளைவாகக் கண்ணகியிடம் விருப்பம் தோன்றுகிறது கோவலனுக்கு. பிற ஆடவரும் கண்டு களிக்க ஆடல் புரியும் மாதவிக்கும் கோவலனன்றிப் பிற ஆடவனின் நெஞ்சு புகாத கற்பினளாகிய கண்ணகிக்கும் உள்ள வேற்றுமையை உணருகிறது கோவலனின் உள்ளம். இதைக் 'கானல் வரி'யில் வெளிப்படுத்துகின்றான் கண்ணகியின் காதலன்.

"காவிரிப் பெண்ணே! உனக்கேயுரிய சோழ மன்னன் கங்கை என்னும் நங்கையைப் புணர்ந்தாலும், நீ அவனை வெறுக்கின்றா யில்லை. கணவன் தன்னைப் பிரிந்த காலத்திலும் அவனை வெறுக்கா திருப்பதே பெண்ணினத்தின் கற்புநெறி என்பதை உன்னால் அறிந்தேன். நீ வாழ்வாயாக!'' எனக் கூறுமிடத்து, காவிரி என்ற பெயரால் கண்ணகியினுடைய கற்பின் பெருமையைப் போற்றுகிறான் கோவலன்.

கோவலன் பாடும் வரிப் பாடலில், 'திங்கள் மாலை வெண் குடையான்' என்று துவங்கும் முதற் பாடல்,

மற்ருெரு உண்மையையும் நமக்கு உணர்த்திவைக் கிறது. "காவிரி நாடே! உனக்கே உரிய மன்னன் கங்கை நாட்டைக் கட்டியாண்டாலும் — அங்கேயே காலங் கழித்தாலும், அரசனில்லா நாட்டில் விளையும் அராஜக நிலையை நீ அடைகின்ருய் இல்லை. அரசனில் லாத காலத்திலும் அமைதி நிலவும் நிலமே 'நாடு' எனப்படும் என்ற உண்மையை உன்னுல் அறிந்தேன். நீ வாழ்வாயாக!'' என்பது அந்தப்பாடலில் பொதிந்து கிடக்கும் மற்ருெரு பொருளாகும்.

அடுத்து வரும் இரண்டு பாடல்களிலும் இதே போன்று கண்ணகியின் கற்பையும், காவிரி நாட்டு மக்களின் ராஜபக்தியையும் சிலேடையாகச் சித்தரிக் கிருன் மாசாத்துவான் மகன். கானல் வரிப் பாடலின் கருத்தை நுட்பமாக ஆராய்ந்தால், கண்ணகியை நினைந்து வாடும் தனது உள்ளத்தின் நிலையையே கோவலன் உணர்ச்சி ததும்ப வெளிப்படுத்தினுன் என்ற உண்மை புலப்படும். இந்த உண்மையை அறிந்துகொள்ளாத மாதவி, கோவலன் வேருெருத் தியை நினைந்து நெஞ்சுருகப் பாடினுன் என எண்ணி அவனேடு ஊடல் கொண்டாள். அந்த ஊடல் தான் கோவலன்-மாதவி உறவை முறித்தது.

## கண்ணகியும் அருந்ததியும்

கண்ணகி—கோவலன் திருமணத்தைக் கூறு மிடத்து சில புது நெறிகளை அறிமுகப்படுத்துகின்ருர் இளங்கோவடிகள்.

கண்ணகியாரின் திருமணச் செய்தியை இளமங் கையர் இருவர் யானை மீதேறிப் புகார் நகர மக்களுக் குப் புகல்கின்றனர். பின்னர்த் திருமணப் பந்தலில், மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட மணமக்கள் தீயினை வலம் வருகின்றனர்.

'இது, புதுவகைத் திருமணம்; வேத மதத்தார் கற்பித்த புரோகிதத் திருமணம்; சங்க இலக்கியங் களிலே இந்தச் சடங்குகளுக்குச் சான்றில்லை' என்பர் ஆராய்ச்சியாளர்.

இது நிற்க, கண்ணகியின் கற்பைச் சிறப்பிக்கு மிடத்து, 'அருந்ததிக்கு நிகரானவள்' எனக் கூறுகின் றார் இளங்கோவடிகள். 'அருந்ததி' என்பவள் வசிட்ட முனிவரின் மனைவி என்றும், அவள் தனது கற்பின் சிறப்பால் வானத்தின் நட்சத்திரங்களில் ஒன்றாக விளங்குவதாகவும் கூறுவர் புராணவாதிகள். வானத் தின் மீன் ஒன்றைக் கற்புக்குச் சான்றாகக் கூறும் வழக்கம் சங்க காலத் தமிழகத்திலும் உண்டென் பதை;

*வடமீன் புரையும் கற்பின் மடமொழி*
*—புறம் : **122***

*பெருநல் வானத்து வடவியின் விளங்கும்*
*சிறுமீன் புரையுங் கற்பின் நறுநுதல்*
*—பெரும்பாண் : **302-3***

*வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்*
*—கலித் : **2***

என்னும் சங்க இலக்கிய வரிகளால் அறிகிறோம். ஆனால், 'அருந்ததி' என்ற பெயரில் சங்ககாலத் திரு மணங்களில் ஒரு சடங்கு நிகழ்ந்ததாகச் சங்க நூற் கள் எதிலும் செய்தி இல்லை. சிலப்பதிகாரத்தில்தான் கண்ணகி – கோவலன் திருமணத்தில் முதன் முதலா கத் தமிழ் மக்களுக்கு 'அருந்ததி' அறிமுகப்படுத்தப் படுகின்றாள். சிலம்பிலும்,

*அங்கண் உலகில் அருந்ததி அன்னாளை*
*மங்கல நல்லமளி ஏற்றினார்......*

எனக் கூறும் இடம் தவிர வேறிடங்களில், சங்க காலப்

புலவர்களைப் போன்று, 'வடமீன்', 'சாலியொரு மீன்' என்றே குறிப்பிடுகின்றார் இளங்கோவடிகள். இதை,

*வடமீன் கற்பின் மனையுரை மகளிர்*
*வான்ஊர் மதியம் சகடணைய வானத்துச்*
*சாலி யொருமீன் தகையாள்......*

என்ற வரிகள் வற்புறுத்தும்.

சங்க இலக்கியங்களில் இல்லாத அருந்ததி, சிலப்பதிகாரத்தில் பிற்காலத்தில் புகுந்தனளோ அல்லது இளங்கோவின் எண்ணத்திலிருந்தே பிறந்தனளோ எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால், ஒன்றுமட்டும் உறுதி. மணவரையில் கற்புக்கு அருந்ததியைச் சான்று கூறும் முதற்காப்பியம் சிலம்புதான் என்பதில் ஐயமில்லை.

இந்நாளில் திருமணத்தின்போது, மணமகள் அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது வழக்கமாகிவிட்டது. ஆனால், சிலப்பதிகாரக் கண்ணகி 'அருந்ததியைப் போன்ற கற்புடையவள்' என்று பாராட்டப் பட்டாளே யன்றி, அவள் அம்மி மிதித்து அருந்ததி பார்க்க வில்லை.

## தெய்வந் தொழாத கற்பு நெறி

தமிழருக்கே உரிய தனித்த பண்பாடுகள் பல; பழக்க வழக்கங்களும் பலப்பல. அவற்றையெல்லாம் நம் சிந்தையைக் கவரும் வகையில் சித்தரிக்கிறார் சேர நாட்டுக் கவிஞர்.

தம் கருத்தைக் கவர்ந்த காதலன் ஒருவனன்றி, இன்னொரு ஆடவன், தன்னை மனத்தாலும் நினைக்க இடம் தராத பண்பு—பிறிதொருவனைத் தனது சிந்தையாலும் தொடாத செந்நெறி தமிழ்ப் பெண்ணின் கற்பு நெறியாகும். இதைப் "பிறர் நெஞ்சு புகாத கற்பு" எனப் பெருமைப் படுத்திப் பேசுகின்றது தமிழ் இலக்

கணம். அந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது கண்ணகியின் வாழ்க்கை.

## தன்மானத் தமிழன் கோவலன்

கானல் வரிப்பாட்டின் விளைவாக மாதவியைப் பிரிந்த கோவலன், நேரே கண்ணகியின் இல்லம் செல்கின்றான். சென்றவன் கலையரசியாம் மாதவியின்பால் கொண்ட மையலால் கைப்பொருள் அனைத்தையும் தொலைத்த தனது மடமையைக் கண்ணகியிடம் கூறி வருந்துகிறான். "கைப்பொருள் அனைத்தும் தொலைத்து வறியனானேன்" என்று கோவலன் கூறியதால், அவன் தன்னிடம் பொருள் நாடி வந்ததாக எண்ணுகிறாள் கண்ணகி தேவி. ஆகவே, "சிலம்புள கொள்ளுங்கள்" என்கிறாள்.

வருநிதி பிறர்க்கு வழங்கும் பெருநிதி படைத்த மாசாத்துவான் மகனா, மனைவியின் காற்சிலம்பை விற்குமளவுக்கு வறுமைப்பட்டு விட்டான்? திரை கடலோடியும் திரவியம் தேடும் மாநாய்கன் மகள் கண்ணகியா, கொடுப்பதற்கு வேறு பொருளில்லாமல், 'சிலம்புள கொள்ளுங்கள்' எனக் கூறினாள்? இந்த ஐயப்பாடுகள் நம் அகத்தே எழுகின்றன. தந்தையில்லையா, கோவலனைத் தாங்குவதற்கு? மாநாய்கன் இல்லையா, மருமகனுக்குத் துணை புரிய?—என்றெல்லாம் அங்கலாய்க்கிறது நம் அவல நெஞ்சம்.

கோவலன் கொலையுண்டதையும், கண்ணகிதேவி மதுரையை எரித்தபின்னர்ச் சேர நாடடைந்து மறைந்ததையும் கேட்ட மாசாத்துவான், தன்னிடமிருந்த செல்வத்தையெல்லாம் தானமாக வாரி இறைத்துத் துறவு நிலையை அடைந்ததாக "நீர்ப்படைக் காதை" கூறுகின்றது.

மைந்தற்கு உற்றதும் மடந்தைக்கு உற்றதும்
செங்கோல் வேந்தற்கு உற்றதுங் கேட்டுக்
கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி
மாபெருந் தானமா வான்பொருள் ஈத்தாங்கு
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் துறவி யெய்தவும்

என்ற வரிகளில், மைந்தன் கோவலனைப் பறி கொடுத்த பின்னர்த் தந்தை மாசாத்துவான் அடைந்த மன நிலையை விளக்குகின்ருர் இளங்கோவடிகள். இது போன்றே,

கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத் தாசீவகர்முன்
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்

என்கிருர் இளங்கோ. கருவிலே திருவுற்ற கண்ணகி தேவியின் பரிதாப முடிவை அறிந்த மாநாய்கன், உள்ளம் உடைந்து தான் படைத்திருந்த உடைமைகளை யெல்லாம் தானமீந்து தவக்கோலம் பூண்டுவிட்டான். ஆம்; கோவலனும் கண்ணகியும் சிலம்பை விற்கும் பொருட்டு மதுரை அடைந்த காலத்திலும், மாசாத்துவானும் மாநாய்கனும் பெருநிதிச் செல்வர்களாகவே இருந்திருக்கின்றனர். எனினும், தன்மான உணர்ச்சியுடைய கோவலன், தந்தையின் உதவியை நாடுவது இழுக்கென எண்ணினன்.

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னேற்ருன் கொல்என்னும் சொல்

என்ற குடும்ப நெறிக்கு மாறுபட்ட வாழ்க்கையுடையவன் ஆதலால், தந்தையிடம் சென்று பொருள் கேட்க நாணியது கோவலன் நெஞ்சம்.

'தோழனோடும் ஏழைமை பேசேல்' என்பது தமிழர் வழி வழி போற்றி வரும் பழமொழி. கோவலனோ, தந்தையோடும் ஏழைமை பேசுவது தவறு என எண்ணினான். ஆகவே, அப்பெருமகன் மனைவியை அணுகித் தனது கடந்த காலத் தவறுகளுக்கு மன்னிப்புக் கோரினான்; அவள் தானே விரும்பித் தந்த காற்சிலம்பை விற்று வாணிபம் செய்ய முயன்றான்; தனது நாட்டிலேயே விற்றுப் பிழைப்பதால் தன்மானத்திற்குக் கேடு விளையும் என எண்ணி அயல் நாடு சென்றான். கோவலன் மூலம் இளங்கோ உணர்த்தும் இந்தத் தன்மான நெறி, இக்கால இளைஞர்களின் கவனத்திற்கு உரியதாகும்.

## சிலம்பும் துறவும்

'துறவு' நெறி, தமிழ் இனத்தவர் தொன்று தொட்டுக் கடைபிடித்துவரும் பண்பன்று. இடைக் காலத்தில் சமய நெறி மிகுந்திருந்தபோது, பௌத்தம்—சமணம் போன்ற புறச் சமயங்களின் போதனையால், உள்நாட்டுச் சமயங்களான சைவமும் வைணவமும் கூடத் துறவு நெறியை அங்கீகரித்தன. அப்பொழுதும், மக்கள் நலனுக்காகத் தன்னலமற்றுப் பணிபுரிவதற்கென்றே மதங்கள் துறவிகளைத் தோற்றுவித்தன. இதற்கு மாறான, "ஊரும் சதமல்ல; உற்றார் சதமல்ல......தேசத்திலே யாரும் சத மல்ல" என்ற வாக்கு, வாழ்க்கையை வெறுத்தவர்களின் வறட்டு வேதாந்தமே யன்றி, வாழ்க்கை நெறியன்று.

தமிழர், காதலையும் வீரத்தையும் இரு கண்ணெனக் கருதியவர். ஆகவே, காதலைப் பழிக்கும்-வீரத்தை வெறுக்கும் "துறவு நெறி"யைத் தமிழர் அங்கீகரியாததில் வியப்பில்லை. மற்றும், பெண்ணினத்தைப் பெருமைப் படுத்துவது தமிழரின் பிறவிக் குணம். துறவு நெறியோ சமூகத்தில் சரிபாதியினரான பெண்

ணினத்தை வெறுக்கின்றது. ஆகவே, எவ்வகையில் பார்த்தாலும் வெறுப்பில் தோன்றும் துறவு தமிழர் பண்பாட்டுக்கு ஏற்றதன்று.

தமிழர், வெறுப்புத் துறவினை ஏற்காதவர் மட்டுமன்று; அதை எதிர்த்தார்கள் என்பதற்கும் எத்தனையோ சான்றுகள் உண்டு. ''கடந்த ஞானியும் துறப்பரோ தம் மக்கள்மேல் காதல்'' எனக் கூறிய தமிழறிஞர், குழவியின்பத்தைத் துறக்கும் கொள்கையைக் கண்டிப்பவரன்றோ !

*மழித்தலும் நீட்டலும் வேண்டாஉலகம்*
*பழித்தது ஒழித்து விடின்*

''உலகம் பழிக்கும் செயல்களை ஒழித்து ஒழுக்கத்தோடு வாழ்பவன், மொட்டையடித்துச் சந்நியாசியாகத் தேவை இல்லை; தாடி வளர்த்துத் தவக்கோலம் பூணவும் வேண்டியதில்லை'' என்ற திருக்குறட் கருத்தும் வெறுப்பு வழிப்பட்ட துறவை வெறுத்துப் பேசுகிறதன்றோ !

பொதுவாக, தொண்டுவழிபட்ட துறவு நெறியைச் சங்க காலத் தமிழர் வரவேற்றனர் என்பதற்குத் திருக்குறளில் வரும் 'துறவற இயல்' சான்றாகும். ஆனால், தமிழ்ப் பெண்கள் தவவேடம் பூணும் செய்தியைச் சிலப்பதிகாரத்தின் மூலம்தான் முதன் முதல் அறிகின்றோம்.

சங்ககால இலக்கியங்களில் காணாததும், தமிழர் வாழ்வில் கடைப்பிடிக்கப்படாததுமான பெண் துறவு சிலப்பதிகாரத்தில்தான் முதல் முதலாக அறிமுகப்படுத்தப்படுகிறது. பிறந்த நாடு விட்டுப் பிறநாடு செல்லும் கண்ணகியும் கோவலனும், கவுந்தியடிகள் என்னும் பெண் துறவியை இடைவழியில் சந்திக்கின்றனர். கவுந்தியடிகள் மயிற் பீலியும், மனைதோறும்

பிச்சை யெடுக்கும் பாத்திரமும் கையில் கொண்ட சம ணத் துறவியாவார்.

மாபெருந் தானமாய் வான் பொருள் ஈந்தாங்கு
இந்திர விகாரம் ஏழுடன் புக்காங்கு
அந்தர சாரிகள் ஆறைம் பதின்மர்
பிறந்த யாக்கை பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் துறவி யெய்த

என்ற சிலப்பதிகார வரிகள், கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட மாசாத்துவான், வழிவழி ஈட்டிய பொருளனைத்தையும் வறியவருக்குத் தானமீந்து புத்த மதத் துறவியானதாகக் கூறுகின்றன. ஆனால், மாசாத்துவானோடு அவன் மனைவியும் துறவுக் கோலம், கொள்ளவில்லை.

துறந்தோன் மனைவி மகன்துயர் பொறாஅள்
இறந்த துயரெய்தி இரங்கி மெய்விடவும்

என்ற வரிகளால், மாசாத்துவான் மனைவி மைந்தனை இழந்த ஏக்கத்தால் உயிர் துறந்ததாகத் தெரிகிறது. அப்படியே,

கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத்து ஆசீவகர் முன்
புண்ணிய தானம் புரிந்தறம் கொள்ளவும்

கண்ணகியின் தந்தை மாநாய்கனும், தன் மகளுக் குற்ற கொடுந்துயர் அறிந்து மனம் வருந்தியவனாய்த் தவக் கோலம் பூண்டு சமணப் பள்ளியை அடைந்த தாக அறிகிறோம். ஆனால், மாநாய்கன் மனைவி தானும் துறவு கொள்ளாது கோவலனின் தாயைப் போன்றே கொடுந்துய ரெய்தி உயிர் விடுகின்றாள். சிலப்பதி காரக் காலத்தில் பெண் துறவு அங்கீகரிக்கப்பட் டிருப்பின், கோவலன்—கண்ணகி தாயர்களும் தவக்

கோலம் பூண்டிருப்பார்கள். பெண் துறவு அங்கீகரிக்கப்படாததினுலேயே அவர்கள் "உயிர்த் தியாகம்'' புரிய வேண்டியிருந்தது போலும்!

எனவே, சிலப்பதிகாரத்தில் வரும் கவுந்தியடிகளும் மணிமேகலையும் "இளங்கோவடிகளால் சிருஷ்டிக்கப்பட்ட பாத்திரங்களா?'' எனக் கேள்வி போட்டுக் கொண்டு விடை காணவேண்டியது, ஆராய்ச்சியாளர் கடைமையாகின்றது.

சிலம்பை இயற்றிய இளங்கோவடிகளைச் சமணத் துறவியாகக் கருதுகின்றனர் சிலர். இவர்களது கூற்று, ஆராய்ச்சியினிடையே எழுந்த ஐயப்பாடேயன்றி, ஆராய்ச்சியின் முடிவன்று.

குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த
குடக்கோச் சேரல் இளங்கோ அடிகள்.

என வரும் பதிக வரிகளின் கருத்து இளங்கோவடிகள் சமணரே என்பதற்குச் சான்ருகக் காட்டப்படுகின்றது. 'கோட்டம்' என்ற சொல் சமண மடத்தைக் குறிப்பதாக நம்பப்படுகிறது. ஆனுல், சிலப்பதிகாரத்தை நன்கு ஆராயுமிடத்து, 'கோட்டம்' என்ற சொல், சகல சமய தெய்வங்களின் கோயில்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

நுதல்விழி நாட்டத்து இறையோன் கோட்டம்

எனச் சிவன் கோயிலையும்,

கோழிச் சேவற் கொடியோன் கோட்டம்

என முருகன் கோயிலையும், 'சிறையோர் கோட்டம்' என்ற வரியில் ஆட்சியின் பகைவர் அடைபட்டுக் கிடக்கும் சிறைச்சாலையையும் 'கோட்டம்' என்ற பெய

ராலேயே குறிப்பிட்டிருக்கிருர் இளங்கோவடிகள். எனவே, இளங்கோ இருந்ததாகச் சொல்லப்படும் குண வாயிற் கோட்டம் அருகன் கோயில்தான் என்று துணிவதற்கில்லை.

மற்றும் பதிக வரிகளில் வரும் ‘அடிகள்’ என்ற சொல் சமண சமயத் துறவிகளுக்கும் வழங்கி வந்த தாலும், சிலப்பதிகார ஆசிரியர், ‘அடிகள்’ எனச் சிறப்புப் பெயர் பெற்றிருப்பதாலும் அவர் சமணரே என்று கூறுகின்றனர் சிலர். ஆனுல், அடிகள் என்ற பெயர், சமணத் துறவிகளுக்கே யன்றி, இல்லறத் தாருக்கும் வழங்கப்பட்டு வந்ததாகச் சிலப்பதி காரத்தில் அறிகிரேும்.

> குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்கு
> அமுதம் உண்க அடிகள்......

எனக் கோவலனை அமுதுண்ண அழைக்கும் கண்ணகி, அவனை **அடிகள்** எனக் குறிப்பிடுவதைக் காண்கிரேும்.

இதிலிருந்து, தம்மினும் பெரியாரை அல்லது தாம் மதித்தற்குரியாரை ‘அடிகள்’ என்ற பெயரால் அழைக்கும் வழக்கம் சிலப்பதிகாரக் காலத்தில் தமிழ ரிடையே இருந்து வந்ததாகக் கூறலாம். ஆகவே, அடிகள் என்ற சொல்லைக் கொண்டு மட்டுமே, இளங் கோவடிகள் சமணத் துறவி என நிச்சயிக்க முடியாது.

மேலும், பதிகவரிகளில் சிலப்பதிகார ஆசிரியர், “**அரசு துறந்திருந்த** குடக்கோச் சேரல் இளங்கோ” என்றே குறிப்பிடப்படுகின்ருர். ஆம்; இளங்கோ, ஊராளும் உரிமையைத் துறந்தாரே யன்றி, உலகப் பற்றையும் துறந்ததாகத் துணிவதற்கில்லை.

சிலப்பதிகாரத்தின் இறுதியிலுள்ள வரந்தரு காதையில், கற்சிலை வடிவிலுள்ள கண்ணகியின் ஆவி தேவந்தியின் மேல் தோன்றி,

வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாள்நிழல் இருந்தோய் நின்னை
அரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்று
உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து
அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து......

என்று தமது வரலாற்றை உரைத்ததாக இளங்கோ வடிகளின் கூற்ருகக் குறிப்பிடப் படுகின்றது. இது தீர்ந்த உண்மையன்று.

மற்றும், சிலப்பதிகாரத்தின் இறுதிக் காதையில்

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்—

என வரும் முடிவுரைக் கருத்தும் சமண சமய நெறிகளைப் போதிப்பதாகச் சிலர் நம்புகின்றனர். இளங்கோ, சமணத் துறவி என்பதற்கு இந்த நம்பிக்கையையும் சாதகமாகக் காட்டுகின்றனர். ஆனால், சிலப்பதிகார முடிவுரையை வரிக்கு வரி கருத்தூன்றிப் படித்தால், அது திருக்குறளின் சாரமேயன்றி வேறல்ல என்பது புலப்படும்.

இதுவரை நாம் கூறியவற்றைக் கொண்டு கவனித்தால், சிலம்பு காட்டும் செந்நெறிகளுள் துறவும் ஒன்றென்று துணிவதற்கில்லை.

## சிலம்பணியின் பங்கு

மனித சமுதாயத்தின் வரலாற்றை ஆராய்ந்தால், புரட்சிகளின் வழியாகத்தான் கவிஞர்கள் அறிமுகமாகின்றனர்—காவியங்கள் தோன்றுகின்றன என்பதை அறியலாம்.

இராம—இராவண யுத்தந்தான் வால்மீகியையும் கம்பரையும் அறிமுகப்படுத்தியது.

பாண்டவர்—கௌரவர் யுத்தந்தான் வியாசரையும் வில்லியையும் தோற்றுவித்தது.

புதல்வனைப் போருக்கு அனுப்பிய வீரத்தாயின் மூலந்தான் புறநானூறு புகழ்பெற்று வருகிறது.

இந்திய விடுதலைப் போர்தான் கவியரசர் பாரதியாரைப் பெற்றுக் கொடுத்தது.

அப்படியே, கண்ணகி, மதுரையில் நிகழ்த்திய மறப்புரட்சிதான் இளங்கோவடிகளைப் புலவர் உலகம் போற்றச் செய்தது.

கண்ணகி தேவியாரின் இரு காற்சிலம்புகளை வைத்துக் கொண்டு ஓர் அற்புதமான அரசியல் புரட்சியை அறிமுகப் படுத்துகின்றார் இளங்கோவடிகள்.

கோவலன் விற்பதற்காகக் கொண்டு சென்ற ஒரு சிலம்பு, கொடுங்கோன்மை இன்னதெனப் புலப்படுத்துகிறது. கண்ணகி வசம் எஞ்சி இருந்த மற்றொரு சிலம்பு அக் கொடுங்கோன்மையைச் செங்கோன்மையாக மாற்றுகின்றது.

மற்றொரு வகையில் பார்த்தால், ஒரு சிலம்பு கோவலனைக் கள்ளனாக ஆக்குகிறது; மற்றொரு சிலம்பு அவன் கள்வனல்லன் என்பதைப் புலப்படுத்தச் சாட்சி கூறுகின்றது.

வாணிபத்தை மறந்து, வாய்த்த மனைவியைத் துறந்து மாதவியின் காதலிலேயே கட்டுண்ட காரணத்தால், கோவலன் கைப்பொருளை இழந்து வறியனாகின்றான். பின்னர், மாதவியின் மையல் தீர்ந்து, கண்ணகியாரின் இல்லமடைந்தபோது, தனக்குற்ற வறுமையை அவளிடம் கூறி வருந்துகின்றான். காதலனின் கவலையுணர்ந்த கற்பரசியார், **"சிலம்புள கொள்ளுங்கள்"** எனக் கூறுகின்றாள். ஆம், தனது காற்சிலம்புகள் இரண்டையுமே கோவலனிடம் தந்தாள் கண்ணகி. ஆனால், கொலைக் களக் காதையில்,

*கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி*
*சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு யான்போய்*
*மாறி வருவன் மயங்கா தொழி......*

எனக் கோவலன் கண்ணகியிடம் கூறுவதால், அவன் ஒற்றைச் சிலம்பையே விற்கச் சென்றான் என்பது

வெளிப்படுகிறது. மேலே நிகழும் சம்பவங்களும் இதையே உறுதிப்படுத்துகின்றன.

வறுமைப்பட்ட மக்கள் காற்சிலம்பை விற்றுப் பிழைப்பது அக்காலத்தில் மட்டுமல்ல; இக்காலத்திலும் உண்டு. ஆனால், எக்காலத்திலும் சரி, மகளிர் காற்சிலம்புகள் இரண்டினுள் ஒன்றை வீட்டில் வைத்து மற்றொன்றை விலை கூறியதை நாம் கேட்டதில்லை. ஒரு காலுக்கு மட்டும் சிலம்பு அணியும் வழக்கம் திருமணமான தமிழ்ப் பெண்களிடம் இருந்ததாகவும் தெரியவில்லை. ஆகவே, கோவலன் தான் எண்ணிய படியே ஒரு சிலம்பை விற்றிருப்பினும், மற்றொரு சிலம்பைக் கண்ணகி தேவியார் அணிந்து கொள்ள இயலாது.

அப்படி இருந்தும், கோவலன் ஒரு சிலம்பை மட்டும் விற்கச் சென்ற நுட்பம் நூலில் வெளிப்படப் புலனாகவில்லை. கோவலன் இரண்டு சிலம்புகளையும் விற்க முயன்றிருப்பானாயின், பொற்கொல்லன் அவனைக் கள்வன் எனக் கூறத் துணிந்திருக்க முடியாது. ஒற்றைச் சிலம்பை விற்க முயன்றதே பொற்கொல்லனின் சதிக்குச் சாதகமாகி விட்டது. என்றாலும், கதை நிகழும் போக்கிலிருந்து ஓர் உண்மையை உணர்ந்து கொள்கிறோம். அதாவது கண்ணகி வசமிருந்த ஒற்றைச் சிலம்புதான் கோவலன் நிரபராதி என்பதை நிரூபிக்கிறது. அந்தச் சிலம்பு இல்லையேல், கதையின் போக்கே மாறி இருக்குமல்லவா?

## கணவன் பெயர் கூறும் கண்ணகி!

சிலப்பதிகாரத்தில் மற்றொரு சிறந்த நெறியைக் காண்கிறோம். இக்காலத்தில் தமிழ்ப் பெண்கள்—குறிப்பாக இந்துப் பெண்கள், கணவன் பெயரைக் கூறுவது வழக்கமில்லை. பிறிதொருவர் துணியின்றி,

தாமே கணவன் பெயரைக் கூறவேண்டிய கட்டாயம் ஏற்படும்போது கூட, நம் தமிழ்ப் பெண்கள் கணவன் பெயரைக் கூறுவதில்லை.

ஆனால், சிலப்பதிகாரக் காலத்துத் தமிழ்ப் பெண்களிடம் இந்த 'வைதிகம்' இருந்ததாகத் தெரியவில்லை.

வழக்குரை காதையில் தன்முன் நிற்கும் கண்ணகி தேவியை நோக்கி, ''கண்களில் நீர் பெருக என் முன் நிற்கும் பெண்ணணங்கே நீ யார்?'' எனக் கேட்கின்றான் பாண்டிவேந்தன். அவனுக்குப் பதிலளிக்குமிடத்து,

நின்பால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி

எனத் தன் காதலன் பெயரைக் கூறி, தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள் கண்ணகி.

இதிலிருந்து, சிலப்பதிகாரக் காலத்துப் பெண்களிடம் கணவன் பெயரைக் கூறும் வழக்கம் இருந்ததாக அறிகிறோம்.

ஆனால், கொலைக்களக் காதையில் மாதிரி இல்லத்தில் தனது கையாலேயே உணவு சமைத்த பின்னர், உண்ண வரும்படி கோவலனை அழைக்கு மிடத்து, 'அமுத முண்க அடிகள்' எனக் காதலனைப் பெயரிட்டு அழைக்காமல் 'அடிகள்' எனப் பெருமைப்படுத்திக் கூப்பிடுகிறாள் கண்ணகி.

இதனால், கணவன் முன்னிலையிலேயே அவனைப் பெயரிட்டு அழைக்கும் வழக்கம், முற்காலத் தமிழ்ப் பெண்களிடமும் இருந்ததில்லை எனத் தெரிகிறது.

## கூந்தலை விரித்துப் போர்ப் பிரகடனம்!

கற்புடைப் பெண்டிரின் கூந்தலை அவர்தம் கணவரேயன்றி, பிறிதொரு ஆடவர் கையாலும் தொடக்

கூடாதென்பது பாரத நாட்டின் பண்பு. பாண்டவர் தேவியான திரௌபதியின் கூந்தலை, துச்சாதனன் தொட்டு இழுத்ததுதான் பாரதப் போர் துவங்கக் காரணமாயிற்று. ‘‘பாவி துச்சாதனனால் அவிழ்க்கப் பட்ட எனது கூந்தலை, அவனது இரத்தத்தை எண்ணெயாகவும் எலும்பைச் சீப்பாகவும் கொண்டு வாரி முடிக்கும் காலம் வந்தாலன்றி இடையில் முடிக்க மாட்டேன்’’ என்று வஞ்சினம் கூறினாள் திரௌபதை.

கண்ணகி தேவியாரும், கோவலன் தன்னைப் பிரிந்து மாதவி இல்லத்தில் வாழ்ந்த காலையில்,

*மைஇரும் கூந்தல் நெய்யணி மறப்ப*

கறுத்து, நீண்ட தனது கூந்தலுக்கு நெய் பூசி அழகு செய்யாது கவலையோடு காலங் கழிக்கின்றாள்.

கோவலன் கொலையுண்ட செய்தியறிந்த பின்னர்க் கோபாவேசங் கொண்ட கண்ணகி தேவியார், கூந்தலை விரித்த கோலத்துடன்,

*காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்*

‘‘எனது காதலனைக் கொன்ற கொடுங்கோல் அரசை அழித்தாலன்றி, என் சீற்றம் தணியாது’’ எனச் சூளுரை கூறுகின்றாள். ஆம், வாளுயர்த்திச் சபதம் செய்வது படைவீரர்களின் வழக்கம். அது போலவே, கூந்தலை விரித்துக் கொள்கையைப் பிரகடனம் செய்வது மங்கையர்களின் மரபு போலும்!

விரிந்த கூந்தலுடன் வீராவேசம் கொண்டு தன் முன் நிற்கும் கண்ணகியைக் கண்ட பாண்டியன் நிலையைக் கூறுமிடத்து,

மெய்யிற் பொடியும் **விரித்த கருங்குழலும்**
..... *கண்டளவே தோற்றான்*

காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலாளுன் கூடாயி ளுன்

என்று குறிக்கின்றன சிலப்பதிகார வெண்பாக்கள்.

இந்தக் காலத்திலும் பெண்கள் கூந்தலை விரித்திருக்கக் கண்டால், "அம்மா, கூந்தலை அலைய விடாதே; குடித்தனத்திற்கு ஆகாது" என்று வயதான பெண்கள் எச்சரிக்கை செய்யக் கேட்கிறோம்.

பொதுவாக சிலப்பதிகாரம் போதிக்கும் செந்நெறிகள் பலப்பல. அவையனைத்தும் தமிழ் இனத்தவர் கடைப் பிடித்த தனி நெறிகள். பிற இனத்தவரும் பின்பற்றத் தக்க பொது நெறிகள் என்றுஞ் சொல்லலாம்.

# காப்பிய உலகில் சிலம்பு



# குறளும் சிலம்பும்

திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் தமிழ் அன்னையின் இரு கண்கள் எனப் போற்றத்தக்க பெருமை படைத்தவர்கள். இவ்விரு பெரும் புலவர்களும் சமய வேற்றுமை கடந்த சமுதாய அறிஞர்களாவர். வள்ளுவர் குறளும், இளங்கோவின் சிலம்பும் மனித சமுதாயம் முழுவதுக்குமே பயன்படத் தக்க பேரிலக்கியங்கள். முன்னது, வாழ்வின் இலக்கணம்; பின்னது, வரலாற்றின் வழிவந்த இலக்கியம். ஆம், மக்கள் எப்படி வாழவேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்தார் திருவள்ளுவர். மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்ற செய்திகளைத் திரட்டி அதை இலக்கியமாக்கினர் இளங்கோவடிகள். பண்புடையாளர் தொடர்புக்குப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் நயம் தரும் நூலைச் சான்ருகக் கூறினர் திருவள்ளுவர். அவர் கூறியாங்கு, நவில்தொறும் நவில்தொறும் நயந்தரும் நூற்களில் தலையாயது சிலப்பதிகாரம். அதனுற்ருன்; ''அறிவை அள்ளும்......'' என்று கூருது, ''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'' எனக் குறிப்பிட்டார் பாரதியார். மனிதனுக்கு அறிவு—மனம் ஆகிய இரண்டும்

தேவை. அதுபோல, மனித சமுதாயம் முழுவதுக்குமே குறளும் சிலம்பும் தேவைப்படுகின்றன.

சிலப்பதிகாரம், சரித்திர நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு, ஓரளவு கற்பனைகளும் கலந்து எழுதப்பட்ட ஒப்பற்ற காவியம். ஆயினும், பாத்திரங்களின் குணச்சித்திரங்கள் பெரும்பாலும் ''வள்ளுவர் வழி''யில் வரையப்பட்டனவாகும். சம்பவங்களின் இடை இடையே கவிஞர் இளங்கோ கூறும் நீதி போதனைகளும் அத்தகையனவே.

## நாடு

ஒரு நல்ல நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுமிடத்தில்,

*உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு*

எனக் கூறுகின்றது திருக்குறள். அதையே,

*பசியும் பிணியும் பகையும் நீங்கி*
*வசியும் வளனும் சுரக்க............*

என்று, 'இந்திர விழவூரெடுத்த காதை'யில் சோழ மன்னனை மக்கள் வாழ்த்தியதாகக் குறிப்பிடுகின்றார், இளங்கோவடிகள்.

## பெண்

திருக்குறளில் 'பெண்' என்னும் சொல்லுக்குக் குணச்சித்திரம் தீட்டிக் காட்டுகின்றார் திருவள்ளுவர். அந்தச் சித்திரமே ஒரு பெண்ணுருக் கொண்டு, கண்ணகியாகச் சிலப்பதிகாரத்தில் காட்சியளிக்கின்றது.

*தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்*

என்ற ஒரு குறள் கண்ணகியின் வரலாறு முழுவதையும் விளக்கவல்ல சூத்திரமாக அமைந்திருக்கின்றது.

**தற்காத்து......**

கணவன் தன்னை விட்டுப் பிரிந்திருந்த போது அணிகலன்களைக் களைந்து, அலங்காரங்களைத் துறந்து, கழுத்தில் மங்கல அணியையும் கருத்தில் காதலன் நினைவையும் அன்றி வேறொன்றை வேண்டாதவளாய் வேதனையோடு காலம் கடத்தினுள் கண்ணகி. ஆம், கற்புடைய மகளிர்க்குரிய பண்புகள் அனைத்தையும் பாதுகாத்து வாழ்ந்தாள் பூம்புகார்ப் பத்தினி.

**தற்கொண்டான் பேணி...**

பின்னர், கோவலன் மாதவியைப் பிரிந்து தன்னை அடைந்த காலை, “கைப்பொருளெல்லாம் இழந்து வறியனுனேன்!” எனக் கூறி அவன் வருந்தியபோது, “சிலம்புள கொள்ளுங்கள்” எனக் கூறித் தன் காற் சிலம்புகளைக் கோவலன் கையிற் கொடுத்துத் தன்னை மணந்த காதலனின் கவலையைப் போக்கிக் களிப்பூட்டினுள் கண்ணகி தேவி.

**தகைசான்ற சொற்காத்தாள்**

கோவலன், இருநிதிக் கிழவன் மாசாத்துவான் மகன்; கண்ணகி, பெருநிதிக் கிழவன் மாநாய்கன் மகள். இவ்விரு செல்வரும் செங்கோல் பிறழாச் சோழ மன்னனின் குடிகள். இவ்வளவு புகழையும் தனது பொய்ம்மொழி ஒன்றினுல் போக்கி விட்டான் பாண்டி நாட்டுப் பொற்கொல்லன். அதனுல், சோழ நாட்டுக் குடிமகனுன கோவலன், பாண்டி நாட்டில் ‘கள்வன்’ என்ற பழிச்சொல் பெற்றுவிட்டான். கண்ணகி தேவியும், ‘கள்வனின் மனைவி’ என்ற இழிச் சொல்லுக்கு

இரையாகி விட்டாள். ஆம், தலைமுறை தலைமுறை யாக அவர்கள் பெற்றிருந்த தகைசான்ற பெருமை யெல்லாம் தகர்ந்து விட்டது. அந்த நிலையில், வீரக கண்ணகி தனது அறிவாலும் ஆற்றலாலும் தனக்கும் தன் காதலனுக்கும் நேர்ந்த பழியைப் போக்கிப் பழம் பெருமையை நிலை நாட்டினுள்.

ஆம்; கணவன் பிரிந்திருந்த காலை, பெண்மைக் குத் திருக்குறள் கூறும் இலக்கண வழித் தனது கற் பைக் காத்தாள்; மீண்டும் அவன் தன்னை யடைந்து 'வறுமையுற்றேன்' எனக் கூறி வருந்திய போது, சிலம்பைக் கொடுத்துத் தன் கணவனைப் பேணினுள்; பாண்டி நாட்டில், தனக்கும் கணவனுக்கும் உற்ற இழிச்சொல் போக்கி, தன் குடிப் பெருமையைப் பாது காத்தாள்.

## கணவனே தெய்வம்

கணவனையே தெய்வமாகக் கருதுவதும், தெய் வமே ஆயினும், பிறிதொரு ஆடவரை நெஞ்சாலும் தீண்டாததும் பண்டைத் தமிழ்ப் பெண்ணின் பண் பாடு. இதை,

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை

என்கிற குறளில் வற்புறுத்துகின்ருர் திருவள்ளுவர்.

சிலப்பதிகாரம், 'கனுத்திற முரைத்த காதை'யில், கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகியை நோக்கி, "காமன் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் நீ உன் கணவனை அடைவாய்" என்று தேவந்தி என்பாள் கூறியபோது, "அச்செயல் எம் குலத்துக்குப் பெருமை தருவதன்று" என மறுத்துரைக்கிருள் மாநாய்கன் மகள்.

## குடிமக்கள் கண்ணீர்

அரசன் செங்கோல் பிறழ்ந்தால், அக்கணமே ஆட்சி அழியுமென்பது திருக்குறளின் தீர்ப்பு. செங் கோல் பிறழ்ந்த வெங்கோலன் ஆட்சியில் மக்கள்,

*அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை*

என்கின்ருர் திருவள்ளுவர். இந்தக் குறளின் கருத்தை மட்டுமன்றி, சொற்களையும் தழுவி, ''அல்லலுற்று ஆற்ருது அழுவாளை''க் கண்ணகி வடிவில் காட்டு கின்ருர் இளங்கோவடிகள். மற்ருேரிடத்திலும்,

*மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்*
*கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்......*

என்ற வரிகளில், கொடுங்கோல் வழிப்பட்ட பாண்டிய னுக்குக் கண்ணீருடன் காட்சியளித்த கண்ணகியின் தோற்றத்தைச் சித்திரம் தீட்டிக் காட்டுகிருர். ''ஏழை கள் அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்'' என்பது பழமொழி. இப் பழமொழியையும், மேலே சொன்ன குறள் வழியையும் தழுவி, ''கண்ணகி தன் கண்ணின் நீர், கொல்ல உயிர் கொடுத்தான் கோவேந்தன்'' என் கிறது சிலப்பதிகாரம்.

## பழிச் சொல்

ஒரு நாட்டின் குடிமக்கள், நாட்டு மன்னன் நல்வழி விட்டு அல்வழிப்படும்போது, ''எமது மன்னன் கொடி யவன்'' எனக் கூறிப் பழிதூற்றுவாராயின், அப்பழிச் சொல்லே அரசனுடைய ஆயுளை முடிக்கும் ஆயுதமாகி விடும் என்கிறது திருக்குறள். இதை,

*இறைகடியன் என்றுரைக்கும் இன்னுச்சொல் வேந்தன்*
*உறைகடுகி ஒல்லை கெடும்.*

என்ற குறளால் அறிகின்றோம். சிலப்பதிகாரத்திலும், குற்றமற்ற கோவலனைக் கொன்ற பாண்டியனை, ''மன்பதை அலர் தூற்றும் மன்னவன்'', ''மறனெடு திரியுங்கோல் மன்னவன்'' ''செம்மையின் இகந்த கோல் தென்னவன்'' என்றெல்லாம் பழித்துப் பேசுகின்றாள் கண்ணகி. ஊர்சூழ் வரியில், ''முறையில் அரசன்றன் ஊர்'', ''வைவாளில் தப்பிய மன்னவன் கூடல்'' என மதுரை நகரையும் பழி தூற்றுகின்றாள் கற்புக்கரசி கண்ணகி தேவியார். 'இறை கடியன்' என்றுரைத்த வன்சொல்லே பாண்டியனைக் கொன்றது என்பதை,

> கண்ணகிதன் சொல்செவியில் உண்டளவே
> தோற்றான் உயிர்

என்ற வரிகளில் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

## கற்பு—இரு பாலாருக்கும்

கற்பு நெறி பெண்ணுக்கே உரித்தென்பர் பிற்கால மக்கள். அஃது, ஆணுக்கும் தேவை என்றனர் முற்காலப் புலவர்கள். ஆம், ஆண் பெண் ஆகிய இரு பாலாரில் யார் கற்பு நெறிதவறினாலும், அவர் சார்ந்துள்ள சமுதாயமே சீரழிவது திண்ணம். ஆகவே, 'ஒருத்திக்கு ஒருத்தன்' என்ற பெண் கற்பு தேவைப் படின், 'ஒருத்தனுக்கு ஒருத்தி' என்ற ஆண் கற்பும் தேவையாகும். ஆண் கற்பின் அவசியத்தை முதன் முதலில் வற்புறுத்தியவர் திருவள்ளுவரே யாவார்.

திருவள்ளுவர் காலம் வரை, 'பரத்தையர் நட்பு' கூடா நட்பாகக் கூறப்படவில்லை. ஆடவரில் அரசர் முதல் குடிமக்கள் ஈறாகத் தமிழ் மக்களில் பலர் பரத்தையர் நட்பை விரும்பி மகிழ்ந்ததற்கு இலக்கியச் சான்றுகள் உள. திருக்குறள் தோன்றிய பிறகே,

பரத்தையர் நட்புப் பாவச் செயலாக, பல கொடுமைகளுக்குத் தோற்றுவாயாக இருப்பதை நாடு உணர்ந்தது. அதை உணர்த்தி வைத்த பெருமை திருக்குறள் பொருட்பாலில் வரும் ''வரைவின் மகளிர்'' என்ற அதிகாரத்திற்கே உண்டு.

சிலப்பதிகாரத்திலும், திருக்குறளைப் பின்பற்றி ஆண் கற்பின் அவசியத்தை வற்புறுத்தி யிருக்கின்ருர் இளங்கோவடிகள். இருந்தும் சிலப்பதிகாரம் பெண் கற்பை மட்டுமே வலியுறுத்தும் காப்பியம் என்று எண்ணுகின்றனர் சிலர். இது பிழையாகும். கண்ணகிக் காப்பியத்தை நுணுகி ஆராய்வோருக்கு, அது ஆண் கற்பின் அவசியத்தையும் வற்புறுத்துவது புலனுகும்.

'கனுத்திற முரைத்த காதை'யில் மாதவியைப் பிரிந்து கண்ணகியை வந்தடையும் கோவலன், ''பரத்தையான மாதவியோடு கூடி வாழ்ந்து கைப் பொருளெல்லாம் தொலைத்து வறுமையுற்ற என் செயலுக்காக நான் வெட்கப்படுகின்றேன்'' என்கின்ருன். மேலும், அடைக்கலக் காதையிலும், வம்பப் பரத்தையோடு வாழ்ந்த இழி நிலைக்காகக் கண்ணகியிடம் வருத்தம் தெரிவிக்கின்ருன். கண்ணகியும், ''போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்'' என்று கணவன் செயலைக் குறை கூறிப் பேசுகின்ருள்.

தமிழ் மொழியின் வரலாற்றிலேயே ஆண் கற்பின் அவசியத்தை வற்புறுத்திய முதல் நீதி நூல் திருக்குறள்; கற்பிழந்த ஆண் மகனுல், அவன் மனைவி, குடும்பம், நாடு, அரசு, ஆகிய அனைத்துக்கும் நேர்ந்த கேடுகளை விரித்துரைக்கும் முதல் காப்பியம் சிலப்பதிகாரம்.

திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் பின்பற்றிக் கம்பரும்,

இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன்

என்று, இராமன் சீதையிடம் கூறியதாக, நெஞ்சாலும் பிறிதொரு மாதரை நினையாத ஆண் கற்பை வலியுறுத்துகின்றார்.

கற்பு நிலையென்று சொல்ல வந்தார்
இரு கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்

என்ற வரிகளில் பெண் கற்போடு ஆண் கற்பின் அவசியத்தையும் வற்புறுத்தினார், பாரதியார்.

## பண்புடைய வேந்தன்

திருவள்ளுவர், அரசனுக்கு இலக்கணம் கூறுகையில் காட்சிக்கு எளியனாகவும், கடுஞ்சொல் பகராது இன்சொல் இயம்புவோனாகவும், செவிகைக்கும் சுடு சொற்களையும் பொறுத்து நீதி வழங்குவோனாகவும் இருப்பவனே **பண்புடைய வேந்தன்** என்றார். வள்ளுவர் கூறும் இந்த இலக்கணங்களுக்கு ஏற்ற இலக்கியமாக இருந்தான் பாண்டி வேந்தன் நெடுஞ்செழியன்.

தன்னிடம் முறையிட்டுக்கொள்ளக் கண்ணகிதேவி அரண்மனை வாயிலை அடைந்திருப்பதை அறிந்ததும், "அவளை இங்கு அழைத்து வருக!" என்று வாயில் காவலனுக்கு ஆணையிடுகின்றான். இதனால், பாண்டியன் நெடுஞ்செழியன் குடிமக்களின் காட்சிக்கு எளியவன் என்பதையும்; தம்முன் நின்ற கண்ணகி, "தேரா மன்னா"— "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" என்றெல்லாம் தன்னைப் பழித்துப் பேசியதைப் பொறுத்ததால், "செவி கைப்பச் சொற் பொறுக்கும் பண்புடையாளன்" என்பதையும்; கண்ணகி ஆவேசம் கொண்டு சினந்து பேசிய போதும், "பெண்ணணங்கே! கள்வனைக் கோறல் கடுங்கோலன்று;

வெள்வேற் கொற்றங்காண்'' என்று இனிய சொற்களால் தனது நிலையை உணர்த்தியதால், ''கடுஞ்சொல்லன் அல்லன்'' என்பதையும் அறிகிறோம்.

## நா காக்க

திருக்குறளில், ''யாகாவா ராயினும், நா காக்க'' என்று உபதேசம் செய்கிறார் திருவள்ளுவர். வள்ளுவர் சொல் வழி நா காவாக் காரணத்தால், ஆரிய மன்னர் கனக — விசயருக்குற்ற அல்லல்களை விளக்குகின்றார் இளங்கோவடிகள்.

திருக்குறளும் சிலப்பதிகாரமும் தமிழ் இனத்தின் தனிச் செல்வங்கள். அவற்றைப் போற்றிக் காப்பதும், அந்த நூல்கள் கூறும் நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்வதும் தமிழர் கடமையாகும்.

# மேகலையும் சிலம்பும்

இளங்கோவடிகள் அருளிய சிலப்பதிகாரமும், கூலவாணிகன் சாத்தனுர் இயற்றிய மணிமேகலையும் தமிழ் ஐம்பெரும் காப்பியங்களைச் சேர்ந்தவையாகும். ஏனைய மூன்று காப்பியங்களினும், சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே இலக்கிய உலகில், பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன.

## அற்புதங்களைக் கூறும் கற்பனைக் காவியம்

சிலப்பதிகாரம், பெரும்பாலும் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறும் வரலாற்று நூல் என்றே மதிக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். இங்குமங்குமாக மிகக் குறைந்த அளவிலேயே கற்பனைச் சம்பவங்கள் கலந்திருக்கின்றன. சான்ருக, கண்ணகிக்குக் கதிரவன் சாட்சி கூறுவது, வெட்டுண்ட கோவலன், கண்ணகி தொட்ட அளவிலேயே உயிர் பெற்றெழுவது, செங்குன்றத்தின் மீது நின்ற கண்ணகியை இந்திரன் தமர் வந்து வானுலகம் இட்டுச்செல்வது போன்றவை காவியத்தை அழகு படுத்தும் கற்பனைகளே யன்றி, கண்ணுற் கண்ட நிகழ்ச்சிக ளல்ல.

ஆனால், கோவலன் மாதவியின்மீது கொண்ட மையலால் மனையாளை மறந்தது, கானல்வரிப் பாடல் காரணமாக மாதவியைத் துறந்தது, மீண்டும் மனையாளை நாடுவது, கண்ணகியின் காற்சிலம்பை விற்க மதுரையடைந்து மன்னன் இழைத்த தவறால் உயிரிழப்பது, பின்னர்க் கணவனை இழந்த கண்ணகி ஆத்திரம் கொண்டு நெடுஞ்செழியனின் அரசை அழிப்பது முதலியன நடக்க முடியாதவை அல்ல. ஆகவே, சிலப்பதிகாரத்தை வரலாற்று நூலாகக் கொள்வதில் பிழையில்லை.

மணிமேகலைக் காப்பியத்தின் கதை அமைப்பை நோக்குமிடத்து, அதைக் கற்பனைக் காவியமாக அல்லாமல் வரலாற்று நூலாகக் கொள்வதற்கில்லை. மணிமேகலா தெய்வமும், அமுதசுரபி என்னும் அதிசயப் பாத்திரமும் இல்லையானால் மணிமேகலை என்ற காப்பியமே இல்லையெனலாம். ஆம். மணிமேகலா தெய்வம் நிகழ்த்தும் அற்புதங்களால்தான், மணிமேகலை உதயகுமாரனின் மோக வலையினின்றும் தப்புவதோடு, புத்த பீடத்தைத் தரிசிக்கவும் முடிகின்றது. மற்றும், அமுதசுரபியின் சக்தியால்தான் மக்கள் மனத்தைக் கவரும் அற்புதங்கள் செய்கிறாள் மணிமேகலை. அறிவுக் கண்கொண்டு ஆராய்வோர்க்கு மணிமேகலா தெய்வமும், அமுதசுரபியும் கற்பனைப் பாத்திரங்கள் என்பது புலனாகும். இம் முடிவை ஏற்றுக் கொண்டால் மணிமேகலைக் காவியம் கூலவாணிகன் சாத்தனாரின் கற்பனையேயன்றி நிகழ்ந்த வரலாறு அன்று என்பது தெளிவு.

சிலப்பதிகாரக் கதையில் இங்கும் அங்குமாக உள்ள கற்பனைகளைக் களைந்துவிட்டுப் பார்த்தாலும் கண்ணகியின் அரசியல் புரட்சி வரலாற்றுச் சம்பவங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகவே

காணப்படுகின்றன. ஆம், கற்பனைகளை அகற்றி விட்டாலும், சிலப்பதிகார மாளிகை கட்டுக்கோப்புக் குலையாமல் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. ஆனால், மணிமேகலைக் காப்பியம், கற்பனைகளையே அஸ்திவாரமாகக் கொண்ட மாளிகையாதலால், அவற்றை அகற்றிவிட்டுப் பார்த்தால் கதையின் கட்டுக்கோப்புக் கலைந்து விடுகிறது.

## சிலப்பதிகாரத்தில் மணிமேகலை

மணிமேகலை என்பாள், கோவலன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஆடலரசி மாதவியின் அருமைப் புதல்வி என்கிறார் புலவர் சாத்தனார். ஆனால், சிலப்பதிகாரத்தில், மாதவிக்குப் பெண் பிறந்த செய்தி உரிய இடத்தில் உணர்த்தப்படவில்லை என்பது இங்கே கவனிக்கத் தக்கது. கோவலன் மாதவியுடன் கூடி வாழ்ந்ததை அரங்கேற்றுக் காதை முதல் வேனிற் காதை வரையுள்ள ஆறு காதைகளில் விரிவாகக் கூறுகின்றார் இளங்கோவடிகள். இந்தக் காதைகள் எதிலும் மணிமேகலையின் பிறப்பு கூறப்படவே இல்லை. மேலும், மனம் வேறுபட்ட காரணத்தால் கோவலன் தன்னைப் பிரிந்த பின்னர், அவனுக்கு இருமுறை கடிதம் எழுதுகின்றாள் மாதவி. அந்தக் கடிதங்களில், கோவலன் தன்பால் கொண்ட கோபத்தைத் தணிவிப்பதற்கான தந்திரங்களனைத்தையும் கையாள்கிறாள். அக் கடிதங்களிலேனும், கோவலனின் ஒரே புதல்வியான மணிமேகலையை நினைவூட்டி அவனது மனத்தை மாற்ற முயன்றிருப்பா ளல்லவா? கடந்த ஞானியாயினும் தாம் பெற்ற மக்களைக் காதலியாதிருப்பது தமிழர் மரபல்லவே! ஆனால், சிலப்பதிகாரத்தில் அப்படியெல்லாம் ஒன்றும் நிகழவில்லை. 'அடைக்கலக் காதை'யில் மாதவிக்கு மணிமேகலை பிறந்த செய்தியை முதன் முதல் மாடலமறையோன் சொல்லக்

கேள்விப் படுகிறோம். அங்கும் கதை சொல்லுகிற போக்கில் கோவலனிடமே சொல்லுகிறான் மாடலன்.

இவற்றை யெல்லாம் நோக்குமிடத்து, இளங்கோ வடிகளின் அனுமதியின்றியே மணிமேகலை சிலப்பதி காரத்துக்குள் புகுந்தாளோ என்று ஐயப்பட வேண்டி யிருக்கிறது.

## இரட்டைக் காப்பியம்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமிழன்னை ஏக காலத்தில் பெற்றெடுத்த இரட்டைக் குழவிகளாக எண்ணப்படுகின்றன. சிலப்பதிகாரப் பதிகத்தின் இறுதியில்,

*உரைசால் அடிகள் அருள மதுரைக்*
*கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்*

என வருவதாலும், மணிமேகலைப் பதிகத்தின் இறுதி யில்,

*இளங்கோ வேந்தன் அருளிக்கேட்ப*
*வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்*
*மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு*
*ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தினன்*

என இருப்பதாலும், இவ்விரண்டு காப்பியங்களும் ஒரே காலத்தில் வாழ்ந்து ஒத்த கருத்துக் கொண் டிருந்த புலவர்களால் இயற்றப்பட்டனவாக எண்ணு வதற்கு இடமாயிற்று. இந்த எண்ணமே, இந்த இரு பெருங் காவியங்களுக்கும் உள்ள அடிப்படை வேற்று மைகளை மறைத்து நிற்கும் திரையெனத் திகழ் கின்றது. இந்தத் திரையை விலக்கிப் பார்த்தால், மணிமேகலைக் காப்பியம், சிலப்பதிகாரத்தின் அடிப் படைக் கொள்கைகளுக்கு மாறுபட்ட நெறிகளை வற் புறுத்துவது புலனாகும்.

## வேற்றுமைகள் இரண்டு

சிலம்புக்கும் மேகலைக்கும் உள்ள வேற்றுமைகள் பல. அவற்றில் முக்கியமானவை இரண்டு. ஒன்று, நாட்டியத்தைப் பற்றியது. மற்றொன்று, கண்ணகி அரசியல் புரட்சி பற்றியது.

சிலப்பதிகார வரலாறு, கண்ணகி—கோவலன் திருமணம் என்னும் மங்கலச் சடங்குக்குப் பிறகு, மாதவியின் ஆடல் பாடலோடு ஆரம்பமாகிறது. சோழ மன்னன் மாதவிக்குப் பச்சை மாலையும் பட்டமும் பரிசும் தந்து பாராட்டுகின்றான். அரங்கேற்றுக் காதையில், ஆடற் கலையின் அருமை பெருமைகளை யெல்லாம் விரிவாகக் கூறுகிறார் இளங்கோ. படிப்போர் வாயினிக்க, கேட்போர் செவியினிக்க வருணிக்கிறார் என்றாலும் பொருந்தும். அரங்கேற்றுக் காதையில் மட்டு மல்லாமல், காவிய முழுவதிலுமே வாய்ப்புக் கிடைத்த இடங்களிலெல்லாம் ஆடற் கலையின் அருமையையும், பாடற் கலையின் பெருமையையும் விளக்கி இருக்கிறார்.

கூலவாணிகன் சாத்தனாரோ, நடனக்கலை மீது வெறுப்புக் கொள்ளும் மாதவியையே நமக்கு அறிமுகப்படுத்துகிறார். இந்திர விழாவில் வழக்கம்போல் நடனமாடி, காணுகின்ற காளையர்க்குக் களிப்பூட்டுமாறு மணிமேகலையை அழைக்கும் தன் தாயான சித்திராபதிக்கு,

*“......................மணிமேகலை,*
*அருந்தவப் படுத்தல் அல்லது யாவதுந்*
*திருந்தாச் செம்கைத் தீத்தொழிற் படாஅள்”!*

“மணிமேகலை, இனி தவநெறியிற் செல்லுவதல்லாது, நடனமாடும் தீய தொழிலில் ஈடுபடமாட்டாள்” எனக் கூறுகிறாள் மாதவி. ஆம், இத்தனை காலம் தன் வாழ்வு

சிறக்கவும், அரசரும் போற்றிப் பரிசு தரவும் காரண மாயிருந்த நடனத் தொழிலை, 'தீத் தொழில்' என வெறுத்துப் பேசுகின்றாள். இந்த வெறுப்பை வித்தா கக் கொண்டுதான் மணிமேகலைக் காப்பியம் இயற்றப் பட்டிருக்கிறது.

அரசன் செங்கோல் பிறழ்ந்து கொடுங்கோலனா கின்ற பொழுது, பெண்கள் அறக் கற்பை விடுத்து மறக் கற்பை மேற்கொள்ள உரிமையுண்டு என்பதை உணர்த்துகின்றது சிலப்பதிகாரம். இந்தப் புரட்சி நெறியை வற்புறுத்தவே சிலப்பதிகாரத்தை இயற் றினார் இளங்கோவடிகள். ஆனால், மணிமேகலையில், மதுரைப் புரட்சி, கண்ணகி செய்த குற்றம் என்கிறார் சாத்தனார். அதையும் கண்ணகி வாயாலேயே சொல்லச் செய்வது கவனிக்கத் தக்கது. மணிமேகலை பௌத்த மதத்தைச் சார்ந்து துறவுநிலை அடைந்த பின்பு, வஞ்சி நகர் சென்று சிலைவடிவில் காட்சியளிக்கும் கண்ணகி தேவியை வணங்குகின்றாள். அப்போது அவள் கண் ணகித் தெய்வத்தை நோக்கி,

> அற்புக் கடன் நில்லாது நற்றவம் படராது
> கற்புக் கடன் பூண்டு நும் கடன் முடிந்தது
> அருளல் வேண்டும்.........

'கணவனை இழந்த பின்னர்த் தவவழியிற் செல்லாது, மறக் கற்பை மேற்கொண்ட காரணத்தை விளக்க வேண்டும்' என்று கேட்கின்றாள்.

இந்தக் கேள்விக்குப் பதிலாகக் கண்ணகி தேவி, "கோவலன் கொலையுண்டதற்கும், அதன் விளைவாக யான் துயருண்டதற்கும் எனது முன் வினைப்பயனே காரணம் என மதுராபுரித் தெய்வம் தெரிவித்த பின்னரும் யான் கோபம் கொண்டு கூடற் பதியைக்

கொளுத்தியது குற்றமே. அக் குற்றத்தால் உற்ற பாவத்தைப் போக்க மீண்டும் உலகில் பிறந்தும் இறந்தும் துன்புறுவேன்'' எனக் கூறுகிருள்.

இளங்கோ கண்ட கண்ணகியோவெனில், கோவேந்தனை வாதில் வென்ற பின்னர், கூடற்பதியைக் கொளுத்துங்கால், "கொடுங்கோலன் நகரையே கொளுத்துகின்றேன்; குற்றமிலேன்'' என நான் மாடக்கூடல் மகளிர் அறிய, மைந்தர் அறிய, மாண்பு மிக்க சான்றோர் அறிய, வானத்துக் கடவுளர் அறியக் கூறுகிருள்.

கண்ணகியின் வெஞ்சினத்தால் அல்லற்பட்ட மதுரைப் பெண்டிரும், கண்ணகி தேவியின் "கொங்கைப் பூசல் கொடிதன்று; நியாயமே'' எனக் கூறுகின்றனர். மற்றும் குன்றக் குறவர் "கொடுங்கோலனின் நகரைத் தீக்கிரையாக்கிய வீரப் பெண்ணும் கண்ணகியைப் பாடுவோம்'' என்கின்றனர். வஞ்சி மகளிரும் கண்ணகியின் புரட்சியைப் போற்றிப் புகழ்கின்றனர். சிலப்பதிகாரத்தில் எந்த இடத்திலும் யார் வாயிலாகவும் கண்ணகியின் புரட்சி தவறெனக் கூறவில்லை இளங்கோவடிகள்.

சாத்தனுரோ, பேசமுடியாத கற்சிலையையும் பேசச் செய்து, மதுரைப் புரட்சி தவறெனக் காட்டுவதோடு, கணவனை இழந்த கண்ணகி துறவு நிலையை மேற்கொண்டிருக்க வேண்டியதே நியாயம் என மணிமேகலையின் கேள்வி மூலம் தமது மதக் கொள்கையை வலியுறுத்துகிருர்.

## இன்னும் பல வேற்றுமைகள்

சிலப்பதிகாரத்திற்கும் மணிமேகலைக்கும் உள்ள வேற்றுமைகள் இன்னும் பல. பொதுவாக, மணி

மேகலை, தமிழரின் மரபுக்கு ஒவ்வாத துறவு நிலையை வற்புறுத்துவதற்காக, அதிலும் இல்லறத்தையே நல்லறமாகக் கொண்ட பெண்ணினத்தைத் துறவு நிலையில் ஈடுபடும்படி தூண்டுவதற்காக இயற்றப் பட்டதே யாகும். அதனாற்றான், பௌத்த மதப் பாதையில் தமிழினத்தை ஈடுபடுத்த நினைத்த சாத்தனார், பெண் மக்கள் நாட்டியக் கலையிலும் வீரச் செயலிலும் ஈடுபடுவதை எதிர்ப்பவரானார். சிலப்பதிகாரம் இவ்விரண்டையும் வற்புறுத்த எழுந்த இணையற்ற காப்பியமாகும்.

சிலம்பும் மணிமேகலையும் ஒரே காலத்தில் இயற்றப் பட்டவை என்று எண்ணுவதற்கில்லை. காப்பியங்களின் முகப்பிலுள்ள பதிகங்களைப் பிற்காலத்தில் யாரோ இயற்றிக் காப்பியங்களோடு சேர்த்திருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தின் இறுதியிலுள்ள நூற்கட்டுரை, இளங்கோவடிகள் இயற்றியதன்று.

அரும்பத வுரைகாரர், சிந்தாமணி-பெருங் காதை முதலிய காப்பியங்களையும், கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களையும் மேற்கோள் காட்டியிருக்கிறார். ஒரு இடத்தில்கூட 'மணிமேகலை'யைக் குறிப்பிடவில்லை. இதனால், அரும்பத வுரைகாரர் காலம்வரை மணிமேகலைக் காப்பியம் எழுதப்படவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது, அடியார்க்கு நல்லார், தமது உரையில் பலவிடங்களில் மணிமேகலையைச் சான்று காட்டுவதால், அவர் காலத்துக்கும் அரும்பத வுரைகாரர் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் மணிமேகலை தோன்றியிருத்தல் கூடும்.

# இராமாயணமும் சிலம்பும்

இராமாயணம், சிலப்பதிகாரம் ஆகிய இரு பெருங் காப்பியங்களிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள், இலக்கிய ரசிகர்களுக்கும் காப்பிய ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒரு விருந்தாக அமைந் திருக்கின்றன. தோன்றிய காலத்தால் சிலப்பதிகாரத் தினும் தொன்மையானது வால்மீகி இராமாயணம். சிலப்பதிகாரக் கவிஞர், மன்னர் குலத்தில் பிறந்தவர். இராமாயண ஆசிரியர், மகரிஷி குழாத்தைச் சேர்ந்த வர். இராமாயணக் கதை நிகழ்ந்த காலம் வேறு; இடம் வேறு. சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலம் வேறு; இடம் வேறு. ஆகவே, இராமாயணத்தில் காணப்படும் பண்பாடுகளில்—பழக்க வழக்கங்களில் பல சிலம்பு கூறும் செய்திகளுக்கு மாறுபட்டிருத்தல் இயற்கை ஆயினும், இரண்டும் வரலாற்றுச் சம்பவங்களைத் தழுவி, கற்பனைச் சம்பவங்களும் கலந்து உருவாகிய காப்பியங்களாகும்.

## சிலப்பதிகாரக் காலத்துக்கு முன்னும் இராம கதை

சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலத்தில், கம்ப இராமாயணம் எழுதப்படவில்லை என்றாலும், அக்காலத்

தில் இராம கதை தமிழ் நாட்டில் பரவியிருந்த தென்பதற்குச் சான்றுகள் உள. "தாதை ஏவலின் மாதுடன் போகிக், காதலி நீங்கக் கடுத்துயர் உழந்தோன், வேத முதல்வன் பயந்தோன் என்பது, நீ அறிந்திலையோ, நெடுமொழி அன்றோ" என, கோவலனுக்கு ஆறுதல் கூறும் கவுந்தியடிகள், இராம கதை தமிழகத்தில் வெகுகாலமாக நிலவி வரும் 'நெடுமொழி' என்கின்றார்.

சிலப்பதிகாரத்திற்கு முற்பட்ட சங்க காலத் தமிழ் இலக்கியங்களிலேயே இராமாயணச் செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன என்பதற்கு,

*இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்*
*உமை அமர்ந்து உயர்மலை இருந்தனன்ஆக;*
*ஐயிரு தலையின் அரக்கர் கோமான்*
*தொடிப்பொலி தடக்கையின் கீழ்ப்புகுந்து அம்மலை*
*எடுக்கல் செல்லாது உழைப்பவன் போல*
*வெல்போர் இராமன் அருமறைக் கவித்த*
*பல்வீழ் ஆலம்போல*

என்ற கலித்தொகை வரிகளே சான்றாகும்.

## அடிகளும் அறிந்தது

இராமாயணக் கதை இளங்கோவடிகளின் மனத்தையும் கவர்ந்திருக்க வேண்டும். அதனால், தமது சிலப்பதிகாரத்திலும் சில இடங்களில் இராமாயணச் செய்திகளைச் சேர்த்திருக்கிறார் இளங்கோ. குறிப்பாக,

*பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்*
*அரசே தஞ்சமென்று அருங்கான் அடைந்த*
*அருந்திறல் பிரிந்த அயோத்தி போல*

*மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்*
*தாவிய சேவடி சேப்பத் தம்பியொடுங் கான்போந்து*
*சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டவிழ்த்த*
*சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!*
*திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!*

என்ற வரிகளே எடுத்துக் காட்டாகும். இராம கதையைப் பூரணமாகவோ அல்லது பொதுவாகவோ இளங்கோவடிகள் அறிந்திருந்தார் என்று நம்பலாம்.

## தொடக்கத்தில் ஒற்றுமை

இராமாயணத்திலும் சிலம்பிலும் கதையின் ஆரம்பம் ஒரே மாதிரியாக அமைந்திருப்பது சிந்திக்கத் தக்கது. அண்ணன் இராமனிருக்க, தம்பி பரதனுக்கே அரசுரிமை கிடைக்கக் கூனி மூட்டும் கோளிலிருந்தே இராமாயணக் கதை ஆரம்பமாகின்றது. அது போன்றே, தமையன் செங்குட்டுவனிருக்க, தம்பி இளங்கோவன் நாடாளத் தக்கவனென்று நிமித்திகன் கிளப்பும் வம்பே சிலப்பதிகாரக் கதை தோன்ற நல்ல வாய்ப்பாக அமைகிறது.

மற்றும், கைகேயியால் தனக்குக் கிடைத்த பேரரசை, மீண்டும் அண்ணனுக்கே உரிமையாக்கினுன் தம்பி பரதன். அது போன்றே நிமித்திகனின் ஆலோசனை கேட்டுத் தந்தை சேரலாதன் தர விரும்பிய செங்கோலாட்சியைத் தமையன் செங்குட்டுவனுக்கே உரிமையாக்கினுர் இளங்கோ.

தாயுரை கேட்டுத் தாதை உதவிய தரணிதன்னைத் தீவினை என்ன நீத்த பரதனைப் பார்த்து,

*'ஆயிரம் ராமர் நின்கேள் ஆவரோ தெரியிலம்மா'*

எனக் கூறிப் பாராட்டுகின்றான் குகன். அந்தப் பரதன்கூடத் தமையனின் சொற்படி அவன் திரும்புமளவும் அயோத்தியை ஆண்டதாக அறிகிறோம். ஆனால், இளங்கோவோ, புவியரசைத் தமையனுக்குத் தந்ததோடு நில்லாமல், அவ்வரச பாரம் மீண்டும் தம்மை அணுகாமலிருக்க, அரண்மனையிலிருந்து வெளியேறி குணவாயிற் கோட்டத்தில் தங்கியிருந்தார். அதை நினைக்கும்போது,

"ஆயிரம் பரதர் நின்கேள் ஆவரோ தெரியிலம்மா"

என இளங்கோவை வாழ்த்த விரும்புகிறது நம் நெஞ்சம்.

## அடிப்படை வேற்றுமை

வால்மீகி இராமாயணத்திற்கும் சிலப்பதிகாரத்திற்கும் ஒரு அடிப்படை வேற்றுமை உண்டு. இராமாயணத்தின் சிறப்பனைத்தும் இராமரைச் சேர்ந்ததேயன்றிச், சீதைக்கு உரியதன்று. இராமனின் புகழ் விளங்கச் சீதை ஒரு கருவி. அக் காப்பியத்துக்கு இராமர் பெயர் இடப்பட்டிருப்பதே இதைப் புலப்படுத்தும்.

இதற்கு நேர்மாறாக சிலப்பதிகாரம், கண்ணகி தேவியாம் பெண்ணரசியைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம் என்ற பெயரே கண்ணகியின் சிலம்பைக் குறிப்பதாகும். கண்ணகியின் மறக் கற்பை விளக்கக் கோவலன் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறான். ஆம், ஆணினத்தின ஆற்றலுக்கோர் அத்தாட்சி இராமாயணம்; பெண்ணினத்தின் பெருமைக்கோர் சான்று சிலப்பதிகாரம்.

## சொல்லும் முறையில் வேற்றுமை

கம்பராமாயணம், நாற்பத்தெட்டாயிரம் வரிகளை- அதாவது பன்னீராயிரம் பாடல்களைக் கொண்டது.

சிலப்பதிகாரத்துள், வரிப்பாடல்கள், குரவைப் பாடல்கள், வெண்பாக்கள் ஆகியவற்றைக் கழித்துப் பார்த்தால், க்தை சுமார் நான்காயிரம் வரிகளிலே முடிந்து விடுகிறது.

சிலப்பதிகாரத்தின் முதற் காதையில் இருபது வரிகள் கடந்த உடனே, கோவலனையும் கண்ணகியையும் மணப் பந்தலில் சந்திக்கிறோம். ஆனால், கம்பராமாயணத்தில் நாலாயிரம் வரிகள்—அதாவது, ஆயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களைப் படித்து முடித்த பிறகுதான், சீதை—இராமர் மணக் கோலத்தைக் காண முடிகின்றது.

சிலப்பதிகாரத்தில்,

*மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!*
*நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்*
*மேல் நின்று தான்சுரத்த லான்*

என்ற வரிகளில், காவிரி ஆற்றின் நீர்வளத்துக்குக் காரணமான மாமழையைப்போற்றுகின்றார் இளங்கோவடிகள். இதையே இருபது பாடல்களில்—எண்பது வரிகளில் ஆற்றுப்படலமாக அமைத்துச் சரயுநதியின் சிறப்பை வருணித்திருக்கிறார் கம்பர். அப்படியே,

*பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!*
*வீங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு*
*ஓங்கிப் பரந்தொழுக லான்.*

என்று, புகார் நகரத்தின் பெருமையை மூன்றே வரிகளில் முடிக்கிறார் இளங்கோவடிகள். இராமாயணத்தில், எழுபத்தைந்து பாடல்களில், அதாவது முந்நூறு வரிகளில் அயோத்தி நகரை வருணிக்கிறார் கம்பர். இராமாயண—சிலப்பதிகாரக் காப்பியங்களிடையே உள்ள இந்த அமைப்பு வேற்றுமைக்குக் காரணம், இளங்கோ காலத்தைவிடக் கம்பர் காலத்தில் கவிதைத் தமிழ் நன்குவளம் பெற்றிருந்ததேயாகும்.

மேலும், இளங்கோவடிகள், கதைக்கே முக்கியத் துவம் கொடுத்திருக்கிருர். ஆனுல், கம்பரோ கவிதை யின் அங்கங்களான அலங்காரம் வருணனை கற்பனை ஆகிய சிறப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக் கிருர். ஆம், ஒரு சம்பவத்தை உள்ளது உள்ளபடியே நேராகச் சொல்கிருர் இளங்கோவடிகள். அப்படிக் கின்றி, கற்பனையைக் கலந்து, முன்பின் சம்பவங் களைச் சேர்த்து, கவிதை வளம் தோன்றக் காப்பி யத்தை இயற்றியிருக்கிருர் கம்பர்.

பொதுவாக, சிலப்பதிகாரமும் கம்ப ராமாயண மும் பெரும்பாலும் திருக்குறள் நெறி வழி இயற்றப் பட்டவையாகும். இளங்கோவும் கம்பரும் தமிழர் பண்பாட்டின் காவலர்களாக விளங்குவதை, அவர் கள் இயற்றிய காப்பியங்களால் அறிந்து கொள்ளு கின்றேம்.

சிலப்பதிகாரத்தில், கணவனை இழந்த கடுங் கோபத்தால் மதுரை மாநகரை தீக்கிரையாக்கு கின்ருள் கண்ணகி தேவி. கொடுங்கோலன் நகரைத் தீக்கிரையாக்கும் இந்தக் கொள்கையைக் கம்பரும் அங்கீகரித்திருக்கிருர்.

*அல்லன் மாக்கள் இலங்கைய தாகுமோ*
*எல்லை நீத்த உலகங்கள் யாவும்என்*
*சொல்லினுல் சுடுவேன் ; அது தூயவன்*
*வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்.*

"என்னைச் சிறைப்படுத்திய இராவணனின் இலங்கை மட்டுமல்லாமல், அவன் செய்யும் கொடுமை களையெல்லாம் பார்த்துக்கொண் டிருக்கும் ஆழிசூழ் உலகனைத்தையும் என் ஒரு சொல்லால் சுட்டு நீருக்கி விடுவேன். ஆனுல், அது இராமபிரானின் வீரத்திற்கு இழுக்குத் தரும் என்ற காரணத்தால் விட்டுவிட்

டேன்'' என அனுமனிடம் கூறுகின்ருள், அயோத்தி ராமனின் ஆருயிர்ப் பத்தினி.

கூடற்பதியைக் கொளுத்திய கண்ணகி, கணவனை இழந்தவள். ஆகவே, கொடுங்கோலனைப் பழி வாங்கும் பொறுப்பைத் தானே மேற்கொண்டுவிட்டாள். அசோக வனத்தில் சிறையிலிருந்த சீதையின் நாயகன், கோதண்டத்தைக் கையிலேந்தி கொடுங் கோலனைக் கொல்லக் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அதனுல், பழிவாங்கும் பொறுப்பைச் சீதை மேற்கொள்ளவில்லை என்கிருர் கம்பர்.

## உடன்சென்றதில் உள்ள வேற்றுமை

இராமாயணத்தில், கைகேயியின் கட்டளைப்படி காடு செல்லப் புறப்படும் இராமர், தன்னேடு வர விரும்பும் சீதையை அழைத்துச் செல்ல மறுக்கிருர். பின்னர், மிதிலைச் செல்வியின் வற்புறுத்தலின்பேரில் அவளை அழைத்துச் செல்கிருர். ஆனுல், சிலப்பதிகாரத்தில் பாண்டிய நாடு செல்லப் புறப்படும் கோவலன், கேளாமலே, தானே 'எழு' எனக்கூறி கண்ணகியை இட்டுச் செல்கிருன்.

இராமாயணம் இயற்றிய கம்பர், எத்தனையோ இடங்களில் சிலப்பதிகார ஆசிரியரைப் பின்பற்றி, அவர் போதித்த நெறிகளைத் தமது காப்பியத்திலும் எதிரொலி செய்திருக்கிருர்.

# இளங்கோவும் பாரதியும்

இளங்கோவடிகள் சமயப் பற்றுடையவர் என்ருலும், அவர் இயற்றிய சிலப்பதிகாரம் ஒரே சமயச் சார்புடையதன்று; பல சமயங்களேயும் அன்பு விழிகளால் நோக்கும் தமிழ் இனச் சார்புடைய காப்பியம்.

இவ்வளவு சிறப்புடைய சிலப்பதிகாரத்தைப் பாரதிக்கு முன்தோன்றிய புலவர்களில் எவரும் பாராட்டிஞரில்லே. அதன் விளேவாக, மக்கள் காப்பியமான சிலப்பதிகாரம், தமிழ்ப் புலவர்களின் மனேகளிலே சிறைப்பட்டுக் கிடந்தது.

இங் நிலேயில், சிலப்பதிகாரத்தின் பெருமையை, இளங்கோவடிகளின் புலமையை உலகறியச் செய்தார் கவியரசர் பாரதியார்.

—நெஞ்சை

*அள்ளும் சிலப்பதி காரமென்ரோர்—மணி*
*யாரம் படைத்த தமிழ்நாடு*

என்று, பாரதியார் பாடியுள்ள வரிகள், சிலப்பதிகாரத்தின் மாண்பினே விளக்கும் மதிப்புரையாகும். மற்றும்,

*யாமறிந்த புலவரிலே.........*
*.........இளங் கோவைப்போல்,*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;*
*உண்மை, வெறும்புகழ்ச்சியில்லை!*

என்ற வரிகள், வெறும் ரசிகனின் புகழுரை அன்று; பெரும்புலவரின் பொருளுரையாகும்.

இவ்வளவு மாண்புடைய சிலப்பதிகாரத்தைப் புறக்கணித்து, தமிழ் மாணவர்கள் ஆங்கிலம் பயின்று ஷெல்லியையும் ஷேக்ஸ்பியரையும் புகழும் நிலைகண்டு,

*சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்*
*தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்*
*அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்*
*தாங்கிலம்பயில் பள்ளியுட் போகுநர் ;*
*என்ன கூறிமற் றெங்கன் உணர்த்துவேன்*
*இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே!*

என நெஞ்சங் குமுறி நிலை குலைந்து கதறினார் பாரதியார்.

## கண்ணகி நிழலில் பாஞ்சாலி !

சிலப்பதிகாரத்தில், கவியரசர் பாரதியாரின் கருத்தைக் கவர்ந்த பகுதி புகார்க் காண்டமன்று; வஞ்சிக் காண்டமும் அன்று; மதுரைக் காண்டமே யாகும். அந்தக் காண்டத்தில் மாபெரும் பத்தினி கண்ணகி நிகழ்த்தும் வீரப் புரட்சியில் நெஞ்சைப் பறி கொடுத்து விட்டார் பாரதியார். அதனாற்றான், "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'' என்று சிறப்புரை கூறினார்.

பாரதியார், ஆவேச உள்ளம் படைத்த அரசியல் வாதி; விடுதலைப் போர்க்களத்தில் நின்று பரணி பாடிய பாசறைக் கவிஞர். ஆகவே, கொடுங்கோலை

எதிர்த்துப் போராடும் கண்ணகி தேவியின் அரசியல் புரட்சியில் அவருடைய மனம் ஈடுபட்டதில் வியப் பொன்றுமில்லை. 'பாஞ்சாலி சபதம்' எழுதப் பாரதி யாருக்கு உணர்ச்சியளிக்கக் காரணமாயிருந்தது சிலப் பதிகாரத்தில் கண்ணகி நிகழ்த்தும் வீரப் புரட்சியே என்று கூறலாம்.

## பெண்ணினத்துக்குப் பெருமை தந்தோர்

தமிழ்ப் புலவர்கள் மரபிலே பெண்ணினத்துக்குப் பெருமை தேடிய புலவர்கள் இளங்கோவடிகளும் பாரதியாருமே யாவர்.

செங்கோலனாக நாடாண்டு, வினைவசத்தால் கொடுங்கோலனாக மாறிய நெடுஞ்செழியனை எதிர்த் துப் போராடிய வீர பத்தினியின் வரலாற்றைக் காப் பியமாக்கினார் இளங்கோவடிகள். வீரப் பாஞ்சாலி, பிறவிக் கொடுங்கோலனான துரியோதனனை எதிர்த்து வாதப் போர் நடத்தி, சபதமொழி புகன்ற சம்ப வத்தை வழி நூலாக்கினார் பாரதியார். இந்த இரண்டு காப்பியங்களுக்கும் பொருத்தம் காட்டும் சில சம்ப வங்களைப் பார்ப்போம்:

## கண்ணகி – பாஞ்சாலி

பாண்டியன் நெடுஞ்செழியன் குற்றமற்ற கோவ லனை, 'கள்வன்' என்று குற்றம் சாட்டிக் கொல்லச் செய்கிறான். அச்செய்தி கேட்ட கண்ணகி ஆறாப் பெருந்துயர் கொண்டு, "என் கணவன் கள்வனோ?" என்று கூறி அலறி அழுகின்றாள். மதுரை நகரின் வீதிகளில் திரிந்து,

*கள்வனோ அல்லன் கணவன், என் காற்சிலம்பு*
*கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே!*

என்று கூக்குரலிட்டு, தன் கணவன் கள்வன் அல்லன், தான் கள்வனின் மனைவி அல்லள் என்பதைப் பாண்டி

நாட்டு மக்களெல்லாம் அறியப் பறை சாற்றுகின்ருள். ஆம் ; கள்வனின் மனைவியாக இருப்பதில் கண்ணகி தேவிக்கு அவ்வளவு வெட்கமும் வேதனையும் !

பாஞ்சாலி சபதத்திலும் ஏறக்குறைய இதே போன்ற ஒரு காட்சியைப் பார்க்கிறோம். தாளுண்ட தரணியொடு தம்பியரையும் தன்னையுமே சூதில் தோற்று விடுகிருர் தருமர். பின்னரும் மாபாவி சகுனியின் தூண்டுதலால் மனைவி பாஞ்சாலியையும் சூதில் தோற்றுவிடுகின்ருர்.

சூதாட்டத்தில் வெற்றிப் பொருளாகக் கிடைத்த பாஞ்சாலியை அரசவைக்கு அழைத்து வரும்படி தேர்ப்பாகனுக்கு ஆணையிடுகின்ருன் துரியோதனன். அந்நிலையில், தன்னை அழைக்க வந்த பாகனை நோக்கி,

*என்னை முன்னே கூறி இழந்தாரா ? தம்மையே*
*முன்னம் இழந்து முடித்தென்னைத் தோற்ருரா ?*

எனக் கேட்டு வழக்காடுகின்ருள் பாஞ்சாலி. மேலும்,

*நாயகர் தாந்தம்மைத் தோற்ற பின்—என்னை*
*நல்கும் உரிமை அவர்க்கில்லை—புலைத்*
*தாயத்தி லேவிலைப் பட்ட பின்—என்ன*
*சாத்திரத் தாலென்னைத் தோற்றிட்டார்*

“தருமர் தம்மைச் சூதிலே தோற்று, தாம் துரியோதனனுக்கு அடிமையான பின் என்னை வைத்துச் சூதாட அவருக்கு என்ன உரிமை உண்டு? அடிமைப் பட்ட ஆடவருக்கு மனைவிமீது உரிமையில்லை” என்று வாதாடுகின்ருள்.

ஆம் ; ‘அடிமைப்பட்ட தருமனின் மனைவி’ என்ற நிலையை பாஞ்சாலி அடியோடு வெறுக்கிருள். ஆகவே, இனி “நான் உரிமை இழந்த தருமனுக்கு மனைவி அல்லள். ஊராளும் பெருமை பெற்ற துருபதராஜனின் மகள்’ என்கின்ருள் பாஞ்சாலி.

'கள்வனின் மனைவி' என்ற பழிச்சொல், கண்ணகியை வேதனைப்படுத்தியது! அதுபோலவே, 'சூதில் அடிமைப்பட்ட தருமனின் மனைவி' என்ற அவச் சொல் பாஞ்சாலியை வெட்கத்தில் ஆழ்த்தியது.

கணவனை இழந்த கண்ணகி மதுரை வீதி வழியே ஆற்றுவாரற்று அழுது செல்கின்றாள். செல்லுங்கால்,

*முறையில் அரசன்றன் ஊரிருந்து வாழும்*
*நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்!*

என, தன்னினமாம் பெண்ணினத்தைக் கூவி யழைத்து,

*இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்*
*துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்*
*மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப*
*அன்பனை இழந்தேன் யான் அவலங் கொண் டழிவலோ*

என, மன்னன் நெடுஞ்செழியன் தன் கணவனைக் கொன்றதையும், அக்கொடுமையால் தான் விதவைக் கோலம் எய்த இருப்பதையும் நெஞ்சு நெக்குருகிக் கூறுகின்றாள்.

ஆனால், கண்ணகியை அணுகி அவளுக்கு ஆறுதல் கூறவோ, அல்லது மன்னன்பால் சென்று செங்கோல் பிறழ்ந்தமைக்காக அவனிடம் காரணம் கேட்கவோ மதுரை மக்கள் யாரும் முன்வரவில்லை.

கண்ணீரைப் பெருக்கிக் கதறியழும் கண்ணகியைக் கண்டும், அவள், தனக்குற்ற நிலையைக் கூறக் கேட்டும்,

*களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி*
*வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்!*
*மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்*
*தென்னவன் கொற்றம் சிதைந்த திதுவென்கொல்!*

*மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை*
*தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல் !*
*செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்*
*வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல் !*

எனத் தத்தம் மாளிகையிலிருந்தவண்ணமே அவள் பால் அனுதாபம் காட்டினரேயன்றி, தங்கள் அரசனை அணுகித் திக்கற்ற அவளுக்கு இழைத்த தீங்கிற்குக் காரணம் கேட்டுக் கழுவாய் தேடினார்களில்லை.

அறம் பிழைத்த வேந்தனுக்கு அஞ்சி வாழும் மதுரைக் குடிமக்களின் நிலை கண்டு வேதனையடைந்த கண்ணகி,

*பெண்டிரும் உண்டுகொல் ? பெண்டிரும் உண்டுகொல் ?*
*கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்*
*பெண்டிரும் உண்டுகொல் ? பெண்டிரும் உண்டுகொல் ?*

*சான்றோரும் உண்டுகொல் ? சான்றோரும் உண்டுகொல் ?*
*ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்*
*சான்றோரும் உண்டுகொல் ? சான்றோரும் உண்டுகொல் ?*

*தெய்வமும் உண்டுகொல் ? தெய்வமும் உண்டுகொல் ?*
*வைவாளின் தப்பிய மன்னவன் கூடலில்*
*தெய்வமும் உண்டுகொல் ? தெய்வமும் உண்டுகொல் ?*

“அந்தோ ! என் கணவனைக் கூரிய வாளால் கொல்லுவித்த பழிகாரப் பாண்டியன் ஆட்சியில், கற்புடைப் பெண்டிருண்டா ? அறிவுடைச் சான்றோருண்டா ? அருளுடைய தெய்வந்தான் உண்டா ?” எனக் கூவி அழுது, “இல்லை” என்ற முடிவுக்கே வருகின்றாள், பூம்புகார்ப் பத்தினி !

இந்த இடமே கவியரசர் பாரதியாரின் நெஞ்சை அள்ளிய இடமாகும். மதுரைக் குடிமக்கள் என்ன

செய்திருக்க வேண்டும் என்பதை அஸ்தினுபுரத்து மக்கள்மீது வைத்துப் பாஞ்சாலி சபதத்தில் விளக்குகிருர் பாரதியார்.

பாண்டவர்கள்தேவி திரௌபதியை அரசவையில் நிறுத்துவான்வேண்டி, அவளது விருப்பத்திற்கு மாருகக் கூந்தலைப் பிடித்து வீதி வழியே இழுத்துச் செல்கிருன் இழிகுணத் துச்சாதனன். அக்கொடியவன் வயப்பட்ட பாஞ்சாலி 'கோ'வென்று அழுத வண்ணம் செல்லும் பரிதாபக் காட்சியைக் கண்ட அஸ்தினுபுரி மக்கள், "இது என்ன கொடுமை!" என்று கூறித் திகைத்துச் செயலற்று நின்றனராம். இதை நினைத்த மாத்திரத்தில் பாரதியாரின் நெஞ்சு குமுறுகின்றது. பாத்திரங்களை ஆட்டிவைக்கும் கவிஞர் தாமே ஒரு பாத்திரமாகி ஆத்திரத்துடன் பேசுகின்ருர்:

'என்ன கொடுமையிது!' வென்று பார்த்திருந்தார்
ஊரவர்தங் கீழ்மை உரைக்கும் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னை அவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினர்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

என்ற வரிகளில், அஸ்தினுபுரத்து மக்கள், மிருக வெறி பிடித்த துச்சாதனனை அடித்து நொறுக்கிச் சாக்கடையில் வீழ்த்தி அல்லற்படும் திரௌபதிக்கு அபயமளித்திருக்கவேண்டும் என்கிருர் பாரதியார்.

கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி வெட்டுண்ட கணவனின் உடலைக் கட்டித் தழுவி அழுகின்ருள். மறுகணத்தில் இந்தக் கொடுமைக்குக் காரணமான மதுரை மன்னன் அவளுடைய கவனத்துக்கு வருகின்ருன். அந்நிலையில்,

*காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைவிடேன்*

என்று சபதம் செய்கிருள்.

மற்றும், கோவலன் குற்றமற்றவன் என்பதைக் கண்ணகியால் உணர்ந்த பாண்டியன் தன்னுயிர் கொடுத்து வளைந்த செங்கோலை நிமிர்த்துவான்போல விண்ணுலகம் சென்றதைக் கண்ணாரக் கண்டாள் கண்ணகி.

அந்நிலையிலும், கண்ணகிதேவி சீற்றம் தணியாளாய்,

*ஓட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையையும்*

என்று சபதம் கூறி, அதன்படி மதுரையைத் தீக்கிரையாக்குகின்ருள்.

மாபாவி துச்சாதனனுல், மன்னர் சபைக்குக் கொண்டுவரப்பட்ட பாஞ்சாலி, அங்குத் தனக்குச் செய்யப்பட்ட அவமானத்தால் நெஞ்சம் புழுங்கி, பாண்டவரின் செயலற்ற நிலைகண்டு ஆத்திரங் கொண்டு,

*பாவி துச்சாதனன் செந்நீர்—அந்தப்*
*பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்*
*மேவி இரண்டுங் கலந்து—குழல்*
*மீதினிற் பூசி நறுநெய் குளித்தே*
*சீவிக் குழல்முடிப் பேன் யான்—இது*
*செய்யு முன்னே முடியேன்......*

எனச் சபதம் செய்கின்ருள் பாஞ்சாலி. கண்ணகியின் சபதத்தால் மதுரைமா நகரம் அழிந்தது; பாஞ்சாலியின் சபதத்தால் கொடுங்கோலன் துரியோதனனின் அரச பரம்பரையே அழிந்தது.

பாரதியார் கண்ட பாஞ்சாலிக்கும், இளங்கோ பெற்ற கண்ணகிக்கும் அனைத்திலும் பொருத்தம் காண்பது அரிதுதான். அதற்குக் காரணம், பாஞ்சாலியைப் பாத்திரமாகக் கொண்ட பாரதக் கதை இயற்

றப்பட்ட காலம் வேறு, கதை நிகழ்ந்த இடம் வேறு. கண்ணகியை நாயகியாகக் கொண்ட சிலப்பதிகாரம் செய்யப்பட்ட காலம் வேறு; கதை நிகழ்ந்த இடம் வேறு என்பதுதான்.

ஆனால், சிலப்பதிகாரத்தில் நெஞ்சைப் பறி கொடுத்த பாரதியார், கண்ணகியின் குரலிலே பாஞ் சாலியைப் பேசவைக்க முயன்றிருக்கிறார். ஆகவே, பாஞ்சாலி சபதம் சிலப்பதிகார அன்பர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகும்.

# நீதி மன்னன் நெடுஞ்செழியன்

---

**பா**ண்டியன் நெடுஞ்செழியன், குற்றமற்ற கோவலனைக் கொலை செய்ததன் விளைவாகக் கொடுங்கோல் மன்னனாகக் காட்சியளிக்கிறான். ஆனால், கோவலன் கொலைக்கு முன்னும் பின்னும் அவன் நடந்து கொள்ளும் முறையிலிருந்து நெடுஞ்செழியன் நீதி மன்னன் என்றே நிச்சயிக்கலாம்!

## திருந்தாக் கொடுங்கோலர்கள்

குடி மக்களுக்குத் தீங்கிழைத்ததற்காகக் கொல்லப்பட்ட முடி மன்னர் பலருடைய வரலாறுகளை நாம் படித்திருக்கிறோம். அவற்றில், உலகினர் கவனத்திலிருந்து இன்னும் அகலாமலிருப்பவை ருஷ்ய ஜார் சக்கரவர்த்தி, இங்கிலாந்தின் முதலாம் சார்லஸ் மன்னன் ஆகியோரின் வீழ்ச்சியே யாகும். ருஷ்ய ஜார் மன்னன், குடிமக்களுக்குச் செய்த கொடுமைகள் கொஞ்சமல்ல. ஜார் ஆட்சியில்,

இம்மென்றால் சிறைவாசம்
ஏனென்றால் வனவாசம்...

*சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்*
*சான்றோரும் தருமந் தன்னைத்*
*திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்*

என்கிருர் பாரதியார். புரட்சிக்காரர்களால் சித்திர வதை செய்யப்படும்வரை கொடுங்கோலன் ஜார், தன் தவறை உணர்ந்து அதற்காக வருந்தித் தாளுகவே கழுவாய் தேடினு னில்லை.

இங்கிலாந்தின் வேந்தனுன **முதலாம் சார்லஸ்,** கொடுங்கோலனுக இருந்ததன்றித் தன்னைக் கடவுளா கவும் நம்பினுன். ஜனசக்தி பொங்கி எழுந்து அவனது உயிரைப் போக்கி உதிரத்தைக் குடிக்கும்வரை சார்லஸ் மன்னன் திருந்தினு னில்லை.

## வளைந்த கோலை நிமிர்த்தினுன்

இந்த மேலைநாட்டுக் கொடுங்கோலர்களுக்கும், தமிழ் வேந்தன் நெடுஞ்செழியனுக்கும் பெருத்த அளவில் வேற்றுமை உண்டு. தீர விசாரியாமல் பொற் கொல்லன் சொல்லை நம்பிக் கோவலனைக் கொல்லு மாறு ஆணையிட்டதனுல், நெடுஞ்செழியன் கொடுங் கோலனுனுன் என்ருலும், கண்ணகி வந்து தனது தவறை உணர்த்திய அந்தக் கணத்திலேயே,

*யானே அரசன் யானே கள்வன்*
*மன்பதை காக்கும் தென்புலங் காவல்*
*என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்*

எனக் கூறி, கோவலன் உயிரைப் போக்கியதால் வளைந்த செங்கோலைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்தி விட்டான் நெடுஞ்செழியன்.

காவி யுகுநீருங் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி ஞன்.

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்ருன்அக் காரிகைதன் சொல்
உண்டளவே தோற்ருன் உயிர். [செவியில்

என்ற வெண்பாக்களில், நீதி மன்னன் நெடுஞ்செழியனின் நிலையைச் சித்திரம் தீட்டிக் காட்டுகிருர் இளங்கோவடிகள்.

வஞ்சி மகளிரும்,

தொல்லே வினையால் துயருழந்தாள் கண்ணின் நீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ!

எனக் கொடுங்கோலேச் செங்கோலாக்கிய கோவேந்தனை வாழ்த்துகின்றனர்.

## வள்ளுவர் வழிநின்ருன்

திருவள்ளுவர், அரசனுக்கு இலக்கணம் கூறுகையில், காட்சிக்கு எளியஞகவும், கடுஞ்சொல் பகராது இன்சொல் இயம்புவோஞகவும், செவி கைக்கும் சுடு சொற்களேயும் பொறுத்து நீதி வழங்குவோஞகவும் இருப்பவனே **பண்புடைய வேந்தன்** என்ருர். வள்ளுவர் கூறும் இந்த இலக்கணங்களுக்கு ஏற்ற இலக்கியமாக இருந்தான் பாண்டிவேந்தன் நெடுஞ்செழியன்.

தன்னிடம் முறையிட்டுக் கொள்ளக் கண்ணகி தேவி அரண்மனே வாயிலே அடைந்திருப்பதை அறிந்ததும், **"அவளே இங்கு அழைத்து வருக!"** என்று வாயில் காவலனுக்குக் கட்டளே யிட்டதனுல், பாண்டியன்

நெடுஞ்செழியன் குடிகளின் காட்சிக்கு எளியவன் என்பதையும்; தன் முன் நின்ற கண்ணகி, தன்னைத் **'தேராமன்னா !'—'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே !'** என்றெல்லாம் சுடுசொல் சொல்லியபோதும் பொறுத்ததால், செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்புடையாளன் என்பதையும்; கண்ணகி ஆவேசங் கொண்டு சினந்து பேசியபோதும், **"பெண்ணணங்கே ! கள்வனைக் கோறல் கடுங்கோலன்று; வெள்வேற் கொற்றங்காண் !"** என்று இனிய சொற்களால் தன் கட்சியை எடுத்துரைத்ததால், கடுஞ்சொல்லன் அல்லன் என்பதையும் அறிகிறோம்.

## முதல் தவறு; ஒரே தவறு !

நெடுஞ்செழியன், தனது ஆட்சிக்காலத்தில் இழைத்த ஒரே தவறு கோவலனைக் கொன்றதேயாகும். **"வளையாத செங்கோல் வளைந்ததே !"** என்று இளங்கோவடிகள் கூறுவதும், **"பழியொடு படராப் பஞ்சவ வாழி !"**என வாயில் காவலன் வாழ்த்துவதும், **'மண் குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை தண்குடை'** என்று மதுரைக் குடிமக்கள் அவனது வெண்கொற்றக் குடையின் தன்மையைக் கூறுவதும்,

"..................காதின்
மறைநா வோசை அல்லது யாவதும்
மணிநா வோசை கேட்டதும்இலனே
அடிதொழுது இறைஞ்சா மன்ன ரல்லது
குடிபழி தூற்றும் கோலனு மல்லன்."

என்ற மதுராபுரித் தெய்வத்தின் கூற்றும், பாண்டியன் நெடுஞ்செழியன் நீதி மன்னனே என்பதை நிச்சயிக்கின்றன.

## கண்ணகியே சொன்னாள்

'வாழ்த்துக் காதை'யில் கண்ணகியும்,

*தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்*
*நல்விருந்து ஆயினுன் நானவன் தன்மகள்*

என்று கூறிப் பாண்டியனுக்குற்ற பழியைத் துடைக்கிருள்.

இவற்றிலிருந்து, ருஷ்ய ஜார், இங்கிலாந்து சார்லஸ் போன்ற கொடுங்கோலர்களுக்கும் தமிழ் நாட்டு வேந்தனை நெடுஞ்செழியனுக்கும் உள்ள வேற்றுமை எளிதில் விளங்கும்.

## மனநிலை அங்கும் இங்கும்

இனி, மேலை நாடுகளில் கொடுங்கோலரை வீழ்த்திய மக்களின் மன நிலைக்கும், நெடுஞ்செழியனின் அரசை அழித்த கண்ணகியின் மனநிலைக்கும் பெருத்த வேற்றுமையைக் காண்கின்ருேம். அங்கே, கொடுங்கோல் மன்னர்களால் சமுதாயம் முற்றும் கவலைப்படக் கூடிய வகையில் அந்த நாடுகளின் செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்துவிட்ட பொழுதுதான் குடிமக்கள் பொங்கி எழுந்து புரட்சி செய்தனர். ஆனல், பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோல் பிறழ்ந்தது அதுதான் முதல் தடவை என்ருலும், கண்ணகி பொறுத்தாளில்லை. கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டதும், **"தீவேந்தன்பாற் சென்று இத்திறங் கேட்பல் யான்"** என்று அரண்மனை நோக்கி விரைந்து சென்று, அரசனைக் கண்டு, அவனது செங்கோல் கொடுங்கோலானதை உணர்த்தி அரசையழிக்கிருள். பின்னரும், **"ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்"** என்று வஞ்சினம் கூறி, மதுரையைத் தீக்கிரையாக்குகிருள். இவற்றிலிருந்து சிலப்பதிகாரம் உணர்த்தும் செந்நெறி என்ன ? அரசு ஒரு முறை நீதி பிழைக்கினும், அது அழித்தற்குரியதே யன்றி, மேற்கொண்டு ஆளுதற்குரிய தன்று என்பதே யாகும்.

## பரம்பரைப் பண்பு

பாண்டிய மன்னரின் மரபு, செங்கோலரை யன்றி கொடுங்கோலரைக் கண்டதில்லை. **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** என்பான், சிலப்பதிகார நெடுஞ்செழியனுக்கு முன் தோன்றியவன் என்பர் ஆராய்ச்சியாளர். அவன் தன்னை எதிர்த்த பகையரசர் ஒன்பதின்மருடன் தலையாலங்கானத்தில் போரிடப் புறப்பட்ட போது, தன் பகைவரை முறியடித்து வெற்றி காணுவிடில்,

*"என் நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது*
*'கொடியன் எம்இறை'எனக் கண்ணீர் பரப்பிக்*
*குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!"*

என்று தன் செங்கோல்மீது ஆணைவைத்துச் சென்றான். போரில் தோல்வியுறுவதால் ஏற்படும் துன்பத்தைவிடக் குடிமக்கள் **"எம் அரசன் கொடியன்"** என்று கூறுவதையே அம்மன்னன் பெருந்துன்பமாகக் கருதினான். ஆம், குடிமக்கள் போற்றிக் கோலோச்சுவதே பாண்டி வேந்தரின் பரம்பரைப் பண்பு.

குற்றமற்ற கோவலனைக் கொன்றதால், தன் செங்கோல் கொடுங்கோலானதை யறிந்த நெடுஞ்செழியன்,

*"மன்பதை காக்கும் தென்புலங் காவல்*
*என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்"*

"வாழையடி வாழையாக நீதி மன்னரைப் பெற்றெடுத்த தென்னவர் மரபுக்கு என்னால் பழி நேர்ந்து விட்டது; என் ஆயுள் அழியட்டும்; அதனால் என் பாண்டிய மரபிற்குற்ற பழி நீங்கட்டும்" என்று கூறி உயிர் துறக்கிறான். ஆம்; செங்கோல் வளைந்தபின் உயிர் வாழ்வது செந்தமிழ் வேந்தரின் பண்பன்று.

நெடுஞ்செழியன் இறந்ததைச் சேரன் செங்குட்டுவன் கேள்வியுற்றதும்,

*வல்வினை வளைத்த கோலை மன்னவன்*
*செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது*

என்று கூறி, நீதிக்காக நெடுஞ்செழியன் செய்த உயிர்த் தியாகத்தைப் போற்றுகிறான்.

*புகழெனின்உயிரும் கொடுக்குவர் பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர்*

—*புறம்*

*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின்*

—*குறள்*

என்று தமிழினத்தின் பண்பிற்கு இலக்கணம் கூறினர் பெரியோர். அதற்கு இலக்கியமாக அமைந்துள்ளது பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாறு.

இதுவரை கூறியவற்றால், கோவலன் கொலைக்குக் காரணமாயிருந்த பாண்டியன் நெடுஞ்செழியன், குடிமக்கள் போற்றும் கொற்றவன்—கவியரசர் போற்றும் காவலன் என அறியலாம்.

*தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணி(ன்)நீர்*
*கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ*
*வாழியரோ வாழி வருபுனல்நீர் வையை*
*சூழு மதுரையார் கோமான்றன் தொல்குலமே!*

# சிலப்பதிகாரக் காலத்துச் சோழ மன்னன் யார்?

---

சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தில், பாண்டி நாட்டை நெடுஞ்செழியனும், சேர நாட்டைச் செங் குட்டுவனும் ஆண்டனர் என்பது மதுரைக் காண்டத் தாலும், வஞ்சிக் காண்டத்தாலும் உறுதிப்படுகின்றது. அதுபோல, அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்ட மன்னன் யார் என்பது புகார்க் காண்டத்தில் தெளி வாகக் கூறப்படவில்லை.

## பழைய உரையாசிரியர்கள்

மங்கல வாழ்த்துக் காதையில் கண்ணகி—கோவலன் திருமணத்தின் போது இளம் பெண்கள் சிலர் மண மக்களைப் பின்வருமாறு வாழ்த்துகின்றனர் :

......தங்கிய
இப்பால் இமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா எப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோ னெனவே

இந்த வாழ்த்தில் வரும் 'செருமிகு சினவேற் செம்பியன்' என்பதற்குப் 'போர் மேம்பட்ட வேலை யுடைய கரிகாலன்' என உரை எழுதி யிருக்கின்றார் அடியார்க்கு நல்லார்.

மற்றும் அரங்கேற்றுக் காதையில், மாதவி, சோழ மன்னன் முன்பு தனது நாட்டியத்தை அரங்கேற்றிய தாகக் கூறும்,

*தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னை*
*ஆடலும் பாடலும் அழகும் என்றிக்*
*கூறிய மூன்றின் ஒன்றுகுறை படாமல்*
*ஏழாண் டியற்றியோர் ஈராறுண்டிற்*
*சூழ்கழன் மன்னர்க்குக் காட்டல் வேண்டி*

என்ற வரிகளில், 'சூழ்கழல் மன்னன்' என்ற சொல் லுக்கு, 'வீரக் கழல் சூழ்ந்த காலினையுடைய சோழன் கரிகாற் பெருவளத்தான்' என்று உரை கூறியிருக் கின்றார் அடியார்க்கு நல்லார். அரும்பத உரையாசிரிய ரும், மாதவியின் நாட்டியம் அரங்கேற்றப்பட்ட இடம் கரிகாலன் அரசவை என்றே கூறுகின்றார்.

## நாவலர் ந. மு. வே. நாட்டார்

ஆனால், மேற்சொன்ன இரு உரையாசிரியர்களின் கருத்துக்கு மாறாக, 'சிலப்பதிகாரக் காலத்துச் சோழ மன்னன் கரிகால் வளவன் அல்லன்' என்கிறார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

அரங்கேற்றுக் காதையில், 'சூழ்கழல் மன்னன்' எனப் பொதுப்படையாகக் கூறியதன்றி, 'கரிகாலன்' என்று இளங்கோவடிகள் குறிப்பிடாததைத் தமது மாறுபட்ட கருத்துக்குச் சான்றாகக் காட்டுகின்றார் நாவலர்.

மற்றும் இந்திர விழவூரெடுத்த காதையில்,

செருவெங் காதலின் திருமா வளவன்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்

என்ற வரிகளில், 'திருமாவளவன்' எனப் பெயர் குறிப்பிடினும், 'அந்நாள்' என்ற சொல்லால் கரிகாலன் இமயம் சென்றது முன் எப்போதோ நிகழ்ந்த சம்பவமாகக் குறிப்பிட்டிருப்பதையும் நாவலர் தமது கருத்துக்கு ஆதாரமாகக் காட்டுகின்றார்.

"மதுரைக் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனையும், வஞ்சிக் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் சேரன் செங்குட்டுவனையும் கிளந்தோதும் அடிகள், புகார்க் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் சோழன் ஒருவனையும் பெயர் குறித்துக் கூறாமையாலும் கரிகாலன் அப்போது இருந்தான் என்று துணிதல் சாலாதென்க"

என, தாம் உரை எழுதி வெளியிட்டுள்ள சிலப்பதிகார நூலில் நாவலர் நாட்டார் குறிப்பிட்டிருக்கின்றார்.

## இராமச்சந்திர தீட்சிதர்

அறிஞர் வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரும், நாவலர் நாட்டாரைப் போன்றே சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தில் சோழ நாட்டை ஆண்டவன் கரிகால் வளவன் அல்லன் என்கின்றார்.

"கரிகாலன் இமயம் சென்றதையும், காவிரிப் புதுநீர் ஆடியதையும் 'அந்நாள்' என்னும் சொல்லாலே முன்னிகழ்ந்த நிகழ்ச்சிகளாக இளங்கோவடிகள் குறிப்பார். இச் செய்தியால், சிலப்பதிகாரம் தோன்றிய

காலத்திற்கு முன்னரே கரிகாலன் இருந்தமை தெரியலாம். ஆனால், காப்பியம் தோன்றிய காலத்துக்கும், கரிகாலன் இருந்த காலத்துக் கும் இடையீடு மிகச் சிறிது ''

என்று, டாக்டர் ஆர். கே. சண்முகம் அவர்களால் உரை எழுதி வெளியிடப்பட்டுள்ள புகார்க் காண்டத் துக்குத் தாம் கொடுத்துள்ள மதிப்புரையில் தீட்சிதர் குறிப்பிடுகின்றார். மேலும்,

"சிலப்பதிகார உரைகள் கரிகாலனைச் செங்குட்டுவற்குச் சம காலத்தவன் எனக் கூறும். இக்கூற்றுகள் சிலப்பதிகாரத்தோடு மாறுபட்டனவாய்க் காண்கின்றன. புறநா னூறு, அகநானூறு முதலான தொகை நூல் கள், கரிகாலன் ஒரு பழைய சோழ வேந்தன் எனக் கூறும்''

என்றும் தீட்சிதர் கூறுகின்றார்.

## தெரிவிக்க வில்லை

பொதுவாகச் சிலப்பதிகாரத்தைத் துருவி ஆரா யுங்கால், அக்கதை நிகழ்ந்த காலத்தில் சோழநாட்டை ஆட்சி புரிந்த மன்னன் கரிகால் வளவன்தான் என்று கூறுவதற்கில்லை. ஆனால், வேறு யாரேனும் ஒரு மன்னன் சோழ நாட்டை ஆண்டிருக்க வேண்டும். அவனுடைய பெயரை நாவலர் நாட்டாரோ, இராமச் சந்திர தீட்சிதரோ தெரிவிக்க வில்லை.

சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள், வேண்டுமென்றே சோழ நாட்டு மன்னன் பெயரை வெளிப்படையாகக் கூறாமல் திரையிட்டு மறைத்து விட்டார்.

அதற்குக் காரணமென்ன ?

சோழ நாட்டு மன்னன் மீது இளங்கோவுக்குப் பகை உணர்ச்சி இருந்ததாகச் சிலப்பதிகாரத்தில் சான்றில்லை. மங்கல வாழ்த்துக் காதையில், திங்களைச் சோழ மன்னன் வெண்குடையோடும், ஞாயிற்றினை அவனுடைய ஆணைச் சக்கரத்தோடும் ஒப்பிட்டுக் கூறிப் பெருமைப் படுத்துகின்றார் இளங்கோவடிகள்.

கானல் வரிப் பாட்டிலும், கோவலன்—மாதவி மூலம் சோழ மன்னனின் செங்கோற் சிறப்பை வெளிப் படுத்துகின்றார்.

வழக்குரை காதையிலும், கண்ணகியின் வாயுரை யாகச் சோழர் குலத்தின் சிறப்பைப் பாண்டியனுக்கு உணர்த்தி வைக்கின்றார்.

இப்படிச் சிலப்பதிகாரத்தின் காண்டங்கள் தோறும் சோழர் பரம்பரையின் சிறப்புக்களை விரித் துரைக்கும் இளங்கோவடிகள், சோழ மன்னனின் பெயரைக் கூறாமல் விட்டதற்குப் பகை உணர்ச்சி காரணமாக இருக்க முடியாது.

## வழி இல்லை

சோழ மன்னனின் பெயரைக் கூறாமல் விட்ட தற்குக் காரணம், சிலப்பதிகாரக் கதையில் பாண்டிய னோடும் சேரனோடும் சோழனை சமத்துவமாக நிறுத்தி வைத்துக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போனதுதான்.

சிலப்பதிகாரம், உண்மையில் நிகழ்ந்த சம்பவங் களைக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்றுக் காப்பியம். ஆகவே, வரலாற்று நிகழ்ச்சிப்படி சோழ மன்னனைக் காப்பியத்தோடு பிணைப்பதற்கான சம்பவங்கள் எதுவு மில்லை. ஆகவே, புகார் மன்னனின் பெயரைக் கூறாமல் விடுவதே அவனுக்குச் செய்யும் மரியாதை என்று இளங்கோவடிகள் எண்ணியிருக்க வேண்டும்.

## மூன்றும் இடமா தருவது!

சிலப்பதிகாரத்தைக் கற்பனைக் காப்பியமாகவே கொண்டாலும், புகார்க் காண்டத்தில் சோழமன்னனின் சிறப்புக் கேற்ப நிகழ்ச்சிகளைப் படைக்க இளங்கோ வடிகளுக்கு வாய்ப்பில்லை. காரணம், புகார்க் காண் டத்தில் கண்ணகிக்கு அடுத்தபடியாக மாதவியே பிரதான பாத்திரமாகி விட்டாள்; ஆக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இந்நிலையில், சோழ மன்னனுக்கெனச் சம்பவங்களைச் சிருஷ்டித்தாலும், அவன் காப்பியத்தில் மூன்றும்தரமான பாத்திரமாக வன்றிப் பிரதான பாத்திரமாக இயங்க முடியாது.

மதுரைக் காண்டத்தில் பாண்டியனையும், வஞ்சிக் காண்டத்தில் செங்குட்டுவனையும் கண்ணகிக்கு அடுத்த பிரதான பாத்திரங்களாகச் செய்துவிட்டு, புகார்க் காண்டத்தில் சோழ மன்னனை மூன்றுந் தரமாகச் செய்ய இளங்கோவடிகள் விரும்பாதது இயற்கையே.

இதே காரணத்தினால்தான், வஞ்சிக் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் சேரன் செங்குட்டுவனையும், மதுரைக் காணடத்தின் இறுதிக் கட்டுரையில் பாண்டி யன் நெடுஞ்செழியனையும் குறிப்பிட்ட இளங்கோ வடிகள், புகார்க் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் சோழ மன்னனைக் கூறாமல் நாட்டியக் கலையின் சிறப பைக் கூறி முடித்தார்.

ஆம்; சோழ மன்னன் சிலப்பதிகாரக் காப்பியத் தின் பாத்திரமல்லன். அதனால், புகார்க் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் அவன் பெயர் குறிப்பிடப்பட வில்லை. பாண்டியனும் சேரனும் முறையே மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் ஆகியவற்றில் பிரதான

பாத்திரங்களாக வருகின்றார்கள். ஆகவே அவர்களுடைய பெயர்களை, அந்தக் காண்டங்களின் இறுதிக் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார் இளங்கோவடிகள்.

சிலப்பதிகார காலத்தில் கரிகால் வளவன் சோழ நாட்டை ஆண்டதாகச் சொல்வதற்கில்லை. கிள்ளி வளவன் என்ற சோழ மன்னன் முன்புதான் மாதவி நாட்டியமாடிப் பரிசு பெற்றாள் என்று கூறலாம்.

# மாதவியின் கடிதம்

சிலப்பதிகாரத்தில் வரும் மாதவி, ஆடல், பாடல், அழகு என்ற மூன்றில் ஒன்றும் குறையாதவள் என்கின்ருர் இளங்கோவடிகள். அவற்ருேடு, மாதவி அறிவிலும் நடத்தையிலும் சிறந்தவள் என்பதைச் சிலப்பதிகார நிகழ்ச்சிகளால் அறிகிருேம்.

''கானல் வரி''யில், கோவலனும் மாதவியும் முன்னும் பின்னுமாக வரிப் பாடல்கள் பாடுகின்றனர். வேடிக்கையாகப் பாடிய அந்தப் பாடல்கள் 'வினை' யாக முடிந்துவிட்டன.

## ஆணுக்கும் கற்பு வேண்டும்

வரிப்பாடலில் 'கற்பு' நெறி பற்றிக் கோவலனும் மாதவியும் கருத்து வேற்றுமை கொள்கின்றனர். கற்பில் ஆண் தவறினுலும், பெண் தவறுவதில்லை. ஆண் தவறுவது இயற்கை; பெண் தவறக்கூடாதென்பது மரபு என்ற கருத்தை வரிப்பாடலில் வெளிப்படுத்துகிருன் கோவலன்.

*திங்கள் மாலை வெண்குடையான்*
*சென்னி செங்கோ லதுவோச்சிக்*
*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்*
*புலவாய் வாழி காவேரி!*

என்ற வரிகளில், "காவிரியானவள், தனக்கே உரிய சோழ மன்னன் கங்கை என்னும் பெண்ணைக் காதலித் தாலும், தான் அவன்மீது கோபிப்பதில்லை" என்ற கருத்தை வெளியிடுகிறான், கோவலன். அத்துடன், அப்படி நடந்துகொள்வதுதான், "மங்மை மாதர் பெருங் கற்பு" என்றும் உறுதிப் படுத்துகின்றான்.

இதற்கு நேர்மாறான கருத்தை அமைத்து மாதவி வரிப்பாடல் பாடுகின்றாள்.

பெண்கள் கற்பு நெறியில் நிலைத்து வாழவேண்டு மானால், ஆண்களும் கற்பு நெறியைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசிய மென்கிறாள். இதை,

*மருங்கு வண்டு சிறந்தார்ப்ப*
*மணிப்பூ ஆடை அது போர்த்துக்*
*கருங்கயற்கண் விழித் தொல்கி*
*நடந்தாய் வாழி காவேரி*
*கருங்கயற்கண் விழித் தொல்கி*
*நடந்தவெல்லாம் நின் கணவன்*
*திருந்து செங்கோல் வளையாமை*
*அறிந்தேன் வாழி காவேரி*

என்ற வரிகளால் நாம் அறிந்து கொள்கிறோம்.

## முதற் கடிதம்

மாதவி, குலத்தால் பரத்தையாயினும், குணத் தால் ஒருவனையே நேசித்த உத்தமியாக வாழ்ந்தாள். வாழ்நாள் முழுவதும் கோவலனை யன்றி, பிறிதொரு

ஆடவனை அவள் நெஞ்சாலும் நினைத்ததில்லை. கானல் வரிப் பாட்டில் கோவலனுக்குப் புத்தி புகட்டும் பொருட்டுத் தானும் வேறொருவனைக் காதலித்தவள் போல் வேடிக்கையாக நடித்தாள். இஃதன்றி, வேறு எந்த நிலையிலும், அவளுடைய கற்பு நெறிக்குக் களங்கம் சொல்ல முடியாது. என்றாலும், இளங்கோவடிகள் கூறுவதுபோன்று 'வினை' இருவரையும் பிரித்து விட்டது.

**சாகசக் கடிதம்**

ஆனால், கோவலனின் பிரிவை ஒரு நாளைக்குக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாதவளாய் வேதனைப் பட்டாள் மாதவி. தன் வேதனைகளை யெல்லாம் விளக்கிக் கடிதம் எழுதி, அதைத் தனது தோழியான வசந்தமாலையின் கையில் தந்து, கோவலனிடம் கொடுத்து, அவனைக் கையோடு அழைத்து வருமாறு கட்டளை யிடுகின்றாள்.

*மன்னுயி ரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்*
*இன்இள வேனில் இளவர சாளன்*
*அந்திப் போதகத்(து) அரும்பிடர்த் தோன்றிய*
*திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்*
*புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்*
*தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்*
*நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்*
*இறும்பூ தன்றிஃது அறிந்தீமின்*

என, தனது காம உணர்ச்சியை எல்லாம் வெளிப் படுத்தி, அதே உணர்ச்சி கோவலனிடமும் எதிரொலி செய்யும் வகையில் வெகு சாகசமாகக் கடிதம் எழுதினாள் மாதவி.

மாதவி தந்த ஓலையைப் பெற்ற வசந்தமாலை கோவலனை அடைந்து ஓலையை அவன் கையில் கொடுத்தாள். ஆனால், மாதவியின் கடிதத்தைப்

பெற்ற பிறகும் கோவலனுடைய மனம் மாறவில்லை. அவளோடு தான் கூடி வாழ்ந்த காலத்தில் தன்னை எப்படி யெல்லாம் மயக்கிஞள், ஆடிப்பாடித் தன்னை அடிமைப்படுத்திஞள் என்பவற்றை வெறுப்போடு கூறி, வசந்தமாலை முன்பு நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்துகின்ருன் கோவலன்.

கடிதம் பயனற்றுய் போனதை அறிந்த மாதவி கவலை கொள்கிருள். கோவலன் தன்ஞேடு வாழ்ந்த காலத்தில், தான் அவனுக்கு இன்ப மூட்டிய சம்பவங் களைக்கூட அவன் சந்தேகித்துப் பழித்தது கேட்டுச் சஞ்சலமடைகின்ருள்.

## மன மாற்றம்

இதிலிருந்து மாதவி ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்கிருள். ஆம்; கோவலன், மாதவியாகிய தன்னை மட்டும் வெறுத்தானில்லை; சிற்றின்ப வாழ்க்கை யையே வெறுத்துவிட்டான் என்ற முடிவுக்கு வரு கின்ருள். தன் விஷயத்தில் கோவலன் மன மாற்றம் அடைந்ததுபோல, தானும் கோவலனைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணத்தில் புரட்சிகரமான மாற் றத்தை அடைகின்ருள்.

## இரண்டாவது கடிதம்

தனது மனமாற்றத்தை விளக்கி, கோவலனுக்குத் தன்ஞல் நிகழ்ந்த துன்பங்களுக்காக மன்னிப்புக்கோரி மீண்டும் ஒரு கடிதம் எழுதுகிருள் மாதவி.

முன்னர் எழுதிய கடிதத்தை வசந்தமாலையிடம் கொடுத்தனுப்பிஞள். “இந்தக் கடிதத்திலுள்ள நுட் பங்களையெல்லாம் உனது சாகசத்தால் கோவலன் விளங்கிக் கொள்ளும்படி செய்து, இப்பொழுதே, இங்கேயே கோவலனைக் கொணர்வாயாக” என்று

ஆணையிட்டு அனுப்பினுள். ஆனுல், இரண்டாவதாக எழுதிய கடிதத்தை மதி நலம் மிக்க கௌசிகன் என்னும் அந்தணன் கையில் தந்து, அதைக் கோவலனிடம் கொடுத்து வரும்படி அனுப்புகின்ருள் மாதவி. இந்த ஆள் மாற்றம் நன்கு ஆராய்ந்து அனுபவிக்கத் தக்க தாகும்.

## சாந்திக் கடிதம்

முன்னர்த் தான் கோவலனுக்கு எழுதிய கடிதத்தின் ஆரம்ப வரிகளில் காம உணர்ச்சி யூட்டும் காதல் மொழிகளை வரைந்தாள். இளவேனிலையும் திங்களையும் நினைப்பூட்டினுள். தலைவனைப் பிரிந்து வாழும் தலைவிக்குள்ள துன்பத்தையும் கோவலனுடைய கவனத்துக்குக் கொண்டு சென்ருள். அதற்கெல்லாம் நேர் மாருக,

> அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
> வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
> குரவர் பணியன்றியும் குலப்பிறப் பாட்டியோ(டு)
> இரவிடைக் கழிதற்கு என்பிழைப் பறியாது
> கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
> பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி!

என்ற வரிகளில், கோவலனுடைய உள்ள முருக, ஊனுருக, உயிரும் உருக எழுதுகின்ருள் மாதவி.

அதுவரை தனது காதலனுகக் கருதிய கோவலனை 'அடிகள்' என்றும், 'பொய்தீர் காட்சிப் புரையோய்' என்றும், உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றி வழி படுகின்ருள் மாதவி. 'கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்' என்ற வரிகளில், தான் அறியாமல் செய்த பிழைகளுக்காகத் தன்னை மன்னிக்க வேண்டும் எனக் கெஞ்சுகின்ருள்.

மாதவி எழுதிய மனமுருக்கும் கடிதத்தைக் கௌசிகன் மூலம் பெற்ற கோவலன், ‘மாதவி செய்த தவறு ஒன்றுமில்லை. எல்லாக என்னால் ஏற்பட்டனவே’ என்று கூறினான்.

**மகன் தந்தைக்கு எழுதியதாக......**

அத்துடன் நில்லாமல், மாதவி தனக்கு எழுதிய கடிதத்தை அப்படியே தான் எழுதியதைப் போன்று தன் தந்தை மாசாத்துவானுக்கு அனுப்பி வைக்கின்றான் கோவலன்.

ஆக; மாதவி, காதலனுக்கு எழுதிய கடிதம் கோவலனின் தந்தைக்கும் பொருந்துவதாக இருந்தது. இதிலிருந்து, சிற்றின்ப வெறியிலிருந்து விடுபட்ட கோவலனை, தந்தையாக, குருவாக எண்ணி மாதவி கடிதம் எழுதினாள் என்பது புலனாகின்றது.

# கோவலன் பிரிவுக்குக் கண்ணகி காரணமா ?

சிலப்பதிகாரக் கண்ணகி குறைபாடு ஏதுமற்ற குணவதி ஆவாள். கோவலன், மாதவி இல்லம் சென்றதற்கோ, பின்னர் மாதவியையும் பிரிந்ததற்கோ, அதற்கும் பின்னர்ச் சோழநாடு பெயர்ந்து பாண்டி நாடடைந்து கொலையுண்டதற்கோ கண்ணகி தேவி ஒரு சிறிதும் காரணம் அல்லள்.

## ஊடல் அறியாதவளா ?

ஆயினும், 'இலக்கியத் திறனாய்வு' என்ற கண்ணோட்டத்தில் சிலப்பதிகாரக் காப்பியத்தை ஆராயும் புலவர்கள் சிலர், கண்ணகியிடமும் ஒரு குறையைக் காண்கின்றனர். அதாவது, "கோவலனுடைய சிற்றின்ப வேட்கையைத் திருப்தி செய்யும் திறமை கண்ணகியிடம் இல்லை; குறிப்பாக, ஊடற்பண்பு கண்ணகியிடம் இருந்திருக்குமாயின், கோவலன், மாதவியை நாடியிருக்க மாட்டான்" என்கின்றனர்.

இது உண்மை என்றே கொண்டாலும், கண்ணகியின் சிறப்பு—தெய்விகத் தன்மை கொஞ்சமும் குறைந்து விடவில்லை என்றாலும், இந்தக் குறைபாடு ஏற்கத் தக்கதன்று. இதற்கான காரணங்கள் சிலப்பதிகாரத்திலேயே பொதிந்து கிடக்கின்றன.

கோவலன் மாதவியோடு வாழ்ந்த காலத்தில்,

*நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்*
*கலவியும் புலவியும் காதலற்கு அளித்து*
*கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்து*

மாதவி கோவலனை இன்பக் கடலில் ஆழ்த்தியதாக இளங்கோவடிகள் கூறுகின்றார். இதுபோன்று, கோவலன் கண்ணகியோடு வாழ்ந்த காலத்தில் அவர்கள் ஊடலின்பம் துய்த்ததாகச் சிலப்பதிகாரத்தில் செய்தி இல்லை என்பதனாலேயே கண்ணகி தேவிக்கு ஊடல் புறம்பானது என்று கூறுவதற்கில்லை.

கோவலன், கண்ணகியோடு சில ஆண்டுகள்தான் வாழ்ந்தான். அவர்கள் இருவரும் சிற்றின்பம் துய்த்த செய்தியை மனையறம்படுத்த காதை ஒன்றில்தான் அறிய முடிகின்றது. அங்கும் மணவினை அடுத்து, புதுத் தம்பதிகள் பள்ளியறை புகுந்த காட்சியை மட்டும்தான் காண்கிறோம். ஆகவே, கூடலும் ஊடலும் பெற்று, கலவியும் புலவியும் கண்டு கண்ணகியோடு கோவலன் வாழும் செய்தியைக் கூறுவதற்குச் சந்தர்ப்பமே இல்லை.

## எல்லா இன்பமும்...

ஆயினும், புதுத் தம்பதிகளாகப் பள்ளியறை புகுந்த அன்றே கோவலனும் கண்ணகியும்,

தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனஒருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமம்
தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று

இன்ப வாழ்வு வாழ்ந்ததாக எடுத்தோதுகின்றது சிலப்பதிகார வெண்பா.

ஆம், காமனும் ரதியும் போலக் கைகலந்து இன்பம் துய்த்தார்கள்; யாக்கையின் நிலையாமை அறிந்தவர் போல வாழ்க்கையின் துவக்கத்திலேயே **எல்லா இன்பங்களையும்** துய்த்தார்கள்.

இது, கோவலன்—கண்ணகியின் சிற்றின்ப வாழ்வு பற்றிச் சிலம்பு தரும் செய்தி.

இரு பாம்புகள் பிரிக்க முடியாதவாறு ஒன்றுபட்டு உணர்விழந்து தழுவினாற்போலக் கோவலனும் கண்ணகியும் மருவினார்கள் என்று ஓர் அழகிய உவமையோடும் அவர்களுடைய ஆனந்த வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறார் சிலப்பதிகார ஆசிரியர்.

## கண்ணகியிடம் கோவலனுக்குக் குறையில்லை

கண்ணகி தந்த கலவியில் கோவலனுக்குக் குறை இருந்ததாகத் தெரியவில்லை. ‘தாரும் மாலையும் மயங்கிக் கையற்றுத் தீராக் காதல்’ கொண்டு கண்ணகியோடு வாழ்ந்தான் கோவலன். கண்ணகியின்பால் அவன் கொண்ட களங்கமற்ற காதலால், அவளுடைய அங்கங்கள் ஒவ்வொன்றையும் தெய்விக அம்சங்களோடு ஒப்பிட்டு வருணிக்கின்றான். மேலும், ‘‘அலையிடைப் பிறவா அமிழ்தே! மலையிடைப் பிறவா

மணியே! யாழிடைப் பிறவா இசையே!'' என்றெல்லாம் கண்ணகியை வாயாரப் போற்றுகிறான் கோவலன்.

இதுவரை கூறியவற்றால் கோவலன் தன் இல்லக் கிழத்தியான கண்ணகியோடு கூடிவாழ்ந்த காலத்தில் அவளிடம் அவன் ஒரு குறையும் காணவில்லை என்று அறிகிறோம். 'தொலையாத இன்பமெலாம் துன்னினார்' என்று வெண்பாவில் கூறியதால் வாழ்விற்குரிய ஊடலின்பத்தையும் புகார்த் தம்பதிகள் துய்த்தார்கள் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

## அவ்வாறாயின் பிரிந்தது ஏன்?

''இதெல்லாம் உண்மையானால், பின்னர்க் கோவலன், கண்ணகியைப் பிரிந்து மாதவியின் இல்லம் செல்லக் காரணம் என்ன?'' என்று கேட்கலாம். ஆம், மனையறம் படுத்த காதையில் கோவலன் கண்ணகியைப் பற்றிக் கூறும் புகழுரையைப் படித்தால், 'இவ்வளவு மனநிறைவுடைய கோவலன் கண்ணகியை விட்டு ஏன் பிரிந்தான்?' என்ற கேள்வி எவர் மனத்திலும் எழுவது இயல்புதான்.

கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்ததற்கு அவளிடம் காரணம் எதுவுமில்லை. ஆனால், மாசாத்துவான் மகனான அவன், மாதவிமீது காதல் கொண்டதற்குக் காரணம் இருக்கிறது. அந்தக் காரணத்தை ஆராய்ந்து கண்டால், அதுவே கோவலன் கண்ணகியைப் பிரிந்ததற்கும் ஆதாரமாய் இருப்பதை அறிந்து கொள்வோம்.

## கலை: ஆடல், பாடல், அழகு!

பூம்புகாரின் பொற்கொடியான மாதவி, கண்ணகியினும் இளம் பருவத்தினள்; ஆடலிலும் பாடலிலும்

வல்லவள்; அழகிலும் சிறந்தவள். கோவலனும் 'கண்டேத்தும் செவ்வேள்' போன்று காட்சி தரும் அழகுடையவன். அத்துடன நல்ல கலையுணர்வும் படைத்தவன்; யாழ் வாசிப்பதிலும் வல்லவன். இந்தக் கலையார்வம் காரணமாகச் சோழன் அவையிலே நடைபெற்ற மாதவியின் நடன அரங்கேற்றத்திற்குச் சென்றிருப்பான். அங்கு முடிமன்னன் முன்பு அடி யெடுத்து ஆடிய மாதவியைக் காண்கிறான். அவளு டைய அழகில் மட்டுமல்லாமல், ஆடல்— பாடல் முதலியவற்றிலும் கோவலன் தனது உள்ளத்தைப் பறிகொடுக்கிறான். அதன் விளைவாக, பத்தினிக் கண்ணகியை மறந்து மாதவியின் இல்லம் சென்று 'விடுதலறியா விருப்பினன் ஆகி' அங்கேயே மயங்கிக் கிடக்கிறான். ஆம், கோவலன் மாதவியின் பின்னே செல்லக் காரணம், காதல் உணர்வு மட்டுமன்று; கலையின்பால் கொண்ட ஆர்வமும் ஆகும். கலைஞன் கோவலன் கலையரசி மாதவியைக் காதலித்தான்.

## ஊடல் : கேடுகளின் வித்து

மற்றும், சிலப்பதிகாரத்தை நுணுகி ஆராய்ந்தால், 'ஊடல்' என்பது காதலர் பிரிவுக்கும், வேறு பல கேடுகளுக்கும் வித்தாக இருப்பதை அறிவோம்.

## புகார்க் காண்டத்தில்

கடலாடு காதையில் இந்திர விழாவை யொட்டி நடனமாடுகின்றாள் மாதவி. வானகத்துத் தேவர் முதல் புகார் நகரத்து மக்கள் வரை எல்லோரும் மாதவியின் ஆடல் பாடல்களை மட்டுமன்றி, அழகையும் கண்டு ஆனந்தம் எய்துகின்றனர். தனக்கே உரிய மாதவியின் அழகும் கலையும் பிற ஆடவருக்கும் விருந்தாதல்

கண்டு கோவலன் அவளோடு ஊடல் கொள்கின்றான். அவனது ஊடலைத் தீர்க்கவென்றே தன்னைப் பலவாறு அலங்கரித்துக் கொண்டு, யாழிசைத்து அவனுக்கு இன்பமூட்ட முயல்கின்றாள் மாதவி. ஆனால் தீராத ஊடல் கொண்ட கோவலன் திருப்தியடையவில்லை. ஆகவே, காவிரி கடலொடு கலக்கும் இடத்திற்கு அவனை அழைத்துச் சென்று சித்திரைத் திருவிழா ஆரவாரத்தின் மத்தியில், இயற்கைச் சூழ்நிலையில் இசை விருந்தளித்துத் தன் காதலனுக்கு இன்பம் ஊட்ட முயல்கின்றாள். தானே யாழை மீட்டுச் சுருதி கூட்டி, அதைக் கோவலன் கையில் கொடுத்துப் "பாணி யாது" என்று கேட்கும் பாவனையில் ஊடியிருக்கும் அவன் உள்ளத்தை இசையின்பால் ஈர்க்க முயல்கின்றாள்.

ஆனால், பிற ஆடவரும் கண்டுகளிக்க நடனமாடும் மாதவியின்பால் ஊடல் கொண்ட கோவலன், கணவனைப் பிரிந்த காரணத்தால் அணிகளை இழந்து, அலங்காரங்களைத் துறந்து தன்னந்தனியே வருந்தும் கண்ணகி தேவியை நினைந்து கொள்கிறான். அவளை, கண்ணெதிரே காணும் காவிரியோடு ஒப்பிட்டுக் கற்பனை செய்து அவளுடைய கற்பின் சிறப்பையெல்லாம் ஊன் உருக, உணர்வு கலங்கிப் பாடுகிறான்.

கோவலன் யாழிசைத்துப் பாடியதை அவனோடு பல்லாண்டுகள் வாழும் பேறு பெற்ற மாதவி பல முறையும் கேட்டிருக்கிறாள். ஆனால், அன்று அவன் யாழிசைத்த திறமையும், மெய்ம்மறந்து பாடிய அருமையும், பாட்டிலே வெளியிட்ட காதற் சுவையும் இதற்கு முன்னர் மாதவி கண்டும் கேட்டும் அனுபவித்தும் அறியாதவை.

ஆகவே, கோவலன் வேறொருத்தியை நினைந்து மனமுருகிப் பாடியதாக எண்ணிக் கலங்கினாள் மாதவி.

அது காரணமாக, ஏற்கெனவே தன்னோடு ஊடல் கொண்டிருந்த கோவலனுடன் தானும் ஊடல் கொண்டாள்.

கோவலன் பாடி முடிந்ததும் அவன் கையிலுள்ள யாழை வாங்கித் தானும் வேறு ஒருவனைக் காதலித்தது போன்று பாவனை செய்து இசைக் கலையில் தனக்குள்ள திறமை முழுவதையும் வெளிப்படுத்தி யாழிசைத்துப் பாடினாள் மாதவி.

இப்படி, கோவலனும் மாதவியும் ஒருவரோடொருவர் முரண்பட்டுக் கொண்ட ஊடலால் அவர்களுடைய காதல் வாழ்வே முடிந்து விட்டது. இது ஊடலால் விளைந்த கேடு!

## மதுரைக் காண்டத்தில்

கொலைக்களக் காதையில், பாண்டியன் நெடுஞ்செழியனிடம் அவன் மனைவி கோப்பெருந் தேவியார் கொண்ட ஊடல்தான், கோவலன் கொலைக்குக் காரணமாகின்றது.

பாண்டிய மன்னன் அவையில் ஆடலிலும் பாடலிலும், அழகிலும் சிறந்த மகளிர் சிலர் நடனமாடுகின்றனர். அவர்களுடைய நடனத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்து, மெய்ம்மறந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறான் நாடாளும் வேந்தன். இதைக் கண்டு ஊடல் கொண்ட கோப்பெருந்தேவி, தான் தலைவலியால் வருந்துவதாகப் பொய்க்காரணம் கூறி அரசவை விட்டு அந்தப்புரம் சென்று விடுகின்றாள்.

*கூடன் மகளிர் ஆடற் றோற்றமும்*
*பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்*
*காவலன் உள்ளம் கவர்ந்தன என்றுதன்*
*ஊடல் உள்ளம் உள்கரந் தொளித்துத்*
*தலைநோய் வருத்தம் தன்மே லிட்டுக்*
*குலமுதற் றேவி கூடா தேக*

என்ற வரிகளில் அரசன்பால் அரசியார் கொண்ட ஊடலை அறிவிக்கின்ருர், இளங்கோவடிகள்.

அரசியாரின் ஊடலைத் தீர்க்கும் கவலையுள்ளத்துடன், பாண்டியன் நெடுஞ்செழியன், அவையினின்றும் நீங்கி, அந்தப்புரம் சென்று கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பொற்கொல்லன் அரசனை அணுகி, பாண்டி மாதேவியின் சிலம்பைக் கவர்ந்த கள்வனை அச்சிலம்போடு கண்டுபிடித்து விட்டதாகக் கூறுகிருன். களவுபோன சிலம்பு கிடைத்தது அறிந்தால், அரசியின் ஊடல் தீருமென்று உவகை கொண்டான் மதுரை மன்னன். அது காரணமாகக் காவல் வேந்தனுக்குரிய கடமை மறந்து, கோவலன்மீது பொற்கொல்லன் சுமத்திய குற்றத்தைப் பற்றித் தீர விசாரியாது,

*ஊர்காப் பாளரைக் கூவி "ஈங்கென்*
*தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு*
*கன்றிய கள்வன் கைய தாகில்*
*கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு"*

என்று ஏவல் கேட்ட கொலையாளிகளிடம் காவலன் கூறுகின்ருன். கோவலனும் கொலை செய்யப்படுகின்ருன்.

ஆம்; கோவலன் மாதவியைப் பிரிந்ததற்கு, அவள் அவன்பால் காட்டிய ஊடல்தான் காரணம். நீதி மன்னன் நெடுஞ்செழியன், குற்றமற்ற கோவலனைக் கொல்லச் செய்ததற்கும் பாண்டிமா தேவியின் ஊடல்தான் காரணம். இதுபோல், கோவலன் மாதவியின் இல்லம் சென்றதற்கும், அங்கு அவன் பல ஆண்டுகள் வாழ்ந்ததற்கும், கண்ணகியின் ஊடலோ, அல்லது ஊடல் இன்மையோ காரணமென்று இளங்கோவடிகள் கூருதது குறிப்பிடத்தக்கதாகும்.

## இளங்கோவே கூறுகின்றார்

சிலப்பதிகாரக் காப்பியம் தோன்றுவதற்கே மாதவியின் ஊடல்தான் காரணமென்பதை மாடலன் மூலம் வெளிப்படுத்துகின்றார் இளங்கோவடிகள். நீர்ப்படைக் காதையில், வடதிசை நோக்கிப் படையெடுத்து, கனக—விசயரைப் போரில் வென்று, கண்ணகித் தெய்வத்தின் சிலைக்காக இமயமலையில் கல்லெடுத்துத் தென்னாடு திரும்புகின்றான் செங்குட்டுவன். வழியில் கங்கையாற்றின் தென்கரையில் தங்கிய தருணம், மாடலன் என்னும் அந்தணன் மன்னன் செங்குட்டுவனைச் சந்திக்கிறான். சந்தித்தவன்,

*வாழ்க வெங்கோ மாதவி மடந்தை*
*கானற் பாணி கனக விசயர்தம்*
*முடித்தலை நெரித்தது முதுநீர் ஞாலம்*
*அடிப்படுத் தாண்ட அரசே வாழ்க!*

என, செங்குட்டுவனை வாழ்த்தியவனாய், கனக–விசயர் கண்ணகித் தெய்வத்தின் கல்லைச் சுமப்பதற்குக் கோவலனுடன் ஊடி மாதவி பாடிய "கானற் பாணி" தான் காரணம் என்று கூறுகின்றார்.

## முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால் கண்ணகியிட மிருந்து கோவலன் பிரிந்தமைக்குப் பத்தினித் தெய்வத்தின் ஊடலின்மையே காரணம் என்று கூறுவார் எண்ணம் தவறு என்பது தெளிவாக விளங்குகின்றது.

# இளங்கோவின் கடவுட் கொள்கை

சிலப்பதிகார ஆசிரியர், சேர நாட்டின் இளவரசராவார். அதனுல்தான் ''இளங்கோ'' என்ற பட்டப் பெயரே இயற் பெயராக வழங்கலாயிற்று.

## சைவரா, சைனரா?

இளங்கோவின் சமயம் யாது! இதைப் பற்றி அறிஞர் பலரும் பலவிதமான முரண்பட்ட கருத்துக் களே மக்களிடையே பரவவிட்டிருக்கின்றனர். சிலப் பதிகாரத்தில் வரும் சில செய்திகளைக் கொண்டு, ''இவரது சமயம் சைவமென்று தோன்றுகிறது'' என்று சிலப்பதிகாரப் பதிப்பாசிரியரான டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் கூறியிருக்கின்ருர். அவரே வேறு சில சான்றுகளைக் காட்டி, ''இவரது சமயம் சைனமென்று ஐயுறுவதற்கும் இடமுண்டு'' என்று தமது சந்தேகத்தையும் ஒளிவு மறைவின்றி வெளியிட் டிருக்கிருர்.

சிலப்பதிகார உரையாசிரியர்களுள் ஒருவரான நாவலர் வேங்கடசாமி நாட்டார்,

> ''செங்குட்டுவன் சிவபிரானை யன்றிப் பிறிதொரு தெய்வத்தையும் முடியால் வணங்காத சிவபக்தி மாண்புடையவ னென் பது பெறப்படுதலின், அவனது தம்பியாகிய இவரது சமயமும் சைவமே யாதல் வேண் டும்''

என்று அறுதியிட்டு உறுதிகூறி முடிக்கிருர்.

இன்னும் சில புலவர்கள், இளங்கோவடிகள் சைன சமயத்தைச் சார்ந்தவர் என்பதைத் தக்க நூற்சான்று களோடு உறுதிப்படுத்து கின்றனர்.

## வைணவரென்றே வாதம்

ஆய்ச்சியர் குரவையில், திருமாலைப் பற்றிய பாடல்களை, படிப்போர் நாவினிக்க, கேட்போர் செவி யினிக்கப் பாடியிருத்தலின் இளங்கோவடிகள் வைணவராகவே இருந்திருக்கக் கூடும் என நம்பு கின்றனர் வேறு சிலர்.

இவர்களுடைய கூற்றுக்கள் அனைத்தையும் கூர்ந்து நோக்குமிடத்து, இளங்கோவடிகள் தம் காலத்தில் நிலவிய பல்வேறு சமயங்களுள் குறிப் பிட்ட எந்த ஒரு சமயத்தையும் சாராத சமரச சன் மார்க்க நெறியினராக வாழ்ந்திருக்கக் கூடும் என்று ஐயுறுதற்கும் இடமிருக்கிறது.

## சமூகக் காப்பியம்

இளங்கோவடிகளின் சொந்தச் சமயம் எதுவா யினும், அவர் இயற்றிய சிலப்பதிகாரம் சர்வ சமயத் தினரும் போற்றத்தக்க சமூகக் காப்பியமாக விளங்கு கின்ற தென்பதில் ஐயமில்லை. இளங்கோவடிகள் சமய வாதிகளால் நம்பப்பட்டு வரும் பல்வேறு தெய்வங் களில் குறிப்பிட்ட எந்த ஒன்றையும் தமது வழிபடு தெய்வமாகக் கொண்டதாகத் தெரியவில்லை.

சிலப்பதிகாரம் முழுவதையும் ஆராய்ந்து பார்த்தால், இறுதியாகவுள்ள வரந்தரு காதையில்தான் தமது தெய்வ நம்பிக்கையை வெளியிடுகின்றார் ஆசிரியர். மற்றக் காதைகளில் சந்தர்ப்பத்திற்கேற்பப் பாத்திரங்களின் மூலமே பல்வேறு கடவுளர்களை அறிமுகப்படுத்துகின்றார்.

வரந்தரு காதையிலும், **"தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்"** என்ற இரண்டே வாசகங்களில் தமது தெய்வ நம்பிக்கையை உலகறிய ஓதுகின்றார்.

## தெய்வ நம்பிக்கை உண்டு

இளங்கோவுக்கு முற்காலத்தவராகக் கருதப்படும் திருவள்ளுவர், கடவுள் வாழ்த்தை முதலாகக் கொண்டே திருக்குறளை இயற்றியருளினார். ஆம், பத்துக் குறட்பாக்களால், கடவுள் உண்மையையும், அவரை வழிபடுவதால் ஏற்படும் நன்மையையும், வழிபடாதார் அடையக்கூடிய தீமையையும் தெளிவாகத் தெரிவிக்கின்றார்.

இளங்கோவுக்குப் பின் தோன்றிய திருத்தக்கதேவரும், "மூவா முதலா" என்று துவங்கி, கடவுள் வழிபாட்டை நிகழ்த்திய பின்னரே, **"சீவக சிந்தாமணி"** என்ற காப்பியத்தை இயற்றி முடித்திருக்கிறார்.

சிந்தாமணிக்குப் பின் தோன்றிய கம்ப ராமாயணத்திலும், **"உலகம் யாவையும்"** என்று தொடங்கும் முதற் பாடலில், இறைவழிபாடு நிகழ்த்திய பின்னரே, தமது மாபெரும் காப்பியத்தைச் செய்து முடிக்கிறார் கவியரசர் கம்பர்.

## புதுமையான நிகழ்ச்சி

தமக்கு முன்னும் பின்னும் தோன்றிய புலவர்களோடு மாறுபட்டவர்போல, கடவுள் வாழ்த்தே இல்லை

யென்ற நிலையில், திங்களையும் ஞாயிற்றையும் மழை யையும் போற்றிய வண்ணம் காப்பியம் செய்யத் துவக்கி யிருக்கிறார் இளங்கோ. இது புலவர் உலகில் நாம் காணும் ஒரு புதுமையான நிகழ்ச்சியாகத் தோன்றும்.

இளங்கோவடிகள் காலத்திலே வாழ்ந்தவராக, அவரது நெருங்கிய நண்பராகக் கருதப்படும் கூல வாணிகன் சாத்தனாரோ, "இறைவழிபாடு", "இயற்கை வழிபாடு" எதுவுமின்றி, எடுத்த எடுப்பி லேயே கதையை ஆரம்பிக்கும் புதுமையை அவர் இயற்றியுள்ள **"மணிமேகலை"**யில் காண்கிறோம். பௌத்த மதத்தினரான சாத்தனார், மதப்பிரசாரத்திற் கென்றே இயற்றப்பட்ட மணிமேகலையைக் கடவுள் வாழ்த்து இன்றியே துவக்கியிருப்பது அவரது மதக் கொள்கைக்கு ஏற்றதேயாம்.

ஆசிரியர் இளங்கோவடிகள் கடவுள் வழிபாட்டை முற்றிலும் புறக்கணிக்க வில்லை. புதுமாதிரியான வகையில், அறிஞர் உலகம் ஏற்றுக்கொள்ளத் தக்க முறையில் கடவுள் வழிபாட்டைக் கடைப் பிடித்திருக் கிறார்.

## புதுமுறை வழிபாடு

சிலப்பதிகார மங்கல வாழ்த்துக் காதையில் முதல் ஒன்பது வரிகளை ஆராயுமிடத்து, இளங்கோவடிகள் இயற்கைச் சக்திகளை வாழ்த்தி வணங்கி யிருப்பது புலனாகும்.

சிலப்பதிகாரக் காலத்தில், கண்ணால் காணமுடி யாத கடவுளின் பிரதிநிதியாகவே மண்ணாளும் மன்னன் மதிக்கப்பட்டான். அது காரணமாகவே "இறை" என்ற தூய தமிழ்ச்சொல், மன்னனையும் தெய்வத்தையும் ஒருசேரக் குறிக்கும் பொதுச் சொல் லாக வழங்குவதாயிற்று. திருவள்ளுவரும்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்

என்ற குறட்பாவில் செங்கோல் மன்னனையும் தெய்வத்தையும் ஒன்றுபடுத்திக் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வள்ளுவர் வகுத்த வழிப்படி, இளங்கோவடிகளும் கடவுளையும் மன்னனையும் பிரிக்கமுடியாத சக்திகளாகப் பிணைத்து வைத்துப் போற்றி யிருக்கின்றார்.

## இயற்கை வழிபாடு

திங்கள். ஞாயிறு, மழை ஆகிய மூன்றும் தெய்விக சக்திகளாகும். கடவுள் என்ற ஒன்று உண்டு என்பதற்கு அந்தச் சக்திகள் சான்றாக விளங்குகின்றன. கடவுள் நாம ரூப பேதங்களற்றவர். ஆனால், அவரால் படைக்கப்பட்டு, அவராலேயே இயக்குவிக்கப் படுகின்ற திங்கள், ஞாயிறு, மழை, நிலம் ஆகிய இயற்கைச் சக்திகளுக்கு நாம, ரூப, தன்மை பேதங்களுண்டு.

ஆகவே, வெறும் நம்பிக்கை அளவில் இருக்கின்ற—சமயவாதிகளால் கற்பிக்கப்பட்ட நாம, ரூப, பேதங்களின் மூலம் கடவுளை வழிபட விரும்பாத இளங்கோவடிகள், அந்தக் கடவுளால் படைக்கப்பட்ட—கண்களுக்குக் காட்சியளிக்கின்ற இயற்கைச் சக்திகளைப் போற்றிப் புகழ்ந்து காப்பியம் எழுதுவாராயினர்.

அப்படியே, மன்னனை நேரடியாக வழிபடாமல், அவனுடைய சக்திகளாக விளங்கும் வெண்குடை, ஆணைச் சக்கரம், வள்ளன்மை ஆகிய மூன்றையும் போற்றினர்.

## முறை புதிது; துறை பழையது

ஆம்; கடவுளின் பெருமைக்குச் சான்றாக விளங்கும் திங்கள்-ஞாயிறு-மழை ஆகியவற்றோடு, செங்

கோல் மன்னனுடைய சிறப்புக்குச் சான்ருக விளங்கும் வெண்குடை—சக்கரம்— தண்ணளி ஆகிய மூன்றையும் முறையே உவமித்துப் போற்றினுர் இளங்கோவடிகள். இதனுல் இளங்கோவடிகள் கடவுளேயும் மன்னனேயும் ஒரு சேர வாழ்த்தி வணங்கியிருப்பது புலனுகும். ஆம்; வணங்கிய முறை புதியது; துறை பழையது தான் !

## தெய்விகப் பாத்திரங்கள்

பெருங்காப்பியங்களில், கடவுளே அல்லது மண்ணுளும் காவலனேக் காப்பியத் தலேவனுகக் கொள்வது வழக்கம். அதையொட்டியே கம்பரும் இராமாயணத் தலேவனுகிய இராமனேத் திருமாலாகவும், சீதையைத் திருமகளாவும் கற்பனே செய்தார்.

இளங்கோவடிகள், சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலேவியும் தலேவனுமாகிய கண்ணகி — கோவலன் தம்பதிகளேத் தேவலோகத்தை விட்டிறங்கிப் பூலோகத்தில் அவதரித்த தெய்விகப் பாத்திரங்களாகக் கற்பனே செய்யவில்லே. செல்வச் சிறப்புடைய வணிகர் குடியில் பிறந்தவர்கள் என்றே கூறுகின்ருர். சிலப்பதிகாரம் சரித்திரச் சார்புடைய தென்பதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆயினும், கண்ணகி கோவலன் தம்பதிகளேத் தெய்விகச் சார்பிலிருந்து முற்றிலும் விலகியவர்களாக வைத்து கதை நடத்தவும் இளங்கோ விரும்பவில்லே போலும். ஆகவே, தமிழ்த் தெய்வமான முருகப் பெருமானேடு கோவலனேயும், வள்ளியம்மையோடு கண்ணகியையும் ஒப்பிட்டுப் பெருமைப் படுத்துகின்ருர்.

மங்கல வாழ்த்துக் காதையில் கோவலனேக் ‘‘கண்டேத்தும் செவ்வேள்’’ என்று புகார் நகரத்துப்

பெண்கள் போற்றிப் புகழ்ந்ததாகக் கூறுகின்றார். குன்றக் குரவையில் ''எம் குலத்து வள்ளிபோல்வீர்'' என்று குன்றக் குரவர்கள் கண்ணகியைப் பாராட்டிய தாகத் தகவல் தருகின்றார்.

## சமய பேதங் கடந்தவர்

இதுவரை கூறியவற்றால், இளங்கோவடிகள் சமயபேதங் கடந்த சமரசவாதி என்பதும், கண்ணால் காணக்கூடிய இயற்கைச் சக்திகளின் மூலமே கடவுளை வழிபட்டவர் என்பதும், தெய்வத்திற்குக் கற்பிக்கப் பட்ட நாம, ரூப, பேதங்களைத் தாம் பாராட்டாதவ ராயினும், நாட்டின் நடைமுறையைப் புலப்பப்படுத்த ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டுவவரி ஆகியவற்றை இயற்றினார் என்பதும் புலனாகும். மற்றும், சிலப்பதிகாரத் தலைவியையும் தலைவனையும் தெய்வ அவதாரங்களாகக் கூறாவிடினும், முருகன் வள்ளி என்ற தெய்வங்களுக்கு நிகரானவர்களாகக் கூறியதன் மூலம் காப்பிய மரபையும் கடைப்பிடித் தார் என்பதும் தெளிவாக உணரலாகும்.

# அறமா, அரச பதவியா?

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பது பழமொழி. அதுபோலப் 'பதவி மோகம் வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்ற புதுமொழியும் உலகில் பிறந்து விட்டது. பண்டைய நாளில் பதவி மோகம் மன்னர் குலத்தவரிடம்தான் இருந்தது. இந்நாளிலோ, மக்களில் படித்தோர் எல்லோரிடமும் அத் தொத்து நோய் பரவிவிட்டது. ஏன்?—படிக்காதவரைக் கூடப் பற்றிவிட்ட தென்றே கூறலாம்.

## விதிவிலக்கும் உண்டு

பதவிக்காக எதையும் செய்யலாம்; யாரோடும் சேரலாம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. மானம், ஒழுக்கம், நீதி, நேர்மை, இவையெல்லாம் போன இடம் தெரியாமல் போய்விட்டன. அங்கு இங்கு என்று இல்லாமல் உலகம் எங்கணுமே இதே நிலைதான். இதற்கு விதிவிலக்காக ஒவ்வொரு நாட்டிலும் சிற்சிலர் இருக்கலாம்.

அவர்களைப் போல, பழி—பாவங்களுக்கு அஞ்சி பதவி ஆசையை விடுத்த நல்லோர் பலரைப் பழைய காப்பியங்களிலும் காண முடிகின்றது. பதவி ஆசை யற்ற நல்லோர்க்கு இலக்கணம் கூறிய புறநானூற் றுப் புலவர் ஒருவர்,

*புகழெனின் உயிருங் கொடுக்குவர்*
*பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்*

என்று குறிப்பிடுகின்றார். சான்றோர்கள், புகழுக்காக உயிரையும் கொடுப்பார்களாம்! ஆனால், உலகமே தங்களுக்கு உரிமையாவதாயினும் பழியை மட்டும் ஏற்க மாட்டார்களாம்.

## தியாகம் தந்த பரிசு

சிலப்பதிகாரத்தை அருளிய இளங்கோவடிகள் பழிக்கு அஞ்சிச் சேர நாட்டின் அரச பதவியையே துறந்தார்.

சிலப்பதிகாரம் 'வரந்தரு காதை'யில்,

*சிந்தை செல்லாச் சேண் நெடுந் தூரத்து*
*அந்தமி லின்பத்(து) அரசாள் வேந்து*

என்று அரச பதவி துறந்த இளங்கோவடிகளின் தியாக புத்தியைப் புகழ்ந்துரைக்கின்றாள் தெய்வநிலை யடைந்த கண்ணகிதேவி. அவருடைய தியாகம் தந்த பரிசுதான் சிலப்பதிகாரக் காப்பியம்!

## இராமன்

தந்தையின் வாய்மையைக் காக்க, சிற்றன்னையின் கருத்துப்படி தனக்குரிய அரசசைத் தம்பிக்குத் தந்த ஒரு பெருமகனை இராமாயணக் காப்பியத்தில் பார்க் கிறோம். அவன் சீதையின் காதலனான இராமன் என் பதை அறியாதார் யார்?

இராமன் அயோத்தியின் மன்னனாக முடிசூட்டிக் கொள்ள இருந்த தருணத்தில், தயரதச் சக்கரவர்த்தி யின் விருப்பத்துக்கு மாருக, அவன் காட்டுக்குச் செல்ல வேண்டுமென்று கட்டளை இடுகின்ருள் கொடு மனத்துக் கைகேயி,

*ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள, நீ போய்த்*
*தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு*
*பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி*
*ஏழிரண் டாண்டில் வாஎன்(று) இயம்பினன் அரசன்......*

என்று இராமனிடம் கைகேயி கூறியபோது அவன் தந்தையை நிந்தித்தானு? சிற்றன்னையைச் சீறினு? அல்லது மூத்தவன் என்ற காரணத்தால் அரியாசனம் தனக்கே உரியதென்று வழக்காடினு? இல்லை! கைகேயியின் கட்டளையைக் கேட்டதும் இராமனுடைய திருமுகம்,

*"அப்பொழு(து) அலர்ந்த செந்தா*
*மரையினை வென்ற(து) அம்மா !"*

என்கின்ருர் கம்பர். சிற்றன்னையின் சொற்கேட்ட இராமன்,

*'என் பின்னவன் பெற்ற செல்வம்*
*அடியனேன் பெற்ற தன்ருே !'*

எனப் பேருவகை பொங்கப் பேசுகின்ருன்.

## பரதன்

பதவி வெறி பிடித்தலையும் இன்றைய அரசியல் உலகுக்கு இராமன் மட்டுமல்லாமல், பரதன்கூடச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்ருன்.

பாவம்! அன்னை கைகேயி அரும்பாடுபட்டுத் தனக்கு உரிமையாக்கிய அரச பதவியை ஏற்க மறுத் தான் பரதன். கைகேயி, கணவன் மாளக் காரண

மானுள்; அரசுக்குரிய மைந்தன் இராமனைக் காட்டுக்கு விரட்டினுள்; அந்தப் பழி—பாவங்களின் விளைவாகக் கிடைத்த அரசபதவியை ஏற்கும்படி மைந்தன் பரதனை வேண்டினுள். ஆனல், பழியெனின் உலகொடு பெறினும் கொள்ளாத பண்புடையவனுன பரதன், பதவி ஏற்க மறுக்கிருன். அண்ணன் போன திக்குநோக்கிச் சென்று, "திரும்பி வந்து அரச பாரத்தை ஏற்பீராக" என்று இராமனை அழைக்கின்ருன். பரதனின் இந்தச் சிறந்த குணத்தை அறிந்த குகன்,

*"தாயுரை கொண்டு தாதை*
*உதவிய தரணி தன்னைத்*
*தீவினை என்ன நீத்துச்*
*சிந்தனை முகத்தில் தேக்கிப்*
*போயினை என்ற போழ்து*
*புகழினேய்! தன்மை கண்டால்*
*ஆயிரம் இராமர்நின் கேழ்*
*ஆவரோ தெரியின் அம்மா"*

என்று உள்ளம் குழைந்து, உணர்ச்சி பொங்கி, வாயாரப் பாராட்டுகின்ருன். உண்மைதானே! தனக்கே உரிய பதவியைக்கூட ஒருவன் துறந்து விடுதல் எளிது. ஆனுல் உரிமையின்றி, முயற்சியின்றிச் சந்தர்ப்ப வசத்தால் சுலபமாகக் கிடைத்த ஒரு பெரும் பதவியை இழக்கத் துணிதல் அரிதினும் அரிது. அதனுல்தான், ஒரு பரதனுக்கு ஆயிரம் இராமரும் ஈடாகார் என்கிருன் குகன்.

## கும்பகர்ணன்

அரச பதவியைவிட மானமே பெரிதென் றெண்ணிய மற்ருெரு அரசியல் வாதியையும் இராமாயணத்தில் பார்க்கிருேம். அவன் வேறு யாருமல்லன்; இராவணன் தம்பி கும்பகர்ணன்தான்.

கும்பகர்ணன், இராமனேடு போர்புரியக் களம்புகு கின்ருன். மலைபோன்ற அவன் உருவைக் கண்டு திகைத்த இராமன், அவனுடைய ஆற்றல்களை யெல்லாம் விபீஷணன் சொல்லக் கேட்கின்ருன். பின்னர்க் கும்பகர்ணனைத் தனது பக்கத்தில் சேர்ந்து கொள்ளும்படித் தூண்ட அவனிடம் விபீஷணனை அனுப்புகின்ருன். தூது சென்ற விபீஷணன் எத்தனை யோ காரணங்களைச் சொல்லி, இராமனேடு சேர்ந்து கொள்ளும்படி கும்பகர்ணனை வேண்டுகின்ருன். அவன் மனம் மாறவில்லை. இறுதியாக.

*எனக்கவன் தந்தசெல்வத் திலங்கையும் அரசு மெல்லாம்*
*நினக்கு நான் தருவன் தந்துன் ஏவலின் எளிதில் நிற்பன்*

என்கின்ருன் விபீஷணன். ஆம்; இராவவணனைக் கொன்ற பிறகு, இராமன் தனக்கு அளிக்கவிருக்கும் இலங்காபுரியின் அரச பதவியைக் கும்பகர்ணனுக்குத் தந்து அவனுடைப் குறிப்பு வழிநின்று குற்றேவல் புரிவதாகக் கூறுகின்ருன் விபீஷணன். அது கேட்டுக் கும்பகர்ணன் கோபம் கொள்கின்ருன். பதவி ஆசை காட்டித் தன்னைப் பகைவன் பக்கம் இழுக்க முயலும் விபீஷணனின் போக்கு அவன் உள்ளத்தை வேதனைக் குள்ளாக்கி விட்டது.

*செம்பிட்டுச் செய்த விஞ்சித்*
*திருநகர்ச் செல்வந் தேறி*
*வம்பிட்ட தெரிய லென்முன்*
*உயிர்கொண்ட பகையை வாழ்த்தி*
*அம்பிட்டுத் துன்னங் கொண்ட*
*புண்ணுடை நெஞ்சோ டைய*
*கும்பிட்டு வாழ்கிலேன் யான்*
*கூற்றையும் ஆடல் கொண்டேன்*

என்று கூறித் தம்பி விபீஷணனுக்குத் தனது மன வேதனையைப் படம்பிடித்து காட்டுகின்றான் கும்பகர்ணன்.

"தங்கமயமான மதில்களை யுடைய அழகிய இலங்காபுரியின் அரச பதவியைச் சதமென்றெண்ணி, அதை எனக்குத் தந்ததற்காக, என் அண்ணனைக் கொன்ற பகைவனை இராமனை வாழ்த்திப் புண்பட்ட நெஞ்சோடு அவனைக் கும்பிட்டு வாழமாட்டேன்" என்கின்றான் கும்பகர்ணன்.

ஆம்; நிமித்திகன் கூற்றுப்படி தனக்கு வர விருந்த சிம்மாசனத்தை அண்ணனுக்குத் தந்து துறவு பூண்டார் இளங்கோ. அதனால், கவியரசராகி இன்றள வும் அழியாப் புகழுடன் விளங்குகின்றார்.

தனகே உரிய அரசைத் தம்பிக்கு வழங்கச் சம்ம தித்து மனைவியுடன் வனம் புகுந்து உயிர்களெல்லாம் தொழும் தெய்வமானான் இராமன்.

பழி, பாதகச் செயல் புரிந்து அன்னை கைகேயி தனக்குத் தேடித்தந்த அரசை மீண்டும் இராமனுக்கே உரிமையாக்கி, அண்ணனினும் பெரும் புகழ் பெற்றான் தம்பி பரதன்.

அண்ணனைக் கொல்ல அன்னியனுக்குத் துணை புரிந்து அதன் மூலம் அரச பதவி பெருவதை விரும்பா மல் அண்ணனுக்காகப் போரிட்டு உயிர் நீக்கும் பேறு பெற்றான் கும்பகர்ணன்.

பதவி வெறி பிடித்தலையும் அரசியல் உலகம் இந்தச் சான்றோர்களிடமிருந்து பாடம் கற்கும் நாள் எந்நாளோ!

# காவிரிப்பூம்பட்டினம்

'**ப**ட்டினம்' என்ற சொல், சங்ககாலத் தமிழகத்தில், கடற்கரை யோரமாக இருந்துவந்த துறைமுக நகரங்களேயே குறித்தது. பட்டினம் என்ற சிறப்புப் பெயரோடு பிணேந்துள்ள நாகை, காயல் ஆகியவையும் துறைமுக நகரங்களாகவே இருப்பதும் கவனிக்கத் தக்கது. தமிழ் நாட்டின்—ஏன்? இந்தியப் பெரு நிலத்தின் தலையாய துறைமுகப் பிரதேசமாக விளங்கிய புகார் நகரத்தையே 'பட்டினம்' என்றனர் பண்டைத் தமிழர்கள். புகார், வெறும் கடற்கரை நகரம் மட்டுமன்று. கடலொடு காவிரியாறு கலக்கும் பெருமை வாய்ந்ததுமாகும். அதனுல்தான், 'காவிரிப் பூம் பட்டினம்' என்ற மற்ருெரு பெயரும் வழங்கலாயிற்று.

புகாரின் செல்வச் சிறப்பை வருணிக்கும் நூலுக்குப் 'பட்டினப் பாலே' எனப் பெயர் வைத்தார் கடியலூர் உருத்திரங் கண்ணனுர். ஆம்; பண்டை நாளில் பட்டினம் என்ருலே, காவிரிப்பூம் பட்டினத்தைத்தான் குறிக்கும்.

இந்தப் 'பட்டினம்' என்றே சொல்லே நாளடைவில் 'பட்டிணம்' என்ருகி, இப்போது 'பட்டணம்' என்று திரிந்து வழங்குகிறது.

## இருவகைத் தலைநகரங்கள்

சேர, சோழ, பாண்டியமன்னர்கள் செங்கோலோச்சிய சிலப்பதிகார காலத்தில், ஒவ்வொரு அரசருடைய நாட்டிலும் இருவகைத் தலைநகரங்கள் இருந்துவந்தன. அவற்றில் ஒன்று, கடற்கரையிலுள்ள துறைமுகப் பட்டினம்; மற்றொன்று, உள் நாட்டில் அரசர் வாழும் நகரம். அநேகமாக அரசர் வாழ்ந்த உள்நாட்டு நகரங்கள் ஆற்றோரங்களிலேயே அமைந்திருந்தன. குறிப்பாக, பாண்டிய நாட்டின் கடற்கரைப் பிரதேசமான **கொற்கை,** துறைமுகப் பட்டினமாகவும். ஆற்றங்கரை (வைகை)ப் பிரதேசமான **மதுரை,** அரசர் வாழும் நகராகவும் இருந்து வந்தன. சோழநாட்டிலும் கடற்கரைப் பகுதியான **புகார்,** துறைமுகப்பட்டினமாகவும், உள்நாட்டுப் பிரதேசமான **துறையூர்,** அரசர் வாழும் நகரமாகவும் இருந்து வந்தன. அதுபோலவே, சேர நாட்டில் மேலைக் கடற்கரையில் உள்ள **முசிரி,** துறைமுகப் பட்டினமாகவும், உள்நாட்டில் பொருநை யாற்றின் கரையிலிருந்த **வஞ்சி,** அரசர் வாழும் நகரமாகவும் இருந்து வந்தன. 'முசிரி' என்னும் துறைமுகப் பட்டினம், காவிரிப்பூம் பட்டினத்தைப் போன்றே **சுள்ளி** என்னும் பேரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் அமைந்திருந்தது.

## சமயச் சார்பில்...

பல்லவர் ஆட்சியிலும், **மாமல்லபுரம்** (மகாபலிபுரம்) துறைமுகப் பட்டினமாகவும்; **காஞ்சிபுரம்,** அரசர் வாழும் உள்நாட்டு நகரமாகவும் இருந்து வந்தன. பிற்காலத்தில் மேலே சொன்ன கடலோரத் துறைமுகப் பட்டினங்களும் ஆற்றோர (அரசர் தலை நகரம்) நகரங்களும் அன்றி, உள் நாட்டில் பல உப நகரங்களும் தோன்றலாயின. இந்த நகரங்கள் மிகப் பெரும்பாலும் சமயச் சார்புடையவை; ஸ்தல புராணங்களால்

வளர்ச்சி பெற்றவை. சிதம்பரம், திருவாரூர் போன்ற உப நகரங்களே இதற்குச் சான்ருகக் கூறலாம்.

## தொழில் வழி

பத்தொன்பதாம் நூற்ருண்டுக்குப் பிறகு இன்ெருரு புதுவகைப் பட்டினங்கள் தோன்றலாயின. அவை யந்திர சாதனங்களுடன் கூடிய நவீனத் தொழில் நகரங்களாகும். இதற்கு எடுத்துக்காட்டாகப் பஞ்சாலைத் தொழில் வளர்ந்துள்ள **கோவை** நகரையே கூறலாம்.

இப்போது, தமிழ் நாட்டில் உள்ள நகரங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். 1. துறைமுக நகரங்கள். 2. சேர, சோழ, பாண்டியர்களால் படைக்கப்பட்ட அரசியல் நகரங்கள். 3. சமய வழிப்பட்ட உப நகரங்கள். 4. யந்திர சாதனங்களைக் கொண்ட தொழில் நகரங்கள்.

இவற்றில் முதல் இருவகை நகரங்களும், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க காலத்தில் தோன்றிச் சிறப்புப் பெற்றவை. அவற்றில் சில அழிந்தே போயின.

மூன்ருவதாகச் சொல்லப்பட்ட உபநகரங்கள் புராண காலத்தில் தோன்றியவை. அவை இன்றளவும் நின்று நிலைபெற்றிருக்கின்றன.

## பூம்புகார்

வீரக் கண்ணகி வாழ்ந்த காலத்தில் மிக்க சிறப்புப் பெற்றிருந்தது துறைமுக நகரமாகிய காவிரிப்பூம்பட்டினம். அதன் செல்வச் சிறப்பை வருணிக்குமிடத்தில்,

> முழங்கு கடல்ஞாலம் முழுவதும் வரினும்
> வழங்கத் தவாஅ வளத்த தாகி

“கடல் சூழ்ந்த உலகிலுள்ள மக்களெல்லாம் வறியராகி, வாழ்விழந்து புகார் நகரில் தஞ்சம் புகுந்தாலும்,

அவ்வளவு பேரையும் வரவேற்று வாழ்வளித்த பின்னரும், வறுமையுறாத நகரம்'' எனக் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

சங்க காலத்தில், காவிரிப்பூம்பட்டினம் உலக நாடுகளோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது. இன்று பம்பாய் எப்படிச் சர்வதேசத் துறைமுகமாக விளங்குகிறதோ, அதுபோன்று எனலாம்.

புகார் நகரில் கடல் வழியாகவும், நில வழியாகவும் வந்த உலகத்துப் பொருள்களெல்லாம் ஒருங்கே திரண்டு குவிந்திருந்தனவாம். அதை,

*நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்*
*காலின் வந்த கருங்கறி மூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்*
*கங்கை வாரியும் காவேரிப் பயனும்*
*ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்*

என வரும் 'பட்டினப் பாலை' வரிகளால் அறிகிறோம்.

மற்றும் அரேபியா, ரோம் முதலிய வெளிநாடுகளிலிருந்து வந்த வணிகர்கள், காவிரிப்பூம் பட்டினத்தில் கண்கவரும் மாளிகைகளைக் கட்டிக்கொண்டு, உள்நாட்டுத் தமிழர்களோடு உறவு கொண்டு வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் பல்வேறு நாட்டினர்மட்டுமல்லர்; பல்வேறு மொழியினரும் ஆவர். இதற்கு,

*மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்தும்*
*புலம்பெயர் மாக்கள் கலந்து இனிதுறையும்*
*முட்டாச் சிறப்பின் பட்டினம்......*

என்ற 'பட்டினப் பாலை' வரிகள் சான்று பகர்கின்றன. இன்றுகூடச் சென்னை - பம்பாய் - கல்கத்தா போன்ற துறைமுக நகரங்களில் பல்வேறு மொழிகளைப் பேசும்

வேவ்வேறு இனத்தவர் குடியேறி வாழ்வதைக் காண் கிறோ மல்லவா !

## வாணிபத்தில் வாய்மை

பொய்யும் வழுவும் புகாமல் வாணிபம் நடத்த முடியாது என்று வாது பேசுகின்றனர், வாய்மை துறந்த சிலர். சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் அக விலை ஏற்றம், பதுக்கல் என்ற அநி யாயச் செயல்கள் அன்றாடக் காட்சிகளாகி விட்டன. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு துறை முகப் பட்டினமாக விளங்கிய பூம்புகாரில்,

*வடுஅஞ்சி வாய்மொழிந்து*
*தமவும் பிறவும் ஒப்ப நாடிக்*
*கொள்வதூஉம் மிகைகொளாது*
*கொடுப்பதூஉம் குறைகொடாது*
*பல்பண்டம் பகர்ந்துவீசும்*
*நடுவுநின்ற நன்னெஞ்சினோர்*

"வணிகர்கள் என்போர், தம்பால் பண்டம் வாங்க வருவோரிடம், குற்றமுடைய சொற்களைக் கூறார்; தாம் கொள்ளும் பண்டங்களை மிகையாகக் கொள் வதும், கொடுக்கும் பண்டங்களைக் குறைவாகக் கொடுப்பதும் செய்யார்; பூம்புகார் வணிகர்கள், நடுவு நிலைமையுடைய நன்னெஞ்சினர்'' என்கிறது பட்டினப் பாலை. பண்டத்தைப் பணத்துக்கு விற்காமல், ஒரு பண்டத்தைக் கொடுத்து இன்னொரு பண்டத்தை வாங்கிக் கொண்ட பழங்கால வாணிபத்தின் பண் பாடு இது.

ஆம்; இன்றுங்கூட, நாகை, காயல், மதுரை போன்ற பழங்காலப் பட்டினங்களைக் காண்கிறோம். மற்றும் கோவை, திருப்பூர் போன்ற நவீன ஆலைத் தொழிலை ஒட்டித் தோன்றிய புதுப்புது நகரங்களை

யும் பார்க்கிறோம். ஆனால், அங்கெல்லாம் பழைய பண் பாடுகளைக் காண முடியவில்லை.

சிலப்பதிகாரக் கண்ணகி பிறந்த, கலையரசி மாதவி தோன்றிய, இவ்விருவருடைய காதலனை கோவலன் வாழ்ந்த, பத்தினிப் பெண்டிர் எழுவரை ஈன்றெடுத்த அந்தக் காவிரிப்பூம்பட்டினம் பிற்காலத்தில் கடலால் விழுங்கப்பட்டு விட்டது.

போக வாழ்வும் புகழும் பெற்ற புகார்ப்பட்டினம், அழிவுறாது; பொதிகைமலையும் இமயமலையும் போல, புகார் நகரிலும் முடித்த கேள்வி முழுதுணர்ந்த ஞானிகள் வாழ்வதால், அப்பட்டினம் அழியாது என்று நம்பினர் ஆசிரியர். அவர் நம்பியதற்கு மாறாக, புகார் அழிந்துவிட்டது!

# இரு ஐயப்பாடுகள்

ஓர் இலக்கியத்திலுள்ள சிறப்புகளைக் கூறுவது போலவே, குறைகளையும் எடுத்துக் கூறலாம். அதில் பிழையொன்றுமில்லை. ஆனால், அந்த இலக்கியத்தின் சிறப்பைக் குறைப்பதாக இருக்கக்கூடாது. கலையுணர்வும், நடுவு நிலைமையோடு கூடிய ஆராய்ச்சி அறிவும் படைத்த அறிஞர்கள் இத்தகைய தவறை ஒரு பொழுதும் செய்ய மாட்டார்கள். அவர்கள் இலக்கியத்தில் குறை காண்பது, அதைப் பற்றிய உண்மையை அறியவேண்டுமென்ற ஆவலினாலேயே யாகும்.

## இரண்டு 'குறை'கள்

சிலப்பதிகாரத்தைப்பற்றி இரண்டு குறைகள் கூறப்படுகின்றன. ஒன்று, கண்ணகி தனது இடது முலையைத் திருகி எறிந்து மதுரையைக் கொளுத்தியதைப் பற்றியது. மற்றொன்று, கண்ணகி, கோவலனுடன் விண்ணகம் சென்றதைப் பற்றியது. முதல் 'குறை'யை ஆராய்வோம்: மதுரைக் காண்டத்திலுள்ள வஞ்சினமாலையில்,

*இடமுலை கையால் திருகி மதுரை*
*வலமுறை மும்முறை வாரா வலமந்து*
*மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து*
*விட்டாள் எறிந்தாள் விளங்கிழையாள்...*
*பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்*
*மூத்தோர் குழவி யெனும்இவரைக் கைவிட்டுத்*
*தீத்திறத்தோர் பக்கமே சேர்களன்று, காய்த்திய*
*பொற்றொடி ஏவப் புகைஅழல் மண்டிற்றே*
*நற்றேரான் கூடல் நகர்...*

—என்ற வரிகளில், கடுஞ்சினம் கொண்ட கண்ணகி, தனது வலக்கையால் இடது முலையைத் திருகி எடுத்த தாகவும், ஆற்றொணாத் துயரத்தால் ஆத்திரங்கொண் டவள் நான்மாடக் கூடலை மும்முறை வலம்வந்த பின். "நல்லோர் வாழ்க! தீயோர் அழிக!" என்று கோஷ மிட்டு, முலையை வீசி எறிந்து மதுரையைக் கொளுத் தியதாகவும் கூறுகிறார் இளங்கோ.

## வெறும் கற்பனையா?

இது, கவிஞரின் 'கற்பனை' என்று சுலபமாகக் கூறி, ஆட்சேபிப்பவர்களைத் திருப்திப்படுத்தி விட லாம். ஆனால், இந்தச் சம்பவம் உண்மை நிகழ்ச்சியோ என்று ஐயுறுவதற்கான சான்றுகள் பல இருக்கின்றன.

சிலப்பதிகாரத்தில், பல்வேறு இடங்களில் கவிஞ னின் கற்பனைத் திறத்தைக் காண்கிறோம். ஆனால் அவை மின்வெட்டுப் போன்று தோன்றிய கணத்தி லேயே மறைந்து விடுகின்றன. கதை முழுவதிலும் தொடர்ந்து வருவதில்லை. சான்றாக, வெட்டுண்ட கோவலன், கண்ணகி தொட்ட அளவிலேயே உயிர் பெற்றதை ஒரே இடத்தில் கூறி விட்டுவிடுகின்றார் கவிஞர். அந்த அற்புதத்தைச் செய்த கற்பின் திறத் துக்காக, கண்ணகி பாராட்டப்படவுமில்லை. மற்றும்,

அந்த நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரத்திலிருந்து அகற்றி விட்டாலும் கதையின் கட்டுக்கோப்புச் சரியவில்லை; காப்பியத்தின் சிறப்பும் குறைந்து விடவில்லை. ஆகவே, அதைக் கற்பனை என்று துணிந்து கூறலாம். மற்றக் கற்பனைகளும் இப்படித்தான்.

மதுரையை எரித்த சம்பவத்தை மட்டும் சிலப்பதிகாரத்தின் பல்வேறு காதைகளில் தொடர்ந்து நினைவூட்டுகின்றார் இளங்கோ. அந்த அற்புதத்தைச் செய்த கற்பின் திறத்துக்காகக் கண்ணகி பல்வேறிடங்களில் பலராலும் பாராட்டப்படுகின்றாள்.

> *"ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினி"*
> *"கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்தோய்"*
> *"முத்தார மார்பின் முலைமுகம் திருகி*
> *நிலைகெழு கூடல் நீள்எரி யூட்டிய*
> *பலர்புகழ் பத்தினி..."*

எனப் பதிகத்திலும், "முதிரா முலை குறைத்தாள்" என அழற்படு காதையிலும், "முதிரா முலைப்பூசல்"– "தடமுலைப் பூசலாட்டி" என வாழ்த்துக் காதையிலும், "முலை முகந்திருகிய மூவாமேனிப் பத்தினி" என வரந்தரு காதையிலும் கண்ணகி மதுரையை எரித்த சம்பவத்தை நினைவூட்டுகின்றார் இளங்கோவடிகள்.

மற்றும், "கொங்கைப் பூசல் கொடியதோ, அன்று" என அழற்படு காதையில் மதுரை மகளிரும்,

> *"முலையினால் மாமதுரை கோளிழைத்தாள்"*
> *"கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்*
> *தீமுறை செய்தாள்......"*
> *"ஒரு முலை இழந்த நங்கை"*

என்றெல்லாம், "குன்றக் குரவை"யில் மலைக் குறவர்களும்,

"ஒருமுலை குறைத்த திருமா பத்தினி"

என, 'நீர்ப்படைக் காதை'யில் மாடல மறையோனும்

"மதுரை மூதூர் மாநகர் கேடுறக்
கொதியழல் சீற்றம் கொங்கையின் விளைத்து"

என, 'நடுகற் காதை'யில் சேர மன்னன் செங்குட்டுவனும்,

"முதிரா முலைமுகத்து எழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டனள்"

எனப் பதிகத்தில் புலவர் சாத்தனாரும் கூடற்பதியைக் கொளுத்திய சம்பவத்தைக் குறிப்பிடுகின்றனர்.

பின்னும் வாழ்த்துக் காதையில், ''மொய்குழன் மங்கை முலைப்பூசல்'' எனக் கண்ணகியின் தோழியான தேவந்தியும்,

"கொங்கையால் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும்......"

என்று வஞ்சி நகரத்து மகளிரும், தென்னவன் கூடலை தீக்கிரையாக்கிய கற்பின் திறத்துக்காகக் கண்ணகியை வாழ்த்துகின்றனர்.

## நெஞ்சத் தீ!

கணவனை இழந்ததால் உண்டான காதல் வெப்பமும், அரசனுடைய கொடுங்கோலை எண்ணுந்தோறும் கண்ணகியின் இதயத்தே பொங்கியெழுந்த ஆத்திரமும் முலைப் பூசலுக்குக் காரணங்களாக அமைந்தன.

இதை மெய்ப்படுத்தும் சான்றுகள் வேறு பல இலக்கியங்களிலும் காணக் கிடக்கின்றன. புறநானூறு 25-ம் பாடலில் கல்லாடனூர் என்னும் புலவர்,

போர் முனையில் கணவன் இறந்துபட்ட செய்தியைக் கேட்ட மகளிர்,

"முலைபொலி ஆகம் உருப்ப நூறி"

அழுததாகக் கூறுகிருர். அதாவது, முலை பொலிந்த மார்பம் அழல் பற்றும்படி தம் கைகளால் அறைந்து கொண்டு அழுதார்களாம்.

புறநானூறும் சிலப்பதிகாரமும் கூறும் இந்தச் செய்தி இன்று நாம் கண்ணெதிரே கண்டுவரும் காட்சியாகவும் இருந்து வருகின்றது. கணவனை இழந்த விதவையும், அவளோடு சேர்ந்து இழவு கொண்டாடும் பெண்களும் தங்கள் இரு கைகளாலும் கொங்கைகள் மேல் மோதி மோதி அழல் எழ அறைந்து கொண்டு அழுவதை இழவு இல்லங்களில் காண்கிறோம். எனவே, கண்ணகி விளைத்த முலைப் பூசலை ஆராய்வோமாயின், அது உண்மை என்பதற்கான சான்றுகளே நமக்கு அதிகம் கிடைக்கின்றன. ஆனால், திருகி எறியப்பட்ட முலையினாலேயே மதுரை தீப்பற்றி எரிந்துவிட்ட தென்பது முடிந்த கொள்கையல்ல. அதுபோலவே, பொய் எனப் புறக்கணிக்கக் கூடியது மல்ல; ஆராய்தற்குரியதே யாம்.

## விமானக் கற்பனை

இரண்டாவது 'குறை,' கண்ணகிதேவி விமானத்தில் விண்ணக மடைந்ததைப் பற்றியது.

கண்ணகி மதுரையை எரித்த பின்னர்,

"கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு"

என்று கல்லுங் கரையக் கதறியழுது மதுரையை விட்டுப் பெயர்ந்தாள். பின்னர், பதினான்கு நாட்கள் உணவும் உறக்கமுமின்றிக் காடு மலைகளை யெல்லாங்

கடந்து சேர நாடடைந்தாள். திருச்செங்குன்றம் என்னும் மலைமீது ஏறி நின்றாள். அந்நிலையில்,

"காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் தனைக்கண்டித் திறங்கேட்பல் யான்..."

என்று, தான் முன்னர்க் கோவலன் வெட்டுண்டு கிடந்த கொலைக்களத்தில் கூறிய சூளுரை அவளது நினைவுக்கு வருகின்றது. கொண்ட சபதப்படி தீவேந்தனைக் கண்டு, தன் கணவன் குற்றமற்றவன் என்ற திறம் தெளிவித்தாள். அரசை அழித்து, அணி மதுரையை எரித்துச் சினம் தணிந்தாள். ஆம், மறக் கற்பு முடிந்தது. அதன்பின்னர், அறக் கற்பு வழி தன்னுயிர் கொண்டு கணவனுயிர் தேடிச் செல்ல விருப்பமுற்று, திருச்செங்குன்றத்தின் மீது ஏறி மலைவேங்கை மரத்தின்கீழ் மண்ணுலக வாழ்வை முடித்துக் கொண்டாள்.

## இறையருளில் முடிக்க

இதுதான் கண்ணகியின் இறுதி முடிவாக இருக்க வேண்டும். ஆனால், இறை நம்பிக்கையுடைய இளங்கோவடிகள், கதையைத் துன்பியலில் முடிக்க விரும்பவில்லை. அறவழி நின்று அல்லல் படுவோருக்கு ஆண்டவன் துணைபுரிவான் என்பதை வலியுறுத்தக் கண்ணகியின் இறுதி முடிவை,

"அமரர்க் கரசன் தமர் வந்து ஏத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வான வூர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழல் கண்ணகி......"

என்று, கொங்கைப் பூசல் விளைத்தபின், குன்றத்தின் மீது நின்ற கண்ணகியை, கோவலனோடு 'அமரர்

குழாமும் சேர்ந்துவந்து விமானத்தில் அமர்த்தி விண்ணகம் அழைத்துச் சென்றதாகக் கற்பனை செய்து, துன்ப உலகிலிருந்து விடுபட்ட கண்ணகியை இன்ப உலகத்தில் சேர்க்கிறார் இளங்கோ.

## புலவர் மரபு

இளங்கோ மட்டுமல்லாமல், புலவர் பெருமக்கள் பலரும் இந்த முறையையே கையாண்டுள்ளனர். அநீதியை எதிர்த்து அல்லல்பட்டு ஆவிநீத்த மக்களெல்லாம் ஆண்டவன் அருளுக்குப் பாத்திரமாகி, அமர வாழ்வு எய்தினர் என்று கூறுவதையே கொள்கையாகக் கொண்டிருந்தனர்.

## காலக் கண்ணோட்டம், நம்பிக்கை

எனவே, கண்ணகியின் முடிவு பற்றி இளங்கோ வடிகள் செய்த கற்பனை, காப்பியத்தை அழகு செய்கிறதென்பதில் ஐயமில்லை. எந்தக் காப்பியமாயினும் சரி; அதில் ஐயத்திற்கிடமான விஷயங்களைப் பற்றி ஆராயும்போது, காப்பியம் செய்யப்பட்ட காலம்—காப்பியத்தைச் செய்த கவிஞரின் கண்ணோட்டம், அவர் காலத்தில் வாழ்ந்த மக்களின் நம்பிக்கை ஆகியவற்றோடு, நமது அறிவைப் பொருத்திப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். அப்போதுகூட, ஆராய்வதற்கான ஆதாரங்களாகக் கொள்ள வேண்டுமே யன்றி, அவைதான் உண்மை என்று அறுதியிட்டு உறுதிகூறக் கூடாது. அதைவிட முக்கியமானது கலை உணர்வோடு காவியங்களை ஆராய்வதாகும்.

★